சிவதொண்டன் வெளியீடு—9.

சமயங்களின்

# தாயனைய சிவநெறி

2475



சிவதொண்டன் நிலையம்
யாழ்ப்பாணம்.

சிவதெ

சிவதொண்டன் வெளியீடு—9.

சமயங்களின்

# தாயனைய சிவநெறி

★
★★

பராபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள்
12- ஆம் நாள்
27—11—66.

பதிப்புரிமை

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1—60

உ

சிவமயம்

# பதிப்புரை

தமிழ்கூறும் நல்லுலகத்திலே மக்களிடையே வரலாற்றுக் காலத்துக்கும் முன்பிருந்தே வழிவழியாக வழங்கிவரும் சமயம் சிவ நெறியாகும். இஃது ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புக்கொண்ட ஒரு முடிபாகும். முழுமுதற் பொருளாகிய கடவுளை இறைவன் என்று ஏனையமக்கள் சொல்வாராக, தமிழ்மக்கள் சிவன் என்னுஞ் செம்மொழியாற் கூறுவாராயினர். தென்னாட்டுக்கும் சைவத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்புபற்றியே மணிவாசகப்பெருமானும் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று கூறியருளினார்.

சிவனை வழிபடும் நெறி (சமயம்) சைவம். இது மிகப் பழைய நெறியாகும். பௌத்த நூலாகிய மணிமேகலை முதலிய நூல்களும் இதனைச் சைவம் என்ற பெயராலேயே குறிப்பிடுதலைக் காண்கின்றோம். ஏனைய சமயங்கள் ஏதோ ஒருகாலத்தில் தொடங்கின என்று காலங் குறிப்பிடக்கூடியவையாய் அமைய, சைவத்தின் தொன்மையோ அளவிடுதற்கரிய பழமைவாய்ந்ததாக விளங்குகின்றது. வேதகாலத்திலிருந்தே நிலைபெற்ற சைவத்தின் அடிப்படைக் கருத்துகள் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் தேவாரம் திருவாசகம் முதலிய சைவத்திருமுறைகளிலும், வடமொழி வைதிக நூல்களிலும், சிவபுராணங்களிலும் பிறவற்றிலும் ஆங்காங்குச் சிதறிக்கிடக்கின்றன. பிற்காலத்தில் இவற்றை வடித்தெடுத்து இறைவன் உண்ணின் றுணர்த்த மெய்கண்ட சிவாசாரியர் இனிய எளிய பன்னிரண்டு நூற்பாக்களினால் அமைத்துதவினர். இதுவே சிவஞானபோதம் என்னும் சீரிய சித்தாந்தநூலாம். இதற்குச் செய்யுளில் விரிவுரை எழுதியதுபோன்று அருணந்தி சிவாசாரியர் சிவஞானசித்தியாரைச் செய்துதந்தருளினார். அழகிய விருத்தப்பாவினால் யாக்கப்பெற்ற இந்நூல்,

> "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
> ஓர்விருத்தப் பாதிபோ தும்".

என்று போற்றப்படுவதாயிற்று. சைவசித்தாந்தசாத்திரங்கள் பதினான்கும் பிறவும் சித்தாந்த சைவத்தைத் தெளிவுபடுத்தின. "வேதம் பசு; அதன் பால் மெய்யாகமம்; நால்வர் ஓதுந்தமிழ் அதன் உள்

ளூறும் நெய்'' என்று கூறிய பெரியோர் ''சிவஞானபோதம் அந் நெய்யின் உறுசுவை'' என்று அணிபெறச் சொல்வாராயினர்.

''வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்'' என்று உமாபதி சிவமும், ''ஓரும் வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது'' என்று குமரகுருபரசுவாமிகளும் போற்றிய சைவசித்தாந்தநெறி மிக விரிந்து பரந்த கொள்கையை யுடையது. இது மற்றெல்லாச் சமயங்களையும் உரிய உரிய இடத்தில் அமைத்துத் தன்னுள் அடக்கி, அச்சமயங்களுக் கெல்லாந் தாயனைய தன்மையோடு விளங்குகின்றது.

இத்தகைய சைவத்தின் இயல்பையுஞ் சிறப்பையும் ''**சமயங்களின் தாயனைய சிவநெறி**'' என்னும் தலைப்பில் எம் சிவதொண்டன் இதழில் தொடர்ச்சியாக ஆராய்ந்தெழுத முன்வந்தார்கள் ஏன் கெழுதகை நண்பர் திரு. ச. தியாகராஜா அவர்கள். அக்கட்டுரைகளிற் பல அரிய பொருள்களை விளக்கி எளியநடையில் எழுதிவந்தார்கள். அக்கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக, சிவதொண்டன் வெளியீடாக, இப்போது வெளியிடுகின்றோம்.

சைவஒழுக்கத்திலும் அறிவிலுஞ் சிறந்து விளங்குந் திரு. தியாகராஜா அவர்கள் இந்நூலிற் பல நுண்பொருள்களைப் பள்ளிச் சிறுர்களும் படித்தறியக்கூடிய விதமாக மிக எளிய நடையில் விளக்கி யிருக்கிறார்கள்.

*''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்*
*நுண்பொருள் காண்ப தறிவு''*

என்பதன்றோ வள்ளுவர் வாய்மொழி. இந்நூலிற் சிறப்பாக இக் காலத்தில் வழங்கும் ஏனைச் சமயங்களுக்கும் சிவநெறிக்குமிடையே யுள்ள ஒற்றுமை வேற்றுமைகள், முப்பொருள்விளக்கம், இறைவனின் சொரூபலக்கணச் சிறப்பு. திருவைந்தெழுத்தின் விளக்கம். குருவின் இன்றியமையாமை, சைவசாதனங்கள், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்றிவற்றின் தெளிவு, வேதாந்த சித்தாந்த சமரசங் காணும்வழி ஆகிய பலபொருள்களை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். இந்நூல் சைவமக்களனைவராலும் படித்தறியப்படவேண்டிய நூலாகும். பள்ளிகளிலும் சமயங் கற்கும் மாணவர்களுக்கு இது பெரிதும் உதவுந் தன்மையது.

அஞ்சற்பகுதியிற் பல்லாண்டுகளாகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு. தியாகராஜா அவர்கள் ஒரு பெரிய அன்பர். நல்ல

சீலங்களமைந்தவர், எங்கள் சுவாமிகளிடத்துப் பெரும்பத்தி யுடையவர். இந்துசாதன உதவிப் பத்திராதிபராகவுஞ் சில ஆண்டுகள் பணியாற்றியவர். இவர்களது நற்பணியை நாம் பாராட்டுகின்றேம், இவர்கள் மேலும் இத்தகைய நூல்களை எழுதிச் சைவப்பணிபுரிய அருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழுத்துகின்றேம்.

இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய ஸ்ரீலங்கா அச்சகத்தார்க்கும் எம்நன்றி யுரியதாகுக.

இந்நூல் சைவமக்களின் நல்லாதரவைப் பெறுமாக. வாழ்க சிவநெறி.

இங்ஙனம்,
**க. கி. நடராஜன்.**

*சிவதொண்டன் நிலையம்,*
*22-11-66.*

உ

சிவமயம்

# முகவுரை

உயிர்வாழ்க்கையின் உண்மைத் தன்மையை உள்ளவாறுணர்த்தும் தனிப்பெருமை வாய்ந்தது சிவநெறி அல்லது சைவ சமயம். சிவநெறி நூற்பொருளை ஒருவாறு எளிதில் அறிய உதவுமாறு அருட்குறிப்பின்படி உருவாகியது **"சமயங்களின் தாயனைய சிவநெறி"** என்னும் இந்நூல்.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சைவசித்தாந்த நூல்களின் பொருள்கள் இந்நூற்பொருளமைவுக்கு வேண்டியவாறு எடுத்தாளப்பெற்றுள்ளன. அப்படி ஆளும்போது பதி, பசு, பாச விளக்கங்கள் நன்கு தெளிவுபடுத்தப்பெற்றுள்ளன.

கேவலாவத்தையில் ஆணவத்தோடு அத்துவிதமாய்க் கிடந்த ஆன்மா, பதியின் அருட்செயலால், தனு, கரண, புவன போகங்களைப்பெற்றுப் பிறந்திறந்துழலுதலாகிய சகலாவத்தையில் தாவரம் முதல் மானுடர் ஈறுகிய பிறவிகளை எடுக்கின்றது. மானுடப்பிறவியை எடுத்து நல்வினை தீவினைகளைச்செய்து அவற்றின் பயனுய்ப் பிறந்திறந்துழன்று இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. ஈற்றில் சைவசமயத்தை யடைந்து பஞ்சமாபாதகங்கள் முதலிய பாவங்களை நீக்கிப் புண்ணியங்களைச் செய்கின்றது. அவற்றின் பயனுய் அறிவுவிளக்கம் பெற்று சரியையாதி சாதனைகளைச்செய்து சிவஞானப்பேறு பெறுகின்றது. இதனுல் மலம்நீங்கி ஆன்மசுத்தி யடைந்து சிவப்பேறு பெறுதலாகிய சுத்தாவத்தையை யடைகின்றது.

இந்த அவதரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளாகிய மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம், சிவபிரான் ஆண்டருளும்முறை, ஐந்தெழுத்து, ஐந்தெழுத்தோதும்முறை, ஓதியடையும்பயன், ஆகியவை எளிதில் உணரக்கூடியவாறு விளக்கப்பெற்றுள்ளன. இத்துறையில், வேதாந்தம், சித்தாந்தம், அத்துவைதம் ஆகியவை பற்றியும் சந்தேக விபரீதமறத் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளன. "பொருளடக்கம்" என்பது இவ்வுண்மை உணர்தற்கு ஒருவாறுதவும்.

படைத்தல், காத்தல், அழித்தலோடு, மறைத்தல், அருளலையும் செய்யும் சிவபரம்பொருளே மானுடச்சட்டை சாத்தி சிவயோக

சுவாமியென்னும் திருநாமம் பூண்டு திருவுலாப்போந்து எம்போலி யரையும் ஆற்றுப்படுத்தியருளியமையின் இந்நூல் உருவாயது. ஆகவே, அப்பெருமானரின் திருவுள்ளப்பாங்கின்படி இந்நூலில் அமைந்துள்ள பொருள்கள் "முழுதும் உண்மை".

"ஒரு பொல்லாப்பு மில்லை"

ச. தியாகராசா.

"அருணகம்"
சரசாலை, 27-11-66.

உ
சிவமயம்

# மதிப்புரை

பண்டுதொட்டுச் சைவசமயம் ஆரவாரத்தைப் புறக்கணித்து, உண்மை ஒழுக்கத்தையே உணர்த்திவரும் இயல்பினது. இந்த உண்மையை அநுசரித்து இக்காலத்தில் நூல்கள் வெளிவருவதில்லை. ''தாயனைய சிவநெறி'' என்ற மகுடத்துடன் வெளிவரும் இந்நூல் உயிருக்கு இன்றியமையாத உண்மை ஒழுக்கத்தை உணர்த்துவ தாகும்.

மேனாட்டு மனோபாவநிலைகள் மலிந்த இக்காலத்தில், சைவ சமய அடிப்படை உண்மைகள் மறைந்துபோய்க் கிடக்கின்றன. அந்த உண்மைகளை இக்கால அறிஞர்கள் படித்து உணரக்கூடிய முறையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் அவர்கள் சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய இரு சைவசாஸ்திர நூல்களையும் மிகுந்த இலகுவான முறையிற் கையாண்டு, பதி பசு பாச உண்மைகளை விளக்கியிருக்கின்றார். பசுவாகிய ஆன்மாவுக்கு நிகழும் மூன்று அவஸ்தைநிலைகளையும், தன்னறிவிற் கண்டு தெளிபவனே 'சைவசித்தாந்தி' என்றும், சுத்தஅவஸ்தையில் தம்மை ஆட்கொள்ள வந்த குருபரன், சிவ பரம்பொருள் எனத் தன்அனுபவத்தில் தெளிபவனே 'சைவ சித்தாந்த தீட்சை' பெற்றவன் என்றும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு சாதனைகளையும் முறையாகச் சாதித்து ஞானமுதிர்ச்சி பெற்றோனே 'சிவஞானி' என்றும் ஆசிரியர் ஒவ் வொன்றையும் படிமுறையில் உணர்த்தியிருக்கும் சிறப்பை அவ தானித்து, நாங்கள் முழுநூலையும் கூர்ந்து படித்துச் சைவ அடிப் படை உண்மைகளை உணர முயலல் வேண்டும்.

சமய அடிப்படை உண்மைகள் வெறும்நூல்கள்மூலம் நிலை பெறுவனவன்று. சமய உண்மைகளின் 'தத்ரூபம்'பெற்று அவ தரித்துவரும் பெரியோர்கள் வாயிலாகவே அந்த உண்மைகள் நிலைபெறுகின்றன. இந்த உண்மையை உணர்த்துவதற்குப் போலும், 'தாயனைய சிவநெறி' என்ற நூலின் முதல் நடு கடை ஆகிய மூவிடங்களிலும் ஆதிகாலம், இடைக்காலம், தற்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் வாழ்ந்து ஈழநாட்டவராகிய எமக்குச் சைவவாழ்வு வழங்கியருளிய மூன்று 'திருவருட் பெரியோர்'களைப்

பற்றி ஆசிரியர் விளக்கியிருக்கின்றார், ஈழநாட்டார் அனைவர்க்கும் சைவவாழ்வு வழங்கியருளிய திருவருட் பெரியோர்கள், ஆதிகாலத்தில் மாணிக்கவாசகசுவாமிகளும் இடைக்காலத்தில் ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களும், தற்காலத்தில் 'யோகசுவாமிகள்' அவர்களும் என ஆசிரியர் அவர்கள் குறிப்பாக உணர்த்தியிருப்பது அறிந்து இன்புறற்பாலது. ஈழநாட்டையே உய்விக்கவந்த இம்மூவரையும் வணங்கி, வணங்கி ஆசிரியர் அவர்கள் இந்நூலினை எழுதியமுறை மிகவும் போற்றற்குரியதாகும்.

இந்நூல் தமிழகத்திலும் ஈழநாட்டிலும் வாழும் ஆங்கிலம் படித்த அறிஞர்களதும் ஏனையோரதும், சைவக்கண்களைத் திறந்து, அவர்களைச் சைவவாழ்விற் செலுத்தவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனின் திருவருளை வணங்குகின்றேம்.

**மு. ஞானப்பிரகாசம்.**

*பரமேஸ்வரக்கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*
*14-1-66.*

உ

சிவமயம்

# அணிந்துரை

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினுன்கும், செய்யுள் வடிவமா யிருத்தலினல் அவற்றைப் படித்து விளங்குவதற்கு, கருவிநூல்க ளான இலக்கணம், இலக்கியம், தர்க்கம் முதலியவற்றில் நல்ல பயிற்சி யிருக்கவேண்டும். அவற்றில் பயிற்சியில்லாதவர்களும் சமயஉண்மைகளை அறியவேண்டுமாயின், அவற்றை வசனரூபத்தில் வெளியிடவேண்டியதவசியமாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய வற்றை வசனத்தில் எழுதி வெளியிட்ட காரணம், அந்நூல்களை ஓரளவு தமிழறிவுள்ளவர்களும் படித்துப் பயனடைய வேண்டு மென்ற பேரவாவேயாகும். ஆகவே, சைவசாத்திர உண்மைகளை இரத்தினச்சுருக்கமாக விளக்கும் "சமயங்களின் தாயனைய சிவ நெறி" என்னும் வசனநூல் வெளிவருவது மிகவும் பொருத்த மானதாகும்.

இந்நூலின்கண் முக்கியமான சைவசமய உண்மைகளெல்லாம் ஆராயப்பட்டிருப்பினும், சில விஷயங்கள் மிகவும் தெளிவாகவும் காலத்துக்கேற்ற முறையிலும் விளக்கப்பட்டிருக்கின்றன. சைவ சமயம் எல்லாச் சமய உண்மைகளையும் தன்னுளடக்கி, சகல உயிர்களையும் — ஓரறிவு தொடக்கம் ஆறறிவு ஈருகவுள்ள எல்லா உயிர்களையும் —அன்பால் அரவணைப்பதாலேயே அது "**சமயங் களின் தாயனைய சிவநெறி**" எனக் கூறப்பட்டதாகும்.

இன்னும் சாதியைப்பற்றி ஆசிரியர் கூறியிருப்பவை கூர்ந்து கவனிக்கத்தக்கவை. "ஒழுக்கமே உயர்குலம்" என்னும் கருத் துடையவராக ஆசிரியர் காணப்படுகிருர். "சாதி உயர்வு என்பது தவஞ்செய்வதற்குத் தகுதியுள்ள சாதி என்று மேலே காணவந்தது. தவஞ்செய்வதற்குரிய தகுதி, கொலை முதலிய குற்றங்கள் நீங்கி' அன்புமுதலிய பண்புகளை வளர்ப்பதால் அமையும். சாத்துவிக குண மிகுதியால் இது அமையுமென்று மற்ருெருவாறு கூறுதலும் பொருந்தும்" எனத் தமது கருத்தைத் தெளிவாக விளக்கி யுள்ளார்.

வேதாந்த சித்தாந்த சமரசத்தை விளக்குவதற்கு இருவேதாந்த உண்மைகளை எடுத்துக்கூறும் விவேகானந்தர் கூற்றுக்களுக்கும்

உபநிடத மந்திரங்களுக்கும், சித்தாந்த உண்மைகளை விளக்கும் திருமுறைகளுக்கும் பதினுன்குசாத்திரங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி, அடிப்படையில் இரண்டுக்கும்—வேதாந் தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள சமரசத்தைத் தெளிவுபடுத்தி யிருப்பது இந்நூலுக்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கிறது,

இனித் தாம் விளக்கும் கருத்துக்களை அரண்செய்வதற்கு இக்காலத்தில் வேதாந்த சித்தாந்த சமரச நன்னெறிகண்ட வித்த கச்சித்தராயும் நடமாடுந் தெய்வமாகவும் நம்மத்தியில் விளங்கிய யோகசுவாமிகளின் நற்சிந்தனையிலிருந்து பொருத்தமான பகுதிகளை எடுத்தாண்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதொன்ருகும்.

ஈற்றில் இந்நூலாசிரியர் திரு. ச. தியாகராசா அவர்களைப்பற்றிச் சிலவார்த்தைகள் கூறுவது அவசியமாகும். இவர்கள் அரசாங்க உத்தியோகத்தி லிருந்த காலத்தில், தமது ஓய்வு நேரத்தைப் பொன்னேபோற் போற்றிச் சமய சாத்திரங்களைக் கற்றுவந்தவர்; சமய அனுஷ்டானங்களிற் கண்ணுங் கருத்துமாயிருப்பவர், ஆசார சீலர். யோகசுவாமிகளின் கருணைக்குப் பாத்திரமானவர்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட பண்புகள் பொருந்தியிருத்தலால் இவ்வாசிரியர் சமய நூல்களை எழுதுவதற்குத் தகுதியுள்ளவராக விளங்குகின்ருர். ஆகவே, இதுபோன்ற இன்னும் பல நூல்களை எழுத இறைவன் அவர்களுக்கு அருள்புரிவாராக!

ச. அம்பிகைபாகன்.

*வைத்தீஸ்வர வித்தியாலயம்,*
*யாழ்ப்பாணம், 29-3-66.*

உ

சிவமயம்

## பொருளடக்கம்.

| பொருள் | பக்கம் |
|---|---|
| தோற்றுவாய் | 1 |
| சமயங்கள் | 2 |
| சைவசமயம் | 3 |
| சற்காரியவாதம். முப்பொருள் | 7 |
| பதியுண்மை பதி இலக்கணம் | 8 |
| பசுவுண்மை | 11 |
| பசு இலக்கணம் | 13 |
| பாசம். ஆணவம், கன்மம், மாயை, | 14 |
| அவத்தைகள். கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை | 17 |
| பதியின் அருட்செயல் | 19 |
| ஒழுக்கம் | 22 |
| பஞ்சமாபாதகங்கள் | 23 |
| சாதி | 28 |
| அறவாழ்வு | 34 |
| சைவசாதனை | 35 |
| ஞானத்தின் வேறுபாடு பாச பசுஞானங்கள் பதிஞானம் | 37 |
| சரியையாதி சாதனைகள், சரியை, கிரியை, யோகம், ஞானம். | 39 |
| கேவல, சகல, சுத்தாவத்தைகள் பற்றிய ஒருவிளக்கம் | 44 |
| சிவஞானப்பேற்றுக்குத் தடையாயுள்ள இரு பெருந்திரைகள் | 50 |
| ஆன்மஅறிவு விளங்கும்முறை | 52 |
| இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் | 56 |
| ஞானகுருபரன் | 63 |
| பரமவஞ்செழுத்து மொன்றும் பராபரம். திருவைந்தெழுத்தின் தனிச்சிறப்பு | 69 |
| திருவைந்தெழுத்தின் வகை | 71 |
| பஞ்சாக்கரத் திருமேனி | 79 |
| பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல் | 81 |
| பஞ்சாக்கரம் ஓதுதல் | 87 |
| திருநீறு | 95 |
| உருத்திராக்கம் | 97 |
| பாச நீக்கமும் திருவடிப்பேறும் | 98 |
| சீவன்முத்தர் எதுசெய்வர். வேதாந்தசித்தாந்தங்களும் அத்வைதமும் | 101 |
| தூயாய்விளங்கும் சிவநெறிப் பண்பு | 116 |

# சமயங்களின் தாயனைய சிவநெறி

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்."

## தோற்றுவாய்

"சிவநெறி" என்பது "சிவதொண்டனது நெறியாகும்". "சிவதொண்டன்" எல்லோரிடத்தும் அன்பு கனிந்த உள்ளத்துடன் செல்பவன். எனவே அவனது நெறியும் அன்பு நெறியே என்பது சொல்லாமலேயமையும். "அன்பே சிவமாவதாரு மறிகிலார்" என்னும் திருமூலர் திருவாக்கு இவ்வுண்மையைத் தெளிவுபடுத்த உதவுகின்றது. இவ்வன்புநெறி "சைவசமயம்" என்று பண்டுதொட்டுக் குறிப்பிடப்பட்டு வருகின்றது. ஆனால், "சைவசமயம்" என்றவுடன் எதுவோ ஒரு குறிக்கப்பட்ட எல்லைக்குள் குறிக்கப்பட்ட மக்களால் அனுட்டிக்கப்படும் சமயம் என்று அது இன்று கருதப்படுகின்றது. அவ்வாறு கருதுவோர்க்கத்தன்மையதேயன்றி அது உண்மையில் அத்தன்மையதன்று; அத்தன்மைத்தன்று என்பதற்குச் சிவதொண்டனே சான்றாயமைதலைக் காணலாம்.

இச்சிவநெறியைத் தமிழில் அறியத்தரும் நூல்கள் சித்தாந்த சாத்திரங்களும் சைவத்திருமுறைகளுமாகும். இதை மற்றொருமுறையில் தெரித்து நிற்கின்றது திருக்குறள். இக்காலக்கல்வி கற்றோர் இந்நூல்களைக் கற்று இச்சமய உண்மைகளை உள்ளவாறுணர்தல் கடினமாயிருக்கின்றது. இவ்வுண்மையை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆகவே இவற்றை இலகுவா

யுணர்தற்கு அனுகூலமாகும் வகையில் திருவருட் குறிப் பின்படி இந்நூல் எழுதப்படுகின்றது. ''திருவருட் பயன்'' முதலிய சித்தாந்த சாத்திரங்கள் ஆங்கிலம் முதலிய மொழிகளிற் பெயர்க்கப் பெறுதல் வேண்டும் என்னும் பரந்த நோக்குடையார் விருப்பு நிறைவேறு வதற்கும் இது ஒருவாறு அனுகூலமாகுமென்று கருதப் படுகின்றது.

## நூல்

### காப்பு

மருவிடும் வழியொன்றின்றி மானில மதனில்வந்தே
அருள்நனி வேண்டிநின்ற அடியரா மெங்கட்கெல்லாம்
திருவருட் கருணைபூத்துத் தெய்விக நெறியையீந்த
குருபரன் யோகநாதன் குஞ்சித பாதங்காப்பாம்.

### சமயங்கள்

பலப்பலவாயுள்ள உலகங்களுள் ஒன்றாய ''நிலவுல கம்'' என்று குறிக்கப்படும் இவ்வுலகில் நாம் வாழு கின்றோம். எம்முடன் பிறபல உயிரினங்களும் வாழு கின்றன. சுவாத்தியம் நிலவமைப்பு முதலியவற்றில் வேறுபாடுகள் பல இவ்வுலகிற் காணப்படுவதுபோல், உயி ரினங்களுள்ளும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ் வுயிரினங்களுள்ளே மக்கட் பிறவியினர் முதன்மைவாய்ந் தவர். நிறத்தால், குணத்தால், மொழியால், அறிவால், வாழ்க்கை முறையால் இம்மக்கட் பிறவியினருட் பல வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன.

ஓரறிவுள்ள தாவரம் முதல் ஆறறிவுள்ள மானிடர் ஈறாகவுள்ள இவ்வுயிரினங்கள் எல்லாம் இன்பத்தையே நாடி நிற்கின்றன. இன்பத்தை யடையும் குறிக் கோளுடன் மக்களாகிய நாங்கள் பல்வேறு துறைகளில் முயற்சிக்கின்றோம். எங்கள் முயற்சி சித்தியடைந்து நாம் இன்பம் பெறுவதுமுண்டு; எங்கள் முயற்சி சித்தியடை யாது நாம் துன்பமுறுவது முண்டு. துன்பமானது

தொடர்ந்து வரும்பொழுது, கலக்கமுற்றுப் பலவாறு சிந்திக்கின்றோம். துன்பத்தை நீக்கி இன்பமடைய முயற்சிக்கிறோம். இவ்வாறு முயற்சிக்கும்பொழுது இன்பம் இடையறாது நிலைபெறச்செய்ய முடியாதிருப்பதை நன்கு காண்பதோடு இந்நிலவுலகில் இவ்வுடலோடியைந்து நாம் வாழும் வாழ்க்கையே நிலையற்றதா யிருக்கின்ற தென்றுங் காண்கின்றோம். இந்த நிலைமையில்தான் எங்கள் அறிவாற்றல்களுக் கப்பாற்பட்ட பேரறிவு, பேராற்றலுடைய சக்தியொன்று இருக்கின்றதென்று அறிகின்றோம். அந்தச்சக்தி ''கடவுள்'' என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்றது. கடவுளின் கருணையைப் பெற்றால் இன்பம் அடையலா மென்றும் எவ்வளவுக்கு ஒருவர் கடவுளின் கருணையைப் பெறமுடியுமோ அவ்வளவுக்கு அவருக்கு இன்பம்பெருகிப் பேரின்பமாகுமென்றும் அனுபவ வாயிலாயறிந்தோர் சொல்லக் கேட்கின்றோம். இவ்வாறு கடவுள் ஒருவர் உளர் என்று அறிந்தபின்பு மாத்திரமன்றி அறிதற்கு முன்பும் இன்பம் அடைதற்கு மக்கள் முயற்சிக்கின்றார்களல்லவா? இவ்வாறு முயலும் வழிகள் ''சமயங்கள்'' என்று சொல்லப்படுகின்றன. இவ்வுண்மை புலப்படாத நிலைமையில் ''சமயம்'' என்ற சொல்லுக்குப் பிற இலக்கணங்கள் கூறப்படலாம். ஆனால் ''உலோகாயதம்'' கடவுள் நம்பிக்கை யில்லாத ஒரு சமயமென்றும் உலோகாயதம் முதல் சித்தாந்த சைவம் ஈறாகவுள்ள சமயங்க ளெல்லாம் சமயம் அல்லது மதம் என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்றன என்றும் அறியும்போது ''சமயம்'' என்பது இன்பமடைதற்கு மக்கள் மேற்கொள்ளும் வாழ்க்கை முறையேயாகும் என்று எவரும் காணக்கூடியதாகும்.

## சைவசமயம்

இன்ப வாழ்க்கையை யடைய முயலும் நெறிகளாகிய இச்சமயங்கள் பலப்பலவுள. நாலாறு - இருபத்து நான்கு - பெரும்பிரிவுகளாக அவற்றை எம்மூதாதையர் கண்டனர். ''அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர்

பொருளாய்'' எனவரும் சிவஞானசித்தித் திருவிருத் தத்தில் இவ்வுண்மை காணக்கிடக்கின்றது. இவ்விரு பத்துநான்கு சமயங்களுள் சித்தாந்த சைவமே தலை சிறந்து விளங்குகின்றதென்று உண்மை யுணரும் பேறுடையோராகிய அருட்செல்வர்கள் எமக்கு அறி வுறுத்தியுள்ளனர்.

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றுற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'' (சி. சி)

"ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
அடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும் (சி. சி)

என்றும்

"செப்பரிய சமயங்க ளெல்லாந் தந்தம்
தெய்வமே தெய்வமெனும் செயற்கையான
அப்பரிசா ளருமலைதே பிடித்தா லிப்பால்
அடுத்தவந்நூல் களும்விரித்தே யநுமானாதி
ஒப்பவிரித் துரைப்பர்இங்ஙன் பொய்மெய்யென்ன
ஒன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாம் சமயமுமா யல்லவாகி
யாதுசமயமும் வணங்கு மியல்ப தாகி'' (தாயுமானசுவாமிகள்.)

"இயல்பென்றுந் திரியாமல் இயமமாதி
யெண்குணமும் காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி,
அயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங்கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ'' (தாயுமானசுவாமிகள்.)

என்றும் பிறபலவாறும் இது புகழப்பெறுகின்றது.

பண்டையோர் பேசிய இருபத்துநான்கு சமயங்கள் பற்றி இன்று நாம் பெருவழக்காய்ப் பேசுவதில்லை. பேச வேண்டிய தேவையுமில்லை. இன்றுள்ள சமயங்கள் பற்றிப் பேசுவதே பயனுடைத்தாகும். பிற பல உளவேயெனினும், உலக சமயங்கள் எனத்தகும் சமயங்கள் நான்கு இன்று உள. அவை இஸ்லாம், கிறீஸ்துவம், பௌத்தம், சைவம் என்பன.

சைவம் என்பது இந்துசமயம் என்று குறிப்பிடப்படும் சமயத்தின் சிரோமணியா யுள்ளது என்பது இங்கே குறிப்பிடவேண்டியது. பண்டைக்காலச் சமயங்களோடொப்பிட்டு, மேலே காணவந்த செய்யுள்களில், சைவம் எவ்வாறு புகழப் பெற்றதோ, இன்றுள்ள சமயங்களோடு ஒப்பிடும்பொழுதும் அது அவ்வாறு புகழத்தக்கதாயுள்ளதென்பதும் குறிப்பிடவேண்டியதொன்றுகும். ஏனெனிற் கூறுதும்.

ஏனைய சமயம் ஒவ்வொன்றும் குறித்த ஓரளவில் அறிவு விளக்கம்பெற்ற மக்களுக்குப் பொருந்தும் உண்மைகளைப் பெருமளவில் வலியுறுத்தி நிற்ப, சைவமோ அவ்வுண்மைகளை எல்லாந் தன்னகத்தே கொண்டு நிற்பதோடு, சமயங்கடந்த உண்மைகளையும் தூலாருந்ததி காட்டும் முறையிற் சுட்டிக்காட்டி விளக்குகின்றது; ஓரறிவுடைய தாவரம்முதல் ஆறறிவுடைய மக்கள் ஈருயுள்ள படைப்புக்கள் எல்லாம் ஆன்மாக்களே என்றுகண்டு ஆன்மாக்கள் என்ற வகையில் ஒருதாயின் பிள்ளைகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வு கூறப்படாதமுறையில் எல்லாவற்றுக்கும், யாவர்க்கும் பொருத்தமான அறநெறியைக் கூறும் பெருமையும் உடையது. இறை, உயிர் உண்மைகண்டு இருவேறு வகையெனக் காட்டி, வேறுபாடின்மையையும் விளக்கி மிளிர்வது. அன்பே தனக்கணிகலனுய்க் கொண்டுள்ளது. இவைபற்றிய விளக்கம் எதிரில் வருபவற்றுட் காணக்கூடியதாகும். இதனுலேயே சமயங்களின் தாயனையதென்று இது கருதப்படுகின்றது.

இத்தன்மையதாகிய சைவத்தின் முதல் நூல்கள் வேத சிவாகமங்களாகும். ''ஓதுசமயங்கள் பொருளுணரு நூல்கள்............ஆதலினுல் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே யடங்கிவிடும்''. ''அருமறை ஆகம முதனூல் அனைத்தும் உரைக்கையினுன்'' எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தங்களில் இவ்வுண்மை காணக்கிடக்கின்றது. இவற்றின் பொருள்களைச் சித்தாந்த சாத்திரங்களிலும் சைவத் திருமுறைகளிலும் காண்கின்ருேம். முந்தியவை சாத்திர ரூபமாயிருக்க, பிந்தியவை பெருமளவில் தோத்திர ரூபமாயுள்ளன. நாம் அறியவேண்டிய உண்மைகளைச் சாத்திரங்கள் முறைப்படுத்திக் கூறுகின்றன. இவை அறிவு நெறியின் பாற்பட்டவை எனப்படும். அருட்செல்வர்கள் அனுபூதியிற் கண்டவற்றைக் கண்ட கண்டவாறு அருளப்பெற்றவை தோத்திரங்களாகும். இவை அன்புநெறியின் பாற்பட்டவை.

சைவசமயம் சித்தாந்த சைவம் என்றும் வைதிக சைவம் என்றும் சொல்லப்பெறுகின்றது. சித்தாந்தம் என்பதனுல் சித்தத்தால்—மக்களறிவால்—காணவரும் இறுதி முடிவு என்றும், சித்தத்துக்கு—மக்களறிவுக்கு—அப்பாற்பட்டதென்றும் பொருள் கொள்ளப்படும். வைதிக சைவம் என்பதனுல் வேதசம்பந்த முடையது என்று அறியக்கிடக்கின்றது. வேதத்தின் ஞானபாதமாகிய வேதாந்தத்தின் தெளிவே சைவசித்தாந்தமாகும்.

''புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகல்அளவைக் களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினுல் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்ரும்''
(சிவப்பிரகாசம்.)

என்னும் திருவிருத்தம் இவ்வுண்மையை அறியத்தருகின்றது.

## சற்காரியவாதம்

உள்ளதிலிருந்தே உள்ளது தோன்றும், இல்லதிலிருந்து தோன்றமாட்டாது என்னும் சற்காரியவாதம் சைவசித்தாந்தத்துக்குரியது. இலது உளதாகமாட்டாது. உளது இலதாகமாட்டாது என்பதனுல், நாம் காணும் பிரபஞ்சமாகிய காரியத்துக்கு ஒருகாரணம் உண்டு என்பதாம். இவ்வாறு காரணகாரியமாய்க் காணவருவது உள்பொருளாகலின் அது இலதாகமாட்டாது - அழிந்து அற்றுப்போகமாட்டாது - என்பதும் இவ்வாதத்தால் நிரூபிக்கப்படுகின்றது.

## முப்பொருள்

அவன், அவள், அது என்று சுட்டியறியப்படும் சொல்லும் பொருளுமாய பிரபஞ்சம் உள்பொருளாய், காரியப்பொருளாய்க் காணக்கிடத்தலின் இதற்குக் காரணம் உண்டு. இக்காரியத்துக்கு முதற்காரணம் மாயை என்று அறியவருகின்றது. இது காரியப்படுதற்கு அவன், அவள், எனவரும் ஆன்மாக்கள் நிமித்த காரணமாகாமையில் இவற்றுக்கு மேலான பொருள் ஒன்று உண்டு. அது பதி எனப்படுகின்றது. இப்பதி தனது சத்தியாகிய துணையோடு தொழிற்படுகின்றது. இவ்வாறு தொழிற்படும்போது ஆன்மாக்களுக்கு மாயை சம்பந்தமான கன்மம் நிகழ்கின்றது. மாயை சம்பந்தமான கன்மம் நிகழ்தற்கொரு காரணமுண்டு. அது ஆணவம் எனப்படுகின்றது. எனவே, இறை, உயிர், ஆணவம் கன்மம் மாயை என்னும் மலம் ஆகிய மூன்று பொருள்களுமே இப்பிரபஞ்சரூபமாயுள்ளன என்றும், இவையே காரண காரியமாய்க் காணவருகின்றன என்றும் அறிதலாகின்றது. இக்காரண காரிய நிகழ்ச்சிக்குத் தொடக்கம் எதுவும் கூறமுடியாது. இவை அழிந்தொழிந்து போவதில்லை என்றும் அறியவருகின்றது. ஆகவே, இவை ஆதி, அந்தம் அற்றவை எனப்படும். ஆதி இல்லாதது அனுதி எனப்படும். இவ்வாறு முப்பொருள்களும் அனுதியானவை எனப்படும். எனவே, அவை அந்தமில்லாதவை என்பதும் பெறப்படுகின்றது.

## பதியுண்மை

இந்நிலவுலகில் நாம் வாழுகின்றோம். எங்கள் தாய் தந்தையர் எம்மைப் பெற்றுர்கள் என்று சொல்லக் கேட்கின்றோம். இவ்வுலகுக்கு எப்படி வந்தோ மென்று வேறு எவ்வாற்றானும் நாம் பிரத்தியட்சமாய் அறியவில்லை. இவ்வுலகில் ஒவ்வொருவரும் இறக்கக் காண்கின்றோம். ஆனுல் நாம் எப்பொழுது இறப்போம், இறந்தபின் எங்கள் நிலைமை எதுவாகும் என்று அறிய முடியவில்லை. இதனுலேயே "வந்தவாறெங்ஙனே போமா றேதோ மாயமாம்" என்று அப்பர்சுவாமிகள் அருளினர். எங்களைப் போலவே பிற உயிரினங்களும் தோன்றிநின்று அழிகின்றன. இவ்வுயிர்கள் எல்லாம் வாழும் இந்நிலவுலகமே அழியும் என்று அறிய வருகின்றது. இந்நிலவுலகம் மாத்திரமன்றி ஏனைய உலகங்கள் எல்லாம், அவ்வுலகங்களில் வாழும் உயிர்கள் எல்லாம் அழிந்துபோவன என்றும் அறிய வருகின்றது. இத்தோற்றக் கேடுகள் எம்மாலாகின்றனவா? நாமறியோம். எம்மைப் பற்றியே அறியாதவர்களா யிருக்கின்றோம்.

இவை தோன்றி நின்றழிதல் இயல்பு என்பர் ஒரு சாரார்; தோன்றியதொன்று தோன்றியபடி நில்லாது அழிதல், விகாரப்படுதலாகும். விகாரப்படுதலே இயல்பென்னில், இயல்பு என்பது இல்லதொன்றுகின்றது. மாயை அறிவில் பொருளாகலின் மாயை நிமித்த காரணமாவதுமில்லை.

இந்நியாயங்களால், இவ்வுலகங்களைப் படைத்துக் காத்தழிக்கும் பேரறிவுடைய பொருள் ஒன்று உண்டு என்று கொள்ளவேண்டியதாகின்றது. அதையே பதி அல்லது கடவுள் என்று அருளாளர் அறிந்து அறியத் தந்தனர். தாம் அறிந்த உண்மையை நாமும் அறிதலாகும் என்றும் அருளியுள்ளனர்.

## பதி இலக்கணம்

பதி என்பது ஒன்று உண்டென்று அவர்கள் வாளா கூறியமையவில்லை. அதன் இலக்கணமும் தாம் கண்ட

வாறு அருளியுள்ளனர். அது சொரூபலக்கணம், தடத்த லக்கணம் என இருவகைத்து.

சொரூபலக்கணம் என்பது பதியின் உண்மைத் தன்மையைக் காண்பிப்பது. ஆன்மாக்களாகிய எம் பொருட்டு, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல், அருளல் ஆகிய ஐந்து அருட்டொழில்களைச் செய் யும்போது அதன் தன்மை எது எதுவாய் அறிய வரு கின்ற தென்பதை அறியத்தருவது பதியின் தடத்த லக்கணம் எனப்படும்.

### சொரூபலக்கணம்

ஒன்றேயாய், அருவம் உருவம் அருவுருவம் என்னும் இலக்கணங்களின்றி, குணம் குறிகளின்றி, அனுதியே மலபந்த மற்றதாய், என்றுமுள்ளதாய், ஆன்மாக்களின் அறிவுக் கறிவாகி எவ்வித சலனமு மில்லதாய், எங்கும் வியாபகமானதாய், ஆனந்தமயமானதாய், பசு பாச ஞானங்களால் அறிந்து அடையமுடியாததாய், ஆனால் பதிஞானத்தால் அறிந்து அடைய வேண்டிய புகலிட மாய், அணுவுக்கணுவாகி, அப்பாலுக்கப்பாலாய் விளங் குவது என்பது பதியின் சொரூபலக்கணமாகும். இவ் வாறு பதியின் உண்மைத்தன்மையைப் பதி ஞானத்தா லறிந்த அருட்செல்வர் ''சிவம்'' என்ற சொல்லால் அதைக் குறிப்பிடுகின்றனர். எனவே, ''சிவம்'' என் பதன் பொருள் இங்கே காணவந்த தன்மைகளை யுடை யது என்க. (சிவப். 13).

### தடத்தலக்கணம்

மேலே காணவந்த சொரூபலக்கணத்தையுடைய பரமசிவம், தம்முடன் வேறற விளங்கும் ஞானசத்தி (பராசத்தி)யுடன் ஆன்மாக்களாகிய எம்பொருட்டுத் தொழிற்படுகின்றது. அப்படித் தொழிற்படும்போது அப்பராசத்தி ஆதிசத்தி அல்லது திரோதானசத்தி எனப்படுகின்றது. இது இச்சா, ஞானக் கிரியா சத்தி களாய் விரிய, சிவபரம் பொருளானது, திருவருளே

திருமேனியாகக்கொண்டு சுத்தமாயையைப் பொருந்திச் சுத்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, அனந்தேசுரரை அதிட்டித்து நின்று சுத்தாசுத்த மாயையிற் சுத்தா சுத்தப் பிரபஞ்சத்தையும், சீகண்டருத்திரரை யதிட்டித்துநின்று பிரகிருதிமாயையில் அசுத்தப் பிரபஞ்சத்தையும் படைத்து, காத்தல் அழித்தல்களையும் செய்யும். இவ்வருட்டொழில்களைச் செய்யும்போது கொண்டருளும் திருமேனி அருவம் (நிஷ்களம்), அருவுருவம் (நிஷ்கள சகளம்) உருவம் (சகளம்) என்று சொல்லப்படும். (சிவப். 14) அது அருவமாய் நிற்கும்போது சிவம் என்றும், அருவுருவமாய் நிற்கும்போது சதாசிவம் என்றும், உருவமாய் நிற்கும்போது மகேசுரன் என்றும், இவை முறையே இலய, போக அதிகாரசிவன் என்றும் சொல்லப்படும்.

இவற்றோடு, அத்துவாவடிவு, மந்திரவடிவு என்பவையும் சிவபிரானுக்குரிய வடிவங்களாகச் சொல்லப்படும். இவைபற்றி, சுத்தமாயை என்பதன்கீழும் காணவரும்.

இவ்வாறு, ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களை யருளும்போது,

"அவையே தானே யாய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே" (சி. போ.)

என்றபடி அவையேயாயும் (ஒன்றாயும்) தானேயாயும் (வேறாயும்) உயிர்களே தானாயும் (உடனாயும்) நின்றருளும்.

அவையேயாய் என்பதனால், உடலின்கண் உயிர் நிற்கும்போது உடல்வேறு உயிர்வேறு என்று பிரித்துக் கூறமுடியாது உடலேயாயிருப்பதுபோல் ஆன்மாக்களோடுகலந்து பிரிப்பின்றி ஆன்மாக்களேயாயும், தானேயாய் என்பதனால், காணுந் தன்மையுள்ள கண்ணைக் காணச்செய்தற்கு,கண்ணின் வேறாகிய சூரியவொளி உதவுவதுபோல் ஆன்மாக்களின் வேறாயும், அவையே தானே

யாய் என்பதனுல், காணும் தன்மையுள்ள கண்ணுனது ஆன்மபோத மில்லாதபோது காணுமாறில்லையாகலின் கண்ணுக்கு ஆன்மபோதம் எவ்வாறு உடன்நின்று உதவுகின்றதோ அவ்வாறு உடனுயும் நின்று பதிப் பொருள் அருளுகின்றது என்று இச்சூத்திரக் கருத்து விரித்துரைக்கப்படுகின்றது.

### பசுவுண்மை

ஆன்மா என்று ஒருபொருளுண்டு என்று ஒருவர் வாதிப்பர்; இல்லை என்று மற்றெருவர் வாதிப்பர். இப்படி உடலுள் நின்று வாதிப்பது எதுவோ அதுவே ஆன்மாவாகும். இதன் விளக்கம் ஒன்று பின்வருமா றமையும். எனது உடல் என்று உடலைச் சுட்டிப்பேசும் போது உடலின் வேருய் உயிர் உளது என்பது புல ஞகின்றது. மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்புலன்களுள் ஒன்று அறிவதை மற்றது அறிவதில்லை; காது அறிவதை மூக்கு அறிவதில்லை என்பதுபோல். ஆனுல், ஐம்புலன்கள் எல்லாவற்றுலும் அறிவது ஒன் றுண்டு. அது ஐம்புலன்களின் வேருகிய ஆன்மாவாகும். நான் கனவு கண்டேன் என்று சொல்லுவதிலிருந்து, சொப்பனுவத்தையில் தொழிற்படும் கருவிகளிலிருந்து வேருய் ஆன்மா என்பது உளது என்று அறியவருகின்றது. சுழுத்தி எனப்படும் ஆழ்ந்த நித்திரை செய்யும் நிலை மையில் பிராணவாயு மாத்திரந் தொழிற்படும். இன்ப துன்ப அனுபவம் அல்லது வேறுதொழில் (உண்டிவினை) இந்நிலைமையில் நிகழ்வதில்லை. எனவே, இந்நிலைமையில் தொழிற்படும் பிராணவாயுவின் வேருய் ஆன்மா என் பது உளது என்பது பெறப்படுகின்றது.

இவ்வான்மா கருவி கரணங்கள் ஒன்றும் இன்றிக் கிடந்தநிலைமை ஒன்றுண்டு. அது கேவலாவத்தை எனப் படும். அந்நிலைமையில் எதையும் அறிவதில்லை. அதன் பின் மாயாகாரியங்களாகிய கருவி கரணங்களைப் பெற்று அறியத் தொடங்குகின்றது. கருவி கரணங்கள் பொருந்திய உடலைப்பெற்று அவற்றின் உபகாரத்தால்

ஒன்றன்பின் ஒன்ருய்ப் பலவற்றை அறியும்நிலைமை சகலாவத்தை எனப்படும். இந்நிலைமையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அவத்தைகளை ஆன்மா அடைகின்றது. வேறுபட்ட இந்நிலைமைகளில் ஆன்மாவின் அறிவு இச்சை தொழில் ஆகிய சத்திகள் தொழிற்பட்டு ஆன்மா அறிந்து இச்சித்துத் தொழில் செய்யத் தொடங்குகின்றது. இந்நிகழ்ச்சிகளின்போது, அறிவுக்கறிவாய், ஆன்மா வுக்கு அந்தரான்மாவாய் நின்று தொழிற்படுவது பதிப் பொருளேயாகும். இவ்வாறு அறிவுக்கறிவாய் ஆன்மா வுக்கு அந்தரான்மாவாய் நிற்பதாற் பதியானது சூக்கும சித்து எனப்படுகின்றது; பசு தூலசித்து எனப்படு கின்றது. இவ்வாறு கூறுதல் சடப்பொருள்களின் வன்மை மென்மை போன்ற வேறுபாடுகளா லன் றென்க.

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் பஞ்சகந்தங்கள் ஒன்றுகூடுதல் அழிதல் ஆகிய நிலைமைகளே பிறப்பு இறப்புக்கள் என்றும், ஆன்மா என்று பிறிதொரு பொருள் இல்லை என்றும் ஒரு சாரார் கூறுவர். இந்நிகழ்ச்சிகள் அற்றுப் போதல் நிர்வாணம் என்றும் அவர் கூறுவர். சுத்த, சுத்தாசுத்த தத்துவங் களுக்குக் கீழேயுள்ள அசுத்த தத்துவங்களுக்குள் புத்தி தத்துவத்துக்குட்பட்ட ஆன்ம அறிவு நிலைமையை இக் கூற்றுக்கள் காட்டிநிற்கின்றன.

ஆன்மாவைக் கடவுள் படைத்தார் என்று மற் றெரு சாரார் கூறுவர். ஆனல், ஆன்மா என்பது அழியுந் தன்மையது என்று சொல்லார். எதற்கு ஆதி யுண்டோ அதற்கு அந்தமுண்டு என்பது முடிந்த ஒரு முடிவு. எனவே, ஆதியாயுள்ள—கடவுளாற் படைக்கப் பட்ட—ஆன்மா அழிந்தொழிந்து போகும் என்று கொள்ளவேண்டியதாகும். அன்றியும், இன்ப துன்ப வேறுபாடுகள் பல ஆன்மாக்களிடையே உண்டாகத் தக்கவகையில் எல்லா அறிவும் எல்லா ஆற்றலுமுள்ள

கடவுள் ஆன்மாக்களைப் படைத்தார் என்பது கடவுளின் அறிவாற்றல்களுக்கு இழுக்குக் கற்பிப்பதாகும்.

உடல்கள் கருவி கரணங்கள் ஆகியவற்றை அடையச்செய்யும் படைப்பையே ஆன்மாவைக் கடவுள் படைத்தார் என்பது குறிக்கின்றது என்று கொள்ளுதல் இவ்விடத்திற் பொருந்தும்.

### பசு இலக்கணம்

சொரூபலக்கணம், தடத்தலக்கணம் எனப் பதிக்குப் போல் பசுவுக்கும் இலக்கணம் இருவகைப்படும்.

மேலே காணவந்தவாறு, பதியைப்போல் இச்சை ஞானம் கிரியை என்னும் முச்சத்திகளையுடையது பசு. கடவுள் ஒருவரே; பசுக்களோ எண்ணிறந்தவை; பதியைப்போல் அனுதியானவை. பதி அனுதியே நின்மலமானது. பசு செம்பிற் களிம்புபோன்ற ஆணவ மலத்தை அனுதியாயுடையது. பதி சுயம்பிரகாசமாயுள்ளது. பசு இவ்வாணவமலத்தால் அறிவு தடைப்பட்டு நிற்பது. பதி தானே எல்லாம் அறிவது. பசு அறிவிக்க அறிவது. பதி தன்வய முடையது. பசு பளிங்குபோன்று சார்ந்ததன் வண்ணமாய் நிற்குந் தன்மையது. சத்தைச்சாரும்போது சத்தாயும் அசத்தைச் சாரும்போது அசத்தாயும் நிற்பதால் இது சதசத்து எனப்படும். இதே காரணத்தால் சித்தோடு சேரும் போது சித்தாயும் அசித்தோடு சேரும்போது அசித்தாயும் நிற்குமென்றும் சொல்லப்படும். இதனுல் இது சிதசித்து எனவும்படும். இவை சொரூபலக்கணமாகும். சுத்த, சுத்தாசுத்த, அசுத்த(பிரகிருதி) மாயாகாரியங்களைப் பொருந்தும்போது அவையேயாய் நிற்றலும் அவற்றைப் பொருந்தியே அறிவு இச்சை தொழில்கள் விளக்கம் பெறுவதும் ஆன்மாவின் தடத்தலக்கணமாகும்.

### பசுக்களின் வகை

எண்ணிறந்தவைகளாகிய பசுக்கள், விஞ்ஞானுகலர், பிரளயாகலர் சகலர் என முத்திறப்படும். ஆணவமலம்

ஒன்றுமாத்திர முடையவர் விஞ்ஞானகலர். ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்களையு முடையவர் பிரளயாகலர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுமுடையவர் சகலர் எனப்படுவர்.

## பாசம்

பாசம் என்னும் சொல் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் குறிக்கும். ஆணவம் அனாதியே செம்பிற் களிம்புபோன்றிருப்பதால் சகசமலம் எனப்படும். இவ்வாணவமலத்தை நீக்குதற்கு உபகரணமாய் வருபவை கன்ம, மாயாமலங்கள். இக்காரணத்தால் இவை ஆகந்துகமலமென்றும் சொல்லப்படும். ஆணவம் போல் இவையும் அனாதியேயெனினும் இவை பிரவாகானாதி என்று ஒருவாறு வேறுபடுத்திக் கூறவும்படும்.

## ஆணவம்

செம்பிற் களிம்புபோன்று ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் இது ஆன்மாவின் அறிவு விளக்கத்தைத் தடுக்கும் தன்மையது. இது எண்ணிறந்த சக்திகளையுடையது. இவை தத்தம் பரிபாக காலத்தில் ஆன்ம அறிவைத் தடுக்கும் வலிமையை யிழக்கும்.

## கன்மம்

ஆகந்துகமலம் எனப்படும் இது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் நினைவாய் சொல்லாய் செயலாய்ச் செய்யப்படுவது. சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என முத்திறப்படும். மனம் வாக்குக் காயங்களாற் செய்யும்வினை ஆகாமியம் எனப்படும். இதன் பயன் அனுபவத்துக்கு வரும்போது பிராரத்துவம் எனப்படும். பிராரத்துவமாவதற்குப் பக்குவமாகாது எஞ்சிநிற்கும்போது சஞ்சிதம் எனப்படும்.

பிராரத்துவம் அனுபவிக்கப்படும்போது நான் எனது என்னும் அகங்காரமமகாரங்களால் ஆகாமியம் விளையும். இது பின்பு பிராரத்துவம் சஞ்சிதங்களாகும். இக்காரணத்தால் இது பிரவாகானாதி எனப்படுவது.

### மாயை

சுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, அசுத்தமாயை (பிரகிருதி) என இது முத்திறப்படும். இது அனுதியே மூன்று வகைப்படுமென்றும், சுத்தமாயையிலிருந்து சுத்தாசுத்த, அசுத்தமாயைகள் தோன்றுமென்றும் இரு வகையாகக் கூறுவர். (சி. சி. 39)

குயவன் தன் திரிகையின் உதவியோடு மண்ணிலிருந்து குடத்தைச் செய்வதுபோல் நிமித்த காரணமாகிய பதி, துணைக்காரணமாகிய தன் சக்தியால், முதற்காரணமாகிய மாயையிலிருந்து, மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை என்னும் ஆறு அத்துவாக்களையும், ஆன்மாக்களுக்கு வேண்டப்படும் தனு, கரண, புவன போகங்களையும், தோற்றுவிக்கும். இவை எல்லாம் தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் மாயையிலேயாகும். பதியானது தாமேயும், அனந்தேசுரர் சீகண்டருத்திரர் ஆகியோரை அதிட்டித்தும் படைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்யும் என்பது முன்பு கூறப்பட்டது.

### சுத்தமாயை

சுத்தமாயை என்பது மலகன்மங்களோடு விரவாது சுத்தமாயிருப்பது. சுத்தமாயிருப்பதால் இறைவன் நேரே அருட்டொழில் செய்தற்கு இடமாயமைவது. சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு அருவ (நிஷ்களை) வடிவும், சதாசிவம் என்னும் அருவுருவ (நிஷ்களசகள) வடிவும், மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமா என்னும் நான்கு உருவ (சகள) வடிவும் இறைவனுக்கு இங்கே தோன்றுகின்றன. மந்திரவடிவும் இங்கேயே தோன்றுவது.

மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை ஆகிய ஆறுசுத்த அத்துவாக்களும் இங்கே தோன்றுவன. இவை இறைவனுக்கு வடிவமாகக் கூறப்படும். இவற்றுள்ளே மந்திரவடிவம் விசேடித்துக் கூறப்படும்.

மந்திரவடிவத்துள்ளும் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் பஞ்சப்பிரமந் திரவடிவம் விசேடித்துக் கூறப்படுகின்றது. இவை இறைவனுக்கு முறையே, சிரசு, முகம், இருதயம், இர கசியம், பாதம் ஆகிய உறுப்புக்களாயுள்ளன என்றும், ஈசானம் எல்லாவற்றையும் ஆளுந்தன்மையது, தற்புரு டம் தேவசரீரம், மானுடசரீரம் ஆதியவற்றில் அதிட் டித்து நிற்பது, அகோரம் சாந்தமாயிருப்பது, வாமதே வம், அறம், பொருள் இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கருளுவது. சத்தியோசாதம் உயிர்களுக்கு உடல்களைத் தோற்றுவிப்பது என்றும் கூறப்படுகின்றது. (சி. சி. 79 மு. திருவிளங்கம் உரை).

இவற்ரோடு, அபரமுத்தருக்கு வேண்டப்படும் சுத்த தனு, கரண, புவன, போகங்களும், சுத்ததத்துவங்கள், பஞ்சகலைகள், நான்கு வாக்குக்கள் ஆதியவையும் இதி லிருந்தே தோன்றுகின்றன.

### வாக்குக்கள், கலைகள், தத்துவங்கள்

மேலே போந்தவற்றுள், வாக்குக்கள் என்பன சூக் குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நான்காகும். சூக்குமையோடு அதிசூக்குமை என்று வாக்குக்கள் ஐந் தாகவும் கூறப்படும்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்திய தீதை என, கலைகள் ஐந்து. சிவம், சக்தி, சதாசிவம், மகேசுரம், சுத்தவித்தை, எனத் தத்துவங்கள் ஐந்தாகும்.

வாக்குக்கள் நாதவடிவாயும் (சொல்வடிவாயும்) தத் துவங்கள் பொருள் வடிவாயும் உள்ளவை.

பஞ்ச பூதங்களுள் ஒன்ருகிய ஆகாயம் ஏனைய பூதங்களுக்கும், பூத காரியங்களுக்கும் எப்படி இடம் கொடுத்து நிற்கின்றதோ அப்படியே சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் ஆகிய எல்லாவற்றுக்கும் ஐந்து கலை களும் இடம் கொடுத்து நிற்பன. (சி. சி. 44; சி. போ. சூ. 2 பாடியம் பக்கம் 143. சூரியனுர் கோயிலாதீனப் பதிப்பு.)

### சுத்தாசுத்த மாயை, பிரகிருதி மாயை

சுத்தா சுத்தமாயையிலிருந்து, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகியவை தோன்றும். கலையிலிருந்து பிரகிருதியும், பிரகிருதியிலிருந்து குணதத்துவமும், புத்தி அகங்காரங்களும் தோன்றும். தைசதம், வைகாரிகம், பூதாதி என அகங்காரம் முத்திறப்படும். தைசதத்தி லிருந்து மனமும் ஞானேந்திரியங்களும், வைகாரிகத்தி லிருந்து கன்மேந்திரியங்களும், பூதாதியிலிருந்து பஞ்சதன் மாத்திரைகளும், பஞ்ச தன்மாத்திரைகளிலிருந்து பஞ்ச பூதங்களும் தோன்றும்.

**ஞானேந்திரியங்கள்:** காது (சோத்திரம்) தோல் (தொக்கு) கண் (சட்சு) நா (சிங்குவை) மூக்கு (ஆக் கிராணம்).

**கன்மேந்திரியங்கள்:** வாய் (வாக்கு) கால் (பாதம்) கை (பாணி) குதம் (பாயு) குறி (உபத்தம்).

**தன்மாத்திரைகள்:** ஓசை (சத்தம்) ஊறு (பரிசம்) ஒளி (உருவம்) சுவை (இரதம்) நாற்றம் (கந்தம்).

**பஞ்சபூதங்கள்:** நிலம் (பிருதிவி) நீர் (அப்பு) தீ (தேயு) வளி (வாயு) வான் (ஆகாயம்).

### அவத்தைகள்

அவத்தைகள் என்பன ஆன்மாவின் அறிவுப்படி களைக் குறிக்கும். இவை கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என மூன்று வகைப்படும். இவை ஒவ் வொன்றும் காரணவத்தை, காரியாவத்தை என இரு வகைப்படும். கேவலம், சகலம், சுத்தம் ஆகிய ஒவ் வொன்றும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்து வகைப்பட்டுப் பதினைந்தாகும். இவை காரியாவத்தை எனப்படும். பதி, பசு, பாசத் தொடர்பை இந்நிலைமைகள் நன்கு விளக்கும்.

### கேவலாவத்தை

தனு, கரண, புவன, போகங்களை யடையாது, ஆணவத்தோடு அத்துவிதமாய் நிற்கும்நிலைமை கேவலா

வத்தை யெனப்படும். காரணகேவலம் எனப்படுவதும் இதுவே. இந்நிலைமையில் ஆன்மாவுக்குத் தனு கரணங்க ளில்லாமையால் அறிவு விளக்கமுமில்லை. தனு கரண புவன போகங்களை யடையும் நிலைமை சகலாவத்தை எனப்படும். இந்நிலைமையிலேதான் அறிவு விளக்கம் உண்டாகின்றது. இச்சகலாவத்தையிலே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்து நிலைமைகள் உண்டாகின்றன. இவற்றை யடையும் நிலைமை காரியகேவலம் அல்லது சகலத்திற் கேவலம் எனப்படும். இதுவே நாம் நித்திரையாகும் நிலைமை யாகும்.

## சகலாவத்தை

இதுவும் காரணசகலம் காரியசகலம் என இரு வகைப்படும். காரணசகலம் என்பது பிறந்திறந்துழலும் நிலைமையாகும். நாம் விழித்திருந்து வாழ்க்கை நடத் தும்போது பஞ்சப்புலன்களால் விடயங்களை யடை கிறோம். அவற்றை யடையும்போது அவற்றைப் பொருந்தி அழுந்தும்நிலைமை சாக்கிரம் முதலாய் ஐந்து வகைப்படும். இது சகலத்திற் சகலம் அல்லது காரிய சகலம் எனப்படும்.

## சுத்தாவத்தை

கேவலாவத்தையிலிருந்து ஆன்மா சகலாவத்தையை யடையும்போது அறிவு விளக்கம் உண்டாகிப் படிப் படியாய் வளர்கின்றது. அறிவு வளர்ந்து பேரறிவாய்ப் பூரணமடையும்போது முப்பொருளுண்மையும் அவற் றின் தொடர்பும் தெளிவாகி, பதிக்கும் பசுவுக்குமுள்ள அத்துவிதநிலைமையை அனுபூதியிற் காணக்கூடியதா கின்றது. அப்பொர்ழுது ஆன்மா அவனே நானே என்ற சாதனைக்கும் அப்பாற்பட்டு அதுவேயாய் நிற்கின்றது. இது சீவன் முத்தியாகும். இது காரியசுத்தம் எனப் படும். இந்நிலைமையிலிருந்து தேகாந்தத்தில் ஆன்மா பரமுத்தி யடையும். இது காரணசுத்தம் எனப்படும்.

## பதியின் அருட்செயல்

சர்வ வியாபகமாயுள்ளது பதி. அதன் வியாபகத்துக்குள் ஆணவத்தோடு அத்துவிதமாய் அறிவு விளக்கமின்றி இருளடர்ந்த நிலைமையிலுள்ளது ஆன்மா. இந்நிலைமையிலுள்ள ஆன்மாவுக்கு, அறிவு விளங்கச்செய்து, பேரின்ப வாழ்வருளத் திருவுள்ளங் கொள்ளும்போது, தானேயாய்—பரமசிவமாய்—நின்ற பதியானது, சிவம் சக்தி என இரண்டாகின்றது. ''ஒருருவாயினை மானுங் காரத் தீரியல்பாயினை'' எனவருந் திருவெழு கூற்றிருக்கை இங்கே சிந்திக்கத்தக்கது. சக்தியென்பது அக்கினிக்குள்ள சுடும் ஆற்றல்போல் எல்லாம் அறிந்து செய்யும் ஆற்றலாய்ச் சிவத்துக்குள்ளது. இது பராசக்தியெனப்படும். ஆன்மாக்களின் பொருட்டுச் செய்யப்படும் அருட்டொழிலாகிய ஐந்தொழில் செய்யும்போது இப்பராசக்தி ஆதிசக்தி அல்லது **திரோதானசக்தி** எனப்படும். இது இச்சா ஞானக் கிரியைகளாய் விரியும்.

அருட்டொழில் ஐந்து நிகழும் அவதரத்தில், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் முறையே, சுத்த, சுத்தாசுத்த, பிரகிருதிமாயைகளிலிருந்து தனு, கரண புவன போகங்களை ஆதிசக்தி அருளுகின்றது. ''விடிவாமளவும் விளக்கனைய மாயை—வடிவாதி கன்மத்து வந்து'' (திருவருட்பயன்) என்னும் திருவாக்கு இங்கே சிந்திக்க வேண்டியது. சுத்தமாயையிலிருந்து தோன்றி ஆன்ம அறிவு விளங்குதற்கு அனுகூலமாய் நிற்கும் வாக்குக்கள் மூவகை ஆன்மாக்களுக்கும் இன்றியமையாதன. இவ்வாக்குக்களோடு சுத்தாசுத்த மாயையிலிருந்து தோன்றும் கலையாதி தத்துவங்கள் கூடி எமது வர்க்கத்தினராகிய சகலருக்கு அறிவு விளக்கம் உண்டாக்குகின்றன. இவ்வாறு அறிவு விளக்க முண்டாகும் முறை தண்டு, தகழி, நெய், திரி முதலியவை ஒன்றுகூடி விளக்காதலோடு ஒப்பிடப்படுகின்றது. அட்டவித்தியேசுரருள் ஒருவராகிய அனந்தேசுரரால் சுத்தாசுத்தமாயை கலக்கப்

படும்போது ஆன்ம அறிவுவிளக்கம் அரும்பி, கலையாதி தத்துவங்கள் வாக்குக்களோடுகூடி, வளரத் தொடங்குகின்றது. அனந்தேசுரரால் சுத்தாசுத்தமாயை கலக்குண்டு, ஆன்மஅறிவு உதயமாதற்கு ஏதுவாகும் தத்துவத்தொகுதி, காரணசரீரம் என்று சொல்லப்படும். அறிவு விளக்கத்துக்குக் காரணமாயுள்ளது காரண சரீரம் என்பது இங்கே அவதானிக்க வேண்டியது.

சுத்தாசுத்தமாயை கலக்கப்பட்டதும் காலம், நியதி கலை ஆகிய தத்துவங்கள் தோன்ற, கலையிலிருந்து வித்தையும் அராகமும் தோன்றும். இவ்வைந்தும் ஒன்றுகூடி ஆன்மாவைப் பொருந்துதல் ஆன்மாவின் கஞ்சுகசரீரம் எனப்படுகின்றது. இவ்வைந்தையும் பொருந்தும்போது ஆன்மா பஞ்சகஞ்சுகன் என்று சொல்லப்படும். இந்நிலைமையில் கன்மபலனைப் புசிக்கும் வல்லமையை ஆன்மா பெறுதலால் ''புருடன்'' என்று சொல்லப்படும். தத்துவங்கள் பற்றிப் பேசும் போது இது புருடதத்துவம் எனப்படும்.

வித்தை அராகத்தோடு கலையிலிருந்து பிரகிருதியும் தோன்றும். பிரகிருதியின் காரியப் பொருள்களுக்குச் சீகண்டருத்திரர் அதிகாரியாயிருப்பர். இவருக்குக் கீழேயே பிரம விட்டுணுக்கள் செயலாற்றுவர். பிரம விட்டுணுக்கள் சகல வர்க்கத்தினர். சீகண்டருத்திரரும் அனந்தேசுரரும் முறையே பிரளயாகலருள்ளும் விஞ்ஞானகலருள்ளும் பக்குவப்பட்டவராவர்.

பிரகிருதியிலிருந்து குணதத்துவம் தோன்றி ஆன்மாவைப் பொருத்துதல் ஆன்மாவின் குணசரீரம் எனப்படுகின்றது. இது முக்குணங்களுக்கும் காரணமாயுள்ளது. குணதத்துவத்திலிருந்து புத்தியும் புத்தியிலிருந்து அகங்காரமும் தோன்றும். தைசதம், வைகாரிகம், பூதாதி என அகங்காரம் முத்திறப்படும். தைசதத்திலிருந்து மனமும் ஞானேந்திரியங்களும், வைகாரிகத்திலிருந்து கன்மேந்திரியங்களும், பூதாதியிலிருந்து சத்தம், பரிசம், ரூபம், இரதம், கந்தம் என்னும் பஞ்ச

தன்மாத்திரைகளும் தோன்றும். இத்தன்மாத்திரை களிலிருந்து முறையே வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய பஞ்சபூதங்கள் தோன்றும். இப்பஞ்ச பூதங்களுக் குக் காரணமாகிய பஞ்சதன்மாத்திரைகளும் மனம், புத்தி, அகங்காரமும் சேர்ந்து ஆன்மாவின் சூக்குமசரீரம் உண்டாகின்றது. சூக்குமசரீரம் எட்டுத் தத்துவங்கள் சேர்ந்தது. இதனுல் இது புரியட்டகம் என்றும் சொல்லப் படும்.

பஞ்சபூதங்களின் காரணமாகிய தன்மாத்திரைகள் சூக்கும சரீரத்துக்கு ஏதுவாயிருக்க, பஞ்சபூதங்களின் பரிணுமமே தூலசரீரமாகும். தூலசரீரம் இவ்வுலகில் வாழுதற்குரியது. சூக்கும சரீரத்திலிருந்து முறையே சுவர்க்க நரகங்களுக்குரிய பூதசார, பூதவுடம்புகள் தோன்றும். சூக்கும சரீரத்திலிருந்தே, வேறுபட்ட பிறவிகள் எல்லாவற்றுக்குமுரிய உடல்கள் தோன்றும். இவ்வாறு சங்காரகாலம் வரையும் சூக்கும சரீரம் நிலைபெறுவதாகும்.

அன்னமய, பிராணமய, மனேமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் என்பனபற்றிப் பேசப்படும் போது, தூல, தூக்கும, குண, கஞ்சுக, காரண சரீ ரங்கள்பற்றி மேலே காணவந்த விளக்கங்களை மனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

காரணசரீரம் முதல் தூலசரீரம் வரையும் ஆன்மா பொருந்துதல் பற்றிச் சிந்திக்கும்போது, தாவரம் முதல் மானிடர் ஈருக நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூருயிரம் யோனிபேதம் எனப்படும் வேறுபாடுகளை யுடைய பல பிறவிகளை ஆன்மா எடுத்து ஓரறிவுமுதல் ஆறறிவு ஈருக, ஆன்ம அறிவு வளர்ந்து வருதலைக் காணலாம். இது கூர்ந்து அவதானிக்க வேண்டியது.

''மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயத்
தானிடத் தைந்து மாடு மரன் பணிக்காக வன்றே
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலு மூம ரொன்றையு முணராரந்தோ'' (சி. சி)

என்றபடி பிறவியின் பேரெல்லையாயமைவதும், பிறவிப் பெரும்பயனை, யடையத்தருவதுமாகிய மானுடப் பிறவியின் நோக்கத்தை, இச்செய்யுளிற் காணக்கிடக்கும் தன்மையில் உணரும் வரையில், பல்வேறு பிறவிகளை மேலே காணவந்தவாறு ஆன்மா எடுத்து மேன்மேலும் பிறந்திறந் துழலும்.

## சைவசமயத்தை யடைதல்

தாவரம் முதல் மானிடர் ஈருகிய பல பிறவிகளிற் பிறந்து மானிடப் பிறவியை எடுத்த பின்பு, புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனப்படும் சமயங்களிற் பிறந்து மேன்மேலும் அறிவு வளர்ந்து, ஆன்மா சைவ சமயத்தை அடையும்.

''புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி
வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்துமருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள்
பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை
மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின்
ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'' (சி. சி.)

என்னும் செய்யுள் இவ்வுண்மையைச் செப்புகின்றது.

## ஒழுக்கம்

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் ஆகிய சமயங்களிற் பிறந்திறந்த பின்பே சைவசமயத்தையடைதல் ஆகின்றது என்னும்போது இந்நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாயுள்ள மாற்றம், அறிவு வளர்ச்சியையும் அதனல் உண்டாகும் ஒழுக்கச் சிறப்பையும் ஆதாரமாய்க் கொண்டுள்ளது என்பது குறிப்பிடவேண்டியது. அறிவு வளர்ச்சிக்கு அளவு கோலாயமைவது ஒழுக்கமாகும். காட்டை வெட்டிப் பண்படுத்திப் பயிரிடுதல் போலவும், வீட்டைத் துடைத்து மெழுகி விளக்கேற்றி வீட்டு நிலைமையை வளப்படுத்துதல் போலவும் ஒழுக்க

முறைகளை மேற்கொள்ளுவதாலேயே வாழ்க்கை வளம் பெறுதல் ஆகும். 'ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்' எனவரும் சிவஞானசித்திச் செய்யுளில் ஒழுக்கம் முதற் கண் வைத்து ஓதப்பெறுகின்றது.

'ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்'

என்று ஒழுக்கத்தின் உயர்வைத் தமிழ்மறை இடித் துரைத்து வலியுறுத்துகின்றது. அன்று அருட்செல்வர் கள் அவ்வாறு அருளினர், என்ற அளவிலன்றி, மானைக் காட்டி மானைப் பிடிக்கும் வகையில் இன்று எம்மை ஆண்டருளும்பொருட்டுத் திருவேடந் தாங்கிய சிவஞான தேசிகமூர்த்தி யோகசுவாமிகள் அருளிய ''நற்சிந்தனை'' யிலும், ''ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே'' (பக். 82) என்றும், ''ஒழுக்கம் உயிரினுஞ்சிறந்தது. ஒழுக்கமுடை யார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன: கொல்லாமை கள்ளாமை, பிறர் வசையுரையாமை, தாழ்மை, பொய் யுரையாமை முதலியனவாம்'' (பக். 369) என்றும் பிற பலவாறும் ஒழுக்கத்தின் ஒப்பிலா உயர்வு அருளப்பெற் றுள்ளது. ஒழுக்கம்பற்றி அருளும்போது ஒழுக்கங்களா வன கொல்லாமை கள்ளாமை பிறர்வசை உரையாமை, பிறர் பொருள் கவராமை, தாழ்மை பொய்யுரையாமை, முதலியனவாம் என்றதனால் நாம் தவிர்க்க வேண்டி யவையே முதற்கண் வலியுறுத்தப்பட்டன என்பதும், ''முதலியனவாம்'' என்பதனால் இவையேயன்றித் தவிர்க்க வேண்டியவை வேறும் உள என்பதும் பெறப் படுதல் அவதானிக்கப்படுதல் வேண்டும். தவிர்க்கப்பட வேண்டியவை முதற்கண் வலியுறுத்தப்படுதல் பண்டு தொட்டு நிலவிவரும் ஒரு முறையாகும்.

## பஞ்சமாபாதகங்கள்

ஒழுக்க நெறியிலே தவிர்க்கவேண்டிய பாவங்கள் பலப்பலவாகக் கூறப்படுகின்றன. அவற்றுள்ளே ஐந்து பாவங்கள் ''பஞ்சமாபாதகங்கள்'' என்று பிரித்துக் கூறப்படுகின்றன. இவை எம்மதத்தினராலும் தவிர்க்

கப்படவேண்டியவை என்பது சிற்சில வேறுபாடுகளுடன் மேஒல குறிப்பிடப்பட்ட இஸ்லாம், கிறிஸ்துவம், பௌத்தம், சைவம் ஆகிய நான்கு சமய நூல்களிலும் காணக் கிடக்கின்றது. அவற்றுள்ளே, புறப்புறச் சமயங்களுள் ஒன்ருகிய பௌத்தசமய நூலிலே சைவநூலிற் கூறப் பெற்றிருப்பது போலவே கூறப்பட்டுள்ளது. இவை சைவநூலிற் பிரித்துக் கூறப்படுந்தன்மை இங்கே காணக் கிடக்கின்றது.

புலால் மறுக்க வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தி நிற்கும் திருமந்திரம் அதே இடத்தில் மற்ருேர் உண்மையையும் நாம் அவதானிக்கவேண்டுமென்று உடன் கூறி நிற்கின்றது.

''பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே''

என்று அச்சுறுத்தி வலியுறுத்திய தோடு,

''கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞான னந்தத் திருத்தலே''

என்று குறித்த மாபாதகங்கள் ஐந்தையும் கூறுகின்றது. இவ்விடத்தில் இவ்வாறு கூறியதோடமையாது அட்டாங்கயோகத்தில் முதற்கண்ணிற்கும் இயமம் பற்றிப் பேசும் போதும்

''கொல்லான்பொய் கூருன் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையின் நின்ருனே''

என்றேனைய பண்புகளோடு குறித்த பஞ்சமாபாதகங்கள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.

திருமூலநாயனர் மாத்திரமன்றிப் பிற பல அடியார்களும் இவ்வைந்து பாவங்களும் தவிர்க்கப்படவேண்டி

யவை என்று தத்தமக்கு இயைந்தவாறு பிரித்துக் காட்டி யுள்ளனர்.

''கட்டளை கப்பணங் கட்டளை யிட்டுத்
தட்டுறு மலந்தீர் சாதன மொழிந்து
கடுங்கொலை வெறும்பொய் களவுகட் காமம்
படும்பெயர் பஞ்ச பாதகந் தீர்த்துக்
காமங் கோபங் கசடுறு முலோபந்
தீமன மோகஞ் சேர்மத மாற்சரிய
மீண்டிவை முதலா வெண்ணில் பாவம்
பூண்டன வொழியப் புந்திதந் தருளி...''

என்று திருச்செந்தூர் அகவலில் சிற்றம்பல நாடிகள் அருளும் போதும் ''படும் பெயர் பஞ்சபாதகந் தீர்த்து'' என்று பிரித்து அருளியது உற்றுநோக்கத்தக்கது.

''கல்லாதவறிவுமேற் கேளாதகேள்வியுங்
கருணைசிறிதேதுமில்லாக்
காட்சியுங்கொலைகளவு கட்காமமாட்சியாய்க்
காதலித்திடு நெஞ்சமும்
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாதுநன்மைகள்
பொருந்துகுண மேதுமறியேன்
புருடர்வடிவானதே யல்லாது கனவிலும்
புருடார்த்த மேதுமில்லேன்......''

என்று வருந்தி வேண்டுதல் செய்யும்போது குறித்த ஐந்து பாவங்களையும் தாயுமானசுவாமிகள் குறிப்பிட்டிருத்தலும் அவதானிக்க வேண்டியது.

இவ்வாறு பிரித்துக் கூறப்படும் ஐந்து மாபாதகங்களுள்ளும் முதலாவது கொலையாகவும் இரண்டாவது பொய்யாகவும் வலியுறுத்தியருளியுள்ளனர் அருளாளர். ''கடுங்கொலை வெறும்பொய்'' என்று சிற்றம்பல நாடிகள் அருளியுள்ளது மேலேகாணவந்தது.

''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று''

என்று தெய்வப்புலவர் மிகத் தெளிவாக அருளியுள்ளனர். இத்துடன் கொலைபற்றிச் சிந்திக்கும்போது புலாலுண்ணல் கொலைபாதகமாகின்ற தென்பதும் அவதானிக்கவேண்டியது. ''பொல்லாப் புலாலை நுகரும் புலையரை'' என்று திருமூலநாயனாரும்

4

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்"

என்று திருவள்ளுவநாயனாரும் அருளியிருப்பதிலிருந்து இவ்வுண்மை தெளிவாகின்றது. ஆகவே, குறித்த ஐந்து மாபாதகங்களுள்ளும் கொலையும் பொய்யும் முதற்கண் தவிர்க்கப்படவேண்டியவை என்பது மக்கள் உள்ளங்களிற் பதித்து வாழ்க்கையில் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். இவை இப்படியிருக்கவும், புலாலுணவின் தீமைபற்றித் திரித்துரைத்தும் பஞ்சமா பாதகங்களுள் பொய் ஒன்று அன்று என்று வாதாடியும் வருவோர் உளரென்றால் அன்னவர் சொல்லெல்லாம் திரோதை அம்மையின் திருவிளையாடலுள் அமைவன என்று கண்டு அமைக.

பிறபெரும் பாவங்களாருப்பவும் இங்கே குறிப்பிட்ட ஐந்தையும் பிரித்துக் கூறுவதேன் என்ற ஐயவினா ஒன்று இங்கே எழலாம். அதற்கு வேண்டிய விடை சுருக்க மாய் இடம் பெறுதல் இவ்விடத்திற் பொருந்தும்.

ஒவ்வொரு தீயசிந்தனையும், சொல்லும், செயலும், அந்த அந்த அளவில் ஒவ்வொரு தனித்தனிப்பாவமா யமைந்து அதற்குரிய துன்ப அனுபவத்தோடு அதன் பயன் அற்றுப் போகும் என்பது அமையும். ஆனால் இங்கே குறிக்கப்பட்ட ஐந்துபாவங்களும் அத்தன்மைய வாயமையாது, மேலும் பலப்பல பிறபாவங்கள் விளை தற்கும் வித்துக்களாயமைகின்றன என்பதனால் அவை மாபாதகங்கள் என்று பிரித்துக் கூறப்படுகின்றன.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

என்ற தமிழ் மறையில் கொலைப்பாவம் பிறபாவங்களைத் தரும் என்ற உண்மை தெளிவாய்க் காணக்கிடக்கின் றது. மக்கட் கொலை ஒன்று நிகழ்ந்தால் அந்நிகழ்ச்சி யாற் பிறபாவங்கள் எத்தனை எத்தனை ஏற்படுகின்றன என்பது எளிதிலுணரத்தக்கதொன்று. மக்கட் பிறவியின ரல்லாத பிற உயிர்களை ஊனுணவின் பொருட்டுக்

கொலை செய்யும்போது குறித்த உயிர்கள் வருந்துதல் யாவருமறிந்த தொன்று. அவ்வூனுணவை உண்பவர்க்கு முக்குணங்களுட் கீழானதாகிய தாமசகுணம் மிகுதி யாகின்றது. தாமசகுணமிகுதி பிறபல பாவங்களின் பிறப்பிடமாயுள்ளது.

> ''படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
> னுடல்சுவை யுண்டார் மனம்''

என்னும் திருக்குறளில் குறித்த உண்மை பொதிந்து கிடத்தலைக் காணலாம். ''புலான் மறுத்தல்'' என்னும் அதிகாரத்தில் பிற குறட்பாக்களில் இவ்வுண்மை பிற பலவாறு தெரிக்கப் பெற்றிருத்தலையும் காணலாம். இஃதன்றிப் பிறநியாயங்களும் உள.

''கொல்லாமை'' என்னும் அதிகாரத்தில் ''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று'' என்று அருளிய பொய்யா மொழியார் ''வாய்மை'' பற்றிப் பேசும்போது

> ''பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று''

என்றும்,

> ''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
> பொய்யா விளக்கே விளக்கு''

என்றும் பிறவாறும் பொய்யா விரதத்தால் வரும் பெரும்பயனை மிக அழகாக விளக்கியருளியுள்ளார். ''பொய்யாவிளக்கே விளக்கு'' என்பதனால் பொய்ம்மை ஒருவரை இருளுக்குட் புகுத்தி, தமக்கும் பிறர்க்கும் பல தீமை விளைக்கும் என்பது புலனாகின்றது. இவற்றோடு

> ''செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
> கையர் கனைகழல் கட்டிய காலினர்
> மெய்யர் மெய்ந்நின்றவர்க் கல்லாத வர்க்கென்றும்
> பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே''

என்று அப்பர் சுவாமிகளும்,

"... பொய்வளரு நெஞ்சினர்கள் காணுத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற் போதபரி பூரண
வகண்டிதா காரமாய்ப் போக்குவரவற்ற பொருளே..."

என்று தாயுமானசுவாமிகளும் அருளியிருப்பதிலிருந்து எத்துணைப் பெருந்தீமையை மக்களாவார்க்குப் பொய்ம்மை விளைக்கின்றதென்பதை அருளொளிகாணும் பெருவிழைவுடையார் எளிதிலுணர்வர். இவை இப்படியிருக்கவும் குருநிந்தை பொய்ம்மையிலும் கூடினபாவமென்று கூறி, பொய்யின் இடத்தில் பஞ்சமாபாதகங்களுள் ஒன்ருகக் குருநிந்தையே உளது என்று குழறுவோர் பொய்நெறியினரெனக் கண்டு அமைக. சிவநிந்தை, குருநிந்தை என்பன "சிவம்" என்னும் செம்பொருள் ஒன்றுண்டென்று கண்டவர்க்கு மாத்திரமே சிறப்பாயமைவனவாக, "பொய்" யோ உலோகாயதர் முதல் சைவர் ஈருகவுள்ள யாவர்க்கும் அவரவர் நிலைமைக்கேற்ற வாறமையுமென்பதும் இங்கே அவதானிக்க வேண்டியது.

விரிக்கிற் பெருகுமாகலின், எஞ்சி நிற்கும் களவு கட்காமம் ஆகியவற்றுக்கும் கொலை, பொய் ஆகியவற்றுக்குக் கூறவந்தவாறு விசேட நியாயங்களுள என்று இங்கே குறிப்பிட்டமைய வேண்டியதாகிறது. தவஞ் செய்தற்குரிய சாதிவிசேடத்தைப் பெறுவதற்கு இப்பாவங்களைத் தவிர்த்தேயாகவேண்டும் என்பது இங்கே குறிப்பிடவேண்டியது.

### சாதி

இத்தன்மையவாகிய மாபாதகங்களை நீக்கி, புறப்புறம், புறம், அகப் புறம், அகம், ஆகிய சமயங்கள் கூறும் அறங்களை ஓம்பி, அறிவு தெளிந்த பின்பே, ஒருவர் சைவசமயத்தை அடைதலாகின்றது என்பது அருட்செல்வர்கள் கண்ட சைவநூல்முடிபு. பெறற்கரியதாகிய மக்கட்பிறவி பெறுவதாயினும், பிற நாட்டிலே பிறவாது மக்கள்வாழும் நாட்டிலே அஃதும் சிவாகமங்கள் ஓதப்பெறும் நாட்டிலே பிறத்தல் பெரும்

புண்ணிய விசேடத்தாலேயே நிகழும். அப்படிப் பிறப்ப தாயினும் தவஞ் செய்யும் சாதியிலே பிறந்து பிறசமய நெறிகளிலே செல்லாது சிவநெறியிலே நிலைத்துநிற்றல் பெறற்கரும் பெரும் பேறுகும்.

''நரர்பயி றேயந் தன்னி ஞன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா ஞகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே''

(சி. சி.)

எனவரும் செய்யுளில் இவ்வுண்மை தெரிக்கப்பெற்றிருத் தல் அவதானிக்கவேண்டியது. இங்கே சாதிவிசேடம் குறிப்பிடப்பெற்றிருத்தலை உற்றுநோக்குக. ''சாதி'' என் பதுபற்றிப் பெரும்பிழையான கருத்துக்கள் பெருகிப் பரந் திருப்பதால், சிவநெறிபற்றிச் சிந்திக்கும்போது சாதி பற்றியும் தெளிவாய் அறியவேண்டியதாகின்றது. சாதி என்பதுபற்றி நன்கு விளங்குதற்கு ''சைவசமயம்'' பற்றிய கருத்தொன்றைப் பார்த்தல் பெரும்பயன் தருவதாகும்.

ஒவ்வொரு நாட்டில்வாழும் மக்களின்தொகை கணக் கிடும்போது, ஒவ்வொரு சமயத்தவர் எத்தனை எத்தனை பேர் என்று அரசாங்கங்கள் குறிப்பிடுகின்றனவல்லவா? அக்குறிப்புக்களிலே சைவசமயிகளின் தொகை என்ன என்று பாருங்கள். இத்துடன் ''ஐந்தாங்குரவர்'' என் னும் புகழுரைக்குரியராகிய அவதாரபுருடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் 'சுத்த சாட்குண்ணிய பரி பூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்த வர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண் ணல், பிறன்மனை விழைதல், வரைவின் மகளிர்விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாத வர்களாய், இரக்கம், வாய்மை, கொடைமுதலிய புண் ணியங்களையுடையவர்களாய், குருலக்கணம் குறைவற அமைந்த சைவாசாரியரையடைந்து சிவதீட்சை பெற் றுக்கொண்டவர்களாய், விபூதி, உருத்திராக்ஷதாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீபஞ்சாக்ஷரஜபம், சிவத்தியானம்,

சிவாலயசேவை, சிவலிங்கபூசை, குருவாக்கிய பரிபாலனம், மகேசுவரபூசை, முதலியவற்றைச் சிவாகமவிதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்'' என்று பெரிய புராணவசன முகவுரையில் வெளியிட்டிருக்கும் கருத்தையும் உற்றுநோக்குக. இக்கருத்தின்படி அரசாங்கம் குறிப்பிட்டிருக்கும் தொகையினருள் மிகமிகச் சிலரே உண்மைச் சைவசமயிகளாவார்கள். இது இப்படியிருப்பதை அவதானித்துக்கொண்டு இங்கே எடுத்துக்கொண்ட பொருளாகிய ''சாதி'' பற்றிச் சிந்திப்போம்.

''சாதி'' உயர்வு என்பது தவஞ் செய்தற்குத் தகுதியுள்ள சாதி என்று மேலே காணவந்தது. தவஞ் செய்தற்குரிய தகுதி, கொலை முதலிய குற்றங்கள் நீக்கி அன்பு முதலிய பண்புகளை வளர்ப்பதாலமையும். சாத்துவிக குணமிகுதியால் இது அமையுமென்று மற்றொருவாறு கூறுதலும் பொருந்தும். சாதி உயர்வும் சமய உயர்வும் ஒன்றோடொன்று இணைபிரியாதவை என்பது மேலே குறிப்பிடப்பெற்ற சிவஞானசித்திச் செய்யுளிலிருந்து அறியக்கிடக்கின்றது.

கொலை முதலிய குற்றங்களை நீக்கிக் குணங்களைப் பொருந்தாதவர்கள் சைவ சமயிகளாகமாட்டார்கள் என்பது போலவே, குறித்த கொலை முதலிய குற்றங்களை நீக்கிக் குணங்களைப் பொருந்தாதவர்கள் உயர்ந்த சாதியினராகார்கள். இவ்வுண்மையைத் திருத்துறையூர் சாந்தலிங்கசுவாமிகள் ''கொலைமறுத்தல்'' என்னும் நூலிலே,

''ஊற்றமிகுஞ் சராசரத்து ளுயர்ச்சிசரஞ்
சரத்துணரர் நரர்தம் முள்ளு
மேற்றமுந்தாழ்ச் சியுமுளபல் லுயிர்செகுத்துண்
டடலைவளர்த் திடுங்கி ழம்மேல்
சாற்றுமுயிர்க் கொலைபுரித றுயர்நெடுநா
ளென்றுமுட ருன்பொய் யென்றுந்
தேற்றமிக்கேன் றுயிர்தமைவீட்டினு மவற்றி
னுயிர்புரக்குந் தீதி லோரே''

என வரும் செய்யுளிலே எளிதா யுணரக்கூடியவாறு அருளியுள்ளார்.

சகலாவத்தையிலே படிப்படியாய் அறிவு வளர்ந்து வரும். உயிர்கள் சரம், அசரம் என இரு வகையின. ''அசரம்'' ஓரறிவுடைய தாவரவர்க்கம். சரம், ஈரறிவு முதல் ஆறறிவீருகவுள்ள இப்பி, சங்கு, எறும்பு, வண்டு, விலங்கு, புள், மக்கள் ஆதியவை. இவை ஒவ்வொன்றும் முந்தியவற்றிலிருந்து ஒவ்வோர் அறிவு கூடுதலாகப் பெறுவன. இவற்றுள்ளே, ''பகுத்தறிவு'' என்னும் ஆறும் அறிவையும் உடையராகையால் மக்களே முதன்மை வாய்ந்தவர்கள். இவர்களுள்ளே, ஏனைய உயிர்களைக்கொன்று அவற்றின் உடலை உண்பதால் கொலை செய்யப்படும் உயிர்கள் வருந்தும்; அவ்வருத்தம் எமக்கும் துன்பமுண்டாதற்கேதுவாகும்; எமது உடலே நிலையற்றது; நிலையற்ற உடலை வளர்த்தற்கு இவ்வாறு துன்பஞ் செய்தல் மேலும் துன்பத்துக்கேதுவாகும் என்பனவாய் வரும் உண்மைகளை யுணர்ந்து ஊனுணவை ஒழிப்போர் மேலானவர்கள்—உயர்ந்த சாதியினர். இவ்வுண்மைகளை உணருந்திறன் இன்றி உயிர்க்கொலை செய்து மற்சமாமிசம் புசிப்போர் கீழான சாதியினர். இவ்வுண்மை இச்செய்யுளிலே காணக்கிடக்கின்றது.

இவ்வுண்மையை, தமிழ்மறை அருளிய தெய்வப் புலவர், இன்னுசெய்யாமை, புலான் மறுத்தல், கொல்லாமை, தவம், முதலிய அதிகாரங்களிலே பலவாறு இடித்துரைத்து நல்வழி காட்டியுள்ளார்.

தனக்குப் பிறர் செய்யும் துன்பத்தை உணரும் மனிதன் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்தல் என்ன காரணத்தாலோ என்று வினவி

> ''தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ,
> மன்னுயிர்க் கின்னு செயல்''

என்றும், ஒரு தொகுதி உயிர்கள் உயிர் வாழ்வது ஊனுணவு உண்ணுவிரதமாகிய அறத்தினுலே யாம்;

அப்படி யிருக்கவும் பிற உயிர்களின் துன்பத்தைப் பொருட்படுத்தாது ஊனுணவுண்போரை, நரகமானது விழுங்கியேயாகும் என்று கழிவிரக்கம் கொண்டு

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு"

என்றும், கொலைத்தொழிலைச் செய்யுங் கீழோர், தம் கீழ்மையை யுணராது அத்தொழிலைச் செய்வாராயினும் அதைச் செய்யாதவர்கள் முன்னிலையில் புலைத் தொழிலினரேயாகின்றனர் என அவரது கீழ்மையை வெளிப் படுத்தி

"கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து"

என்றும், தவத்தின் பொருட்டு உண்டி சுருங்குதல் முதலியன ஓம்பப்படுதலின் அவற்றால் வரும் துன்பத்தைப் பொறுத்தலும், பிறவுயிர்களுக்குத் தாம் துன்பம் செய்யாமையும் ஆகிய இரண்டும் தவத்தின் வடிவாயமைந்துள்ளன, ஆகையால் அவை இல்லாதவர்க்குத் தவம் அமையாது என்று அறிவுறுத்தி,

"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு"

என்றும், அருளியிருப்பதிலிருந்து, குறித்த உண்மையைத் தெளிந்த அறிவுடையார் நன்கு காணக்கூடியதாகும்.

ஆகவே "தவஞ்செய்சாதி" விசேடம் என்பது மல வலிகள் குறைந்து சாத்வீக குணம் மிகுந்து சத்திநிபாத நிகழ்ச்சிக்குப் படிமுறையில் தகுதிபெறுதலாகும் என்றறிக.

### கொலைப்பாவம்பற்றி ஒரு சந்தேக நிவிர்த்தி

மற்சமாமிச உணவு உண்ணும்போது கொலைப் பாவம் உண்டாகிறது என்பது உண்மையானால் தாவர உணவு உண்ணும்போதும் கொலைப்பாவம் உண்டாகின்றதென்று கொள்ளலாமல்லவா என்னும் சந்தேகவினா ஒன்று இவ்விடத்தில் எழலாம்! ஆம் உண்டு. ஆனால்

வேறுபாடுகள் பலவுள. அன்றியும் தாவரக் கொலை யோடு, பிறவாறு தாவரங்களுக்குத் துன்பஞ் செய்த லுமே தவிர்க்கப்படவேண்டும் என்பதும் சைவவாழ்க்கை விதிகளுட்காணவருகின்றன.

தாவரம் தோன்றும் முறைக்கும் ஏனையவை தோன் றும் முறைக்குமிடையில் வேறுபாடுகளுள. தாவரம் ஓரறிவுடையது, ஏனையவை கூடிய அறிவுடையவை; ஆகையால் அறிவு வளர்ச்சிக்குத் தக்க துன்பமும் கூடு தலா யுண்டு. சத்திரசிகிச்சை செய்யும்போது அறிவு கெட மருந்து கொடுத்துச் செய்யும்போதும் கொடாமற் செய்யும்போதும் காணவரும் துன்பவேறுபாட்டை உன்னுக. அன்றியும், மற்சமாமிச உணவு முழுதும் பாவத்துக்கேதுவான தாமசகுணத்தை உண்டாக்குந் தன்மையவை. தாமசகுணமுடைய தாவர உணவு ஒரு சிலவே உள; அவற்றுள்ளே முருங்கைக்காய், வெள்ளை வெங்காயம் முதலியவை விரதகாலங்களில் தவிர்க்கப் படுதலை உற்றுநோக்குக. சாத்வீககுணத்தை உண்டாக் கும் தாவரஉணவு பலப்பலவுள. அன்றியும்,

''இனியே தெமக்குனருள் வருமோ வெனக் கருதி யேங்குதே நெஞ்சமையோ.........
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு கந்தமூலங்களேனும
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான் கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது சாமிநீ யறியாததோ...''

(தாயுமானசுவாமிகள்)

''புறம்பேயு மரன்கழல்கள் பூசிக்க வேண்டிற் பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தா லங்குச் சிந்திக்கும் படியிங்குச் சிந்தித்துப் போற்றி
அறம்பாவங் கட்குநா மென்கடவே மென்றும் ஆண்டவனைக் கண்டக்கா லகம்புறமென்னுது
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றோ சீரடியார் தம்முடைய செய்தி தானே''

(சி. சி.)

என்பனவாய்வரும் அருட்கூற்றுகளுட் பொதிந்துகிடக் கும் ஆழ்ந்த உண்மைகளை உணரும்போது, மேலெழக்

கூடிய எவ்வித சந்தேகமும் ஆதவனைக்கண்ட பனிபோல் ஏகுமென்றறிக.

### அறவாழ்வு

மாபாதகங்கள் முதலிய குற்றங்களை நீக்கி ஒழுக்கம் முதலிய குணங்களை ஓம்பி வருதலால், தவஞ்செய்தற்குரிய சாதி விசேடம் சமய விசேடம் ஆகியவை எய்துகின்றன. குறித்த ஒழுக்கம் முதலிய எல்லாம் அறவாழ்வு என்பதுள் அடங்கும். இம்மை மறுமை இன்பங்களோடு வீட்டுப்பேறு ஆகிய ஆக்கம் வேண்டுவோர் அறவாழ்க்கையை மேற்கொள்ளுவர்.

''அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு'' (திருக்குறள்)

என்பதை உற்றுநோக்குக.

இன்பம் பெருகி நிலைபெறுதற்கு அறவாழ்வு இன்றியமையாதென்றலின், அறவாழ்வின் உறுப்புக்கள் பற்றி அறிதல் அவசியமாகின்றது. அவை, பண்பட்ட வாழ்க்கையுடைமை, அன்புடைமை கருணைபொருந்திய உள்ளமுடைமை முதலியன என்று,

''ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்க மறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா வறங்க ளானு லிரங்குவான் பணிய றங்கள் (சி. சி)

என்னும் செய்யுளால் அறியவருகின்றது. அறவாழ்வு வாழ்வதால் சாதி விசேடம் சமய விசேடம் ஆகியவை எய்துகின்றன என்னும் பொழுது அவை எய்துவது எங்ஙனம் என்பது பற்றிச் சிறிது சந்தேகம் உண்டாகலாம். ''மனம்போல வாழ்வு'' என்னும் பழமொழி இவ்விடத்திற் சிந்திக்க வேண்டியது. இத்துடன்

''மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற''

என்று தெய்வப் புலவர் தெருட்டியருளியதைக் காணும் போது எவ்வித சந்தேகமும் உடனே அற்றுப்போகும்.

அறவாழ்வு வாழ்வதால் மனமானது மாசு நீங்கப் பெற்று அருளொளி காண்டற்கு ஆன்மாவை உரிய தாக்குகின்றது என்பது தெளிவு.

## சைவ சாதனை

தவஞ்செய்தற்குரிய சாதி விசேடமும் சமய விசேடமாகிய சித்தாந்த சைவநெறியும் சித்திக்கப்பெற்றவர் யாது யாது செய்வர். அவர் செய்பவற்றால் எய்தும் பயன் எது எது என்று இப்பொழுது அறியவருகின்றது.

தானங்கள் கொடுத்தல், யாகங்கள் செய்தல், தீர்த்தங்கள் ஆடல், தத்தமக்குரிய நிலைதவறாது நின்று தவங்கள் செய்தல், முதலியவாய்ப் பசு புண்ணியத்தின் பாற்பட்ட சாதனைகளைச் செய்து அவற்றின்பயனாகிய சுவர்க்க இன்பத்தை அவர் அடைவர். சுவர்க்க இன்ப அனுபவம் முடிதலும் மீண்டும் மானிடப்பிறவி யெடுத்துப் படிமுறையானே பெருமளவு மாசு நீங்கப் பெற்று சரியை, கிரியை, யோக சாதனைகளாகிய பதி புண்ணியஞ் செய்ய, அவற்றுக்கேற்றவாறு பதமுத்தி யடைவர். மீண்டும் மானிட யாக்கையெடுத்து ஞான குரவனது திருவடியை யடைந்து ஞானசாதனை செய்யும் பேறுபெற்று, அச்சாதனையின் பயனாய்ச் சிவ பரம்பொருளின் திருவடியடைதலாகிய பரமுத்தி எய்துவர். பத முத்தியனுபவம் முடிதலும், மீண்டும் மானிடப்பிறவி எடாது இறைவனருளான் பரமுத்தி எய்தினும் எய்துவர்; இவ்வுண்மை,

> " தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
> சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோர்
> ஈனமிலா சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
> ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோர்
> ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
> மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற்ப வித்து
> ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு
> நாதனே முன்னிற்க னணுகுவார்நற் றாளே " (சி சி.)

என்னும் செய்யுளில் அறியக்கிடக்கின்றது.

இவை பொதுவிதியின் பாற்பட்டவையாகும். இவற்றுக்குப் புறனடையுமுண்டு. அப்புறனடையாவது,

“சிவஞானச் செயலுடையோர் கையிற் றுனந்
திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்கள் நணுகுவிக்குந் தானே” (சி. சி.)

என்னும் செய்யுளிற் கூறப்பெற்றுள்ளது. இவ்வாறு நிகழ்வது, குறித்த ஓர் ஆன்மாவின் மலசத்திக் குறைவு அருளொளிப் பெருக்கம் ஆகியவற்றைப் பொறுத்தேயாகும். விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என ஆன்மாக்கள் முத்திறத்தவை என்பதூஉம், இவை அநாதியே முத்திறத்தவையாயும், கேவலாவத்தையிலிருந்து சகலாவத்தையை யடைந்தபின் முத்திறத்தவையாவும் உள என்பதூஉம் மலசத்திக்குறைவு பற்றிப்பேசும் இவ்விடத்தில் கூர்ந்து அவதானிக்கப்படவேண்டும். இச்செய்யுளிலேயே,

“நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி நாதனடிக்
கமலங்கள் நணுகுவிக்கும்”

என்று அருளப்பெற்றுள்ளதும் கூர்ந்து அவதானிக்க வேண்டியதொன்று. பொதுவிதியின்பாற்பட்டவை யாயினென் புறனடையின்பாற்பட்டவை யாயினென் ஆன்மாக்கள் எல்லாம் சிவஞானத்தைப் பெற்றபின்பே திருவடியடையும் பேறுபெறுதல் ஆகும் என்பது இங்கே குறிப்பிடப்பெற்றுள்ளது. இவ்வுண்மை,

“ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்க ளெல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பர்” (சி. சி.)

என்னும் செய்யுளில் மிகத்தெளிவாக அருளப் பெற்றுள்ளது.

"முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ" என வரும் நற்சிந்தனையில், "நித்தியா நித்திய வத்து விவேகம் ......... சாத்திரம் பயிறல் ......... ஆண்டவனடிக்கீழ் அமர்ந்து வாழ்தல்" என்று அருளப்பெற்றிருப்பதும் இவ்விடத்தில் நன்கு அவதானிக்க வேண்டும். ஏனைய கூற்றெல்லாம் அஞ்ஞானத்தின்பாற்பட்டவையேயாம்.

### ஞானத்தின் வேறுபாடு

பதிஞானம், பசுஞானம், பாசஞானம் என ஞானம் மூன்று வகைப்படும். பதிஞானம் என்பதே சிவஞானம் எனப்படுவது. இதுவே பரமுத்தியைத் தருவது.

### பாச பசுஞானங்கள்

இவற்றுள்ளே பாசஞானமாவது, வேதம், சாத்திரம், மிருதி, புராணம் முதலியவாயும் பிறவாயும், மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை ஆகிய பாசப்பொருள்களின் உதவியால் உண்டாகும் ஞானமாகும். பாசஞானம், பாசபந்தமாகிய பிறப்பைத் தருவது.

மாயாகாரியங்களாகிய மந்திரம் பதம் வன்னம் முதலிய இவ்வறுவகைப் பொருள்களின் தன்மையையும் கண்டு, தான் இவற்றின் வேறாகிய பொருள் என்று தனது சொரூபத்தை ஒருவாறு கண்ட போதும், பதியுண்மையையும், தனக்கும் பதிக்குமுள்ள தொடர்பையும், பசு எனப்படும் ஆன்மா உணராமையால், தான் பாசத்தின் வேறுபட்ட அறிவு சொரூபமான பொருள் என்பதை மாத்திரங்கண்டு, நான் பிரமம் என்று கர்வங்கொண்டு நிற்றல் பசு ஞானத்தாலாகும். அவ்வாறு காணும் காட்சி பசு ஞானம் எனப்படும். பிரம விட்டுணுக்களிடையே, நான் பிரமம் நான் பிரமம் என்ற வாதம் நிகழ்தற்கு ஏதுவாயுள்ளது இப்பசுஞானமேயாம். இவ்வுண்மை,

' வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகியான்மா இவைகீழ் நாட லாலே
காதலினு னுன்பிரம மென்னு ஞானங்
கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண்
டேசுதியுணர்ந் தொன்றென்று வுணர்ந்திடலாற் பசுவா
மொன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே''
(சி. சி.)

என்னும் செய்யுளிற் காணக்கிடக்கின்றது.

## பதிஞானம்

கண்ணானது பிற பொருள்களைக் காண்பதேயன்றித் தன்னைக் காணாது. தனக்கு உறுதுணையாய் உள்ளே யுள்ள, மனம் முதலிய அந்தக் கரணங்களையும் காணாது. மனம் முதலிய அந்தக் கரணங்களும் அப்படியே தம்மைக் காணமாட்டா. தமக்கு உறுதுணையாய் நிற்கும் உள்ளந்தக் கரணங்களாகிய வித்தை முதலியவற்றையும் காணமாட்டா. இங்ஙனமே, ஆன்மாவும் தன்னையும் தானாய்க் காணமாட்டாது. தலைவனையும் காணமாட்டாது. அறிவிக்க அறியும் இயல்பினதாகிய ஆன்மாவுக்கு, ஆன்மாவின் சொரூபத்தையும், தமது சொரூபத்தையும் திருவருளே திருமேனியாகக் கொண்டு இறைவன் காட்டியருளும். திருவருளே தாரகமாகக் கொண்டு ஆன்மா அறியும். "அவனருளாலே யவன்றாள் வணங்கி'' என்றும் "ஆண்டவனடிக்கீ ழமர்ந்து வாழ்தலே'' என்றும் வரும் அருள்வாக்குகளை உற்று நோக்குக. ''காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே'' என்றபடி இறைவன் காட்டியருளக் காண்டலே பதிஞானமாகும்.

'' கண்டிடுங்கண் டனைக்காணா கரணங் காணா
கரணங்க டமைக்காணா வுயிருங் காணா
உண்டியம ருயிர்தானுந் தன்னைக் காணா
துயிர்க்குயிரா மொருவனையுங் காணா தாகுங்
கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக்
கண்ணாகிக் கரணங்கள் காணமை னிற்பன்
கொண்டரனை யுளத்திற்கண் டடிகூடிற் பாசங்
கூடாது கூடிடினுங் குறித்தடியி னிறுத்தே,'' (சி. சி.)

என்னும் செய்யுள் இதுபற்றிப் பேசுகின்றது.

## சரியையாதி சாதனைகள்

சிவஞானத்தாலேயே சிவனையறிந்து வழிபட்டு அடைதல்கூடும் என்பதனுலும், சரியையாதி சாதனைகளே சிவஞானத்தை யடைதற்குப் படிமுறையான வழிகளாயுள்ளன என்பது பொதுவிதியாய் அமைதலானும் சரியையாதி சாதனைகள்பற்றி இப்பொழுது அறிவோம்.

### சரியை

திருக்கோயில் அலகிடல், மெழுகுதல், பூவெடுத்தல், பூமாலைகட்டுதல், தேவார திருவாசகம் முதலிய தோத்திரங்களைப் பாடுதல், தூபதீபமிடுதல். நந்தவனம் உண்டாக்குதல், சிவனடியாருக்குப் பணிசெய்தல் முதலியவை சரியாபாதச் சாதனைகளாகும். சரியாபாதம் தாசமார்க்கம் எனப்படும். இதன் பயன் சிவலோக வாழ்வு.

"தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்தன் கோயில்
தலம்அலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டால்அடியேன் செய்வ
தியாதுபணி யீர்என்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோர் ஈசன்உல கிருப்பர்" (சி.சி.)

என்னும் செய்யுள் இவற்றைத் தெரிவிக்கின்றது.

### கிரியை

கிரியையாவது புதிய மலர்கள், தூபதீபம், திருமஞ்சனம் திருவமுது முதலியவைகொண்டு ஐந்து சுத்தி செய்து மூர்த்தியை எழுந்தருளச்செய்து ஆவாகனம் பண்ணி அருச்சித்து வழிபடுதலாகும். இது சற்புத்திர மார்க்கம் எனப்படும். இதன் பயன் சிவசாமீப வாழ்வாகும்.

"புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனம்மூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாலித்தா வாகித்துச் சுத்த
பத்தியினுல் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினெடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே" (சி.சி.)

என்னும் செய்யுள் இவற்றைத் தெரிவிக்கின்றது.

## யோகம்

யோகம் என்பது சிவயோகத்தையேயாகும்; இது எட்டு உறுப்புக்களை யுடையது. இதனுல் இது "அட்டாங்கயோகம்" எனப்படும். இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன குறித்த எட்டு உறுப்புக்களாகும். கொல்லாமை பொய்யாமை முதலியவற்றைச் சாதித்தல், இயமம், தவம், தானம் முதலியவை செய்தல், நியமம், யோகசாதனைக்குப் பொருத்தமான ஆசனத்தை மேற்கொள்ளுதல், ஆசனம், சுவாசத்தை உள்ளுக் கிழுத்தல், வெளியேவிடுதல், உள்ளுக்கிழுத்தல் வெளியே விடுதலின்றி நிறுத்துதல் ஆகிய பூரக இரேசக, கும்பகங்களைச் சாதித்தல் பிராணுயாமம், புலன்வழிச் செல்லாது மனத்தைத் தடுத்தல் பிரத்தியாகாரம், புலன் வழிச் செல்லாது மனத்தைத் தடுத்து நிறுத்துதல் தாரணை, உரியமூர்த்தியை உரியமுறையில் தியானஞ் செய்தல், தியானம், தியானஞ்செய்யுந் தான் வேறு தியானிக்கப்பெறும் மூர்த்தி வேறு என்ற துவித உணர்வின்றி ஒன்றேயாய் அழுந்தி இன்புற்றிருத்தல் சமாதி.

யோகசாதனை செய்தற்குத் தகுதியுடைய ஒருவர் முதற்கண் இயம நியமங்களை மேற்கொள்ளுவர். அன்னவர் தமக்குப் பொருத்தமான ஆசனத்தைக் கண்டு பிராணுயாமஞ் செய்வர். புலனெடுங்கி மனம் ஒரு வழிப்படுதற்கு இது ஏதுவாகின்றது. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி,

ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களின் வழியே முறைப்படி சென்று ஆஞ்ஞைக்கு அப்பாற் பரவெளி யிருப்பது கண்டு அங்கே இரண்டற இன்புற்றிருத்தல் யோகசாதனையாகும்.

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்" (சி.சி.)

என்னும் செய்யுள் இதுபற்றிப் பேசுகின்றது.

"முக்கு ணம்புல னைந்துட னடக்கி மூல வாயுவை
யெழுப்பியிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத் திறந்து
தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந் தன்மை
கண்டரு டரும்பெரு வெளிக்கே
புக்க ழுந்தின ரெமதுருப் பெறுவார் புவியில்
வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்"

என்னும் திருவாதவூரடிகள் புராணச்செய்யுளும் இத் தொடர்பிற் சிந்திக்கத்தக்கது.

"இடைபிங் கலைஎன்னும் இருவாசல் அடைத்து விட்டுக்
கடையிற் சுழுமுனையைக் கபாலம் திறந்துகொண்டே—தங்கமே
காசிதேசம் போவோம் வாராய்"

"ஆறு படிதாண்டு அப்பாலே வெள்ளிப்படி
அதுவும்நீ தாண்டிவிட்டால்—தங்கமே
ஆருனக்கு நிகராவார்"

"ஒன்று யிரண்டாகி ஒருமூன்றாய் நான்கைந்தாய்
நின்ற பராபரத்தை—தங்கமே
நீயென்று உணர்ந்திடெடி"

என்பனவாய் யோகநெறி தெரிக்கும் நற்சிந்தனைத் திருவாக்குகள் இங்கே ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை.

சகமார்க்கம் எனப்படும் இது சிவசாரூப பதமுத்தி தரும்.

## ஞானம்

சரியை, கிரியை, யோகசாதனைகள் கைவரப் பெற்றோர் ஞானசாதனைக்குரியராகின்றன ரென்பது சொல்லாமலே யமையும்.

சகலகலைகள், புராணங்கள், வேதங்கள், சாத்திரங்கள் சமய நூல்கள் ஆகிய எல்லாவற்றையும் கற்றுணர்ந்து, சைவசித்தாந்தம் தவிர்ந்த எல்லாம் சித்தாந்த மல்லாதவை—ஆன்ம அறிவுக்குட்பட்டவை—என்றுகண்டு பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் தன்மையை உள்ளவா றுணரத்தரும் சித்தாந்தமாகிய சிவாகம ஞானம் கைவரப்பெற்று, தன்னையும், திருவருளையும், சிவத்தையும் பிரித்தறிதலின்றிச் சிவமேயாய் நிற்பதே சிவஞானம் சித்தித்த நிலையாகும். ஞானம் எனப்படுவதும் சிவஞானம் எனப்படுவதும் அதுவேயாம். இந்நிலைமையை யடைந்தோர் சாயுச்சிய முத்தியடைவர். இம்முத்தியைத்தரும் இந்தநெறி சன்மார்க்கம் எனப்படும்.

> "சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
> சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
> பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
> பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
> நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
> ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
> பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
> பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே" (சி. சி.)

என்னும் செய்யுள் இவ்வுண்மையைத் தெரிக்கின்றது.

## ஞானபூசனை

இங்கே கூறப்பெற்ற சிவஞானத்தைப் பெறுதற்குச் சிறந்தவழி ஒன்றுண்டு. அது ஞானபூசனை எனப்படுகின்றது.

ஞானநூல்களைத் தான் படித்தல், தான் படித்த வற்றை மற்றவர்களுக்குப் படிப்பித்தல், அந்நூற் பொருள்களை ஞானசாரியரிடம் கேட்டல், தாம் கேட்ட பொருள்களைப் பக்குவமுடையாருக்குச் சொல்லுதல், தாம் படித்த, படிப்பித்த, கேட்ட, சொன்ன பொருள் களைப்பற்றிச் சிந்தித்தல் ஆகிய ஐந்தும் ஞானபூசனை எனப்படும்.

ஞானநூல் தனையோதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவன்அடி அடைவிக்கும் எழின்ஞான பூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபஞ்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயரும்இவை பூட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோர் எல்லாம் (சி. சி)

இவ்வாறு படித்துப் படிப்பித்து, ஞானசாரியரிடம் கேட்டு, கேட்டறிந்தவற்றைப் பக்குவமுடையார்க்குச் சொல்லி அவைபற்றிச் சிந்தித்து வாழ்ந்துவரும் ஒருவர், தாம் ஞானசாரியரிடம் கேட்ட பொருள்பற்றி நன்கு சிந்தித்து, சந்தேகவிபரீதங்களின்றித் தெளிந்து, நிட்டை கூடுவர். இத்தன்மையராகிய அருட்செல்வர் தேகாந் தத்தில் பரமுத்தி யடைவர். பரமுத்திப்பேறு பெறு தவர், தமது நிலைமைக்கேற்ற மேலான பதத்தைப் பெற்று மீண்டும் இந்நிலவுலகில் உதித்து ஞானசாரி யரை யடைந்து அவரது அருளால் ஞானநிட்டை யெய்திப் பரமுத்தியடைவர். ஞானநிட்டைகூடி இந்நில வுலகில் வாழுவோர் சீவன்முத்தர் எனப் பெறுகின்றனர்.

ஒருவர் செய்துவரும் சாதனைகள் எல்லாவற் றுள்ளும் மேலானதாய், எல்லாவற்றுக்கும் மணிமுடி யாயமைவது குருவாக்கே என்பதும் அதைப் பயன் படுத்தும் பேறுயமைந்து பரமுத்திப் பேறளிப்பது குரு வருளே என்பதும் நன்கு அவதானிக்கப்படவேண்டும்.

## சரியையாதிகளின் வகை

சரியை, கிரியை, யோகம், ஞானம் என மேலே காணவந்த ஒவ்வொன்றும் சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம், கிரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம், யோகத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம், ஞானத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்பட்டுப் பதினறு வகைப்படும்.

இங்கே கூறப்பெற்ற பதினறு வகைச் சரியை கிரியை, யோகம், ஞானங்கள், உண்மைச் சரியை, கிரியை, யோகம், ஞானங்களாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பதி னறும், உபாயச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என மற்றெரு வகையாயும் அமையும்.

உண்மைச்சரியை, கிரியை, யோகம், ஞானங்கள் ஆன்மலாபம் பெறும் பொருட்டுச் செய்யப்படுவன. உபா யச்சரியை, கிரியை, யோகம், ஞானங்கள், உலகப் பொருள், புகழ் ஆகியவை பெறும் பொருட்டுச் செய்யப் படுவன. இத்தன்மையவாகிய உண்மைச் சரியை, கிரியை, யோகம், ஞானங்களுக்கும் உபாயச் சரியை, கிரியை, யோகம், ஞானங்களுக்கும் இடையேயுள்ள வேறுபா டறியாது மலைவுறுவார் பலருளராகலின், இங்கே குறிக் கப்பெற்ற வேறுபாட்டை நன்கு அவதானிக்கவேண்டும்.

## கேவல, சகல, சுத்தாவத்தை பற்றிய ஒரு விளக்கம்

ஆன்மாக்களாகிய நாங்கள், காரண கேவலம் எனப் படும் அனுதி கேவலத்திலிருந்து, பதியின் அருட் செய லால், தனு, கரண, புவன, போகங்களை ஓரறிவுடைய தாவரம் முதல் ஆறறிவுடைய மானிடப்பிறவி ஈறுகப் பெற்று, மானிடப் பிறவியிலே, பாதகங்களைத் தவிர்த் துப் புண்ணியங்களைச் செய்தலாகிய ஒழுக்க நெறியில் நின்ற பயனுய்த் தவஞ்செய்தற்குரிய சாதி விசேடத் தையும் சித்தாந்த, சைவநெறி யடைதலாகிய சமய

விசேடத்தையும் பெற்று, உபாயச் சரியை, கிரியை யாதிகள் நிலையற்றபேறு தருவன எனக்கண்டு, நிலை யான பேரின்ப வாழ்வுதரும் உண்மைச்சரியை, கிரியை, யோகம், ஞானங்களைச் சாதித்துக் குருவருளால் சீவன் முத்திப்பேறும் பரமுத்திப்பேறும் பெறுதல் ஆகின்றது என்று மேலே கண்டோம்.

**காரண கேவலம்** எனப்படும் அனுதி கேவலத்திலிருந்து, தனு, கரண, புவன போகங்களைப் பெற்றுப் பிறந்திறந்துழ லுதல் **காரண சகலம்** எனப்படும். இக்காரணசகலத்திலே, மானிடப்பிறவியை யெடுத்துத் தவஞ்செய்தற்குரிய சாதி யிலும் சைவசமயத்திலும் பிறந்து காரிய சகலத்தில் சரியையாதி சாதனைகளைச்செய்து சீவன்முத்தி எய்துதல் **காரியசுத்தம்** எனப்படும். தேகாந்தத்தில் பரமுத்தி யடை தல் **காரணசுத்தம்** எனப்படும். மானிடப்பிறவி யெடுத்து, விழித்திருந்து வாழும் நிலைமை **காரியசகலம்** எனப்படும். துயிலும் நிலைமை **காரியகேவலம்** எனப்படும். எனவே, காரிய சகல சுத்தாவத்தைகள்பற்றி ஒருவாறு விரிவாய் இனி அறியவருகின்றது.

## காரியசகலம்

பொறிகள், அந்தக் கரணங்கள் ஆகியவற்றேடுகூடி நாம் விழித்திருந்து வாழும்நிலைமை காரியசகலம் எனப் படும். இது சகலத்திற் சகலம் எனவும்படும். சுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, பிரகிருதிமாயை என்பனபற்றியும் அவற்றின் காரியங்கள்பற்றியும் ஆரம்பத்தில் நாம் அறிந்தவற்றை எம்மனக்கண்முன் இப்பொழுது வைத் திருத்தல் வேண்டும்.

மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய புலன் களால் நாம் விடயங்களை அறிந்து அனுபவிக்கிறேம். அறிந்து அனுபவித்தலாகிய இத்தொழில் நிகழ்தற்கு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கர ணங்கள், உள்ளுறுப்புக்களா யமைந்து இப்புலன்களுக்கு உதவுகின்றன. நியதி, கலை, வித்தை, அராகம் ஆகி

யவை இவ்வந்தக் கரணங்களுக்கு உள்ளந்தக் கரணங் களாய் அமைகின்றன. இவை இவ்வா றமைதலைக் காணும் நாம், இவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்று இப்பொழுது காணவருகின்றது.

வாக்குகளின் வடிவாயமைந்து பிரணவத்தின் உறுப் புக்களாயுள்ள அகர உகர மகரமாகிய அக்கரங்கள் முறையே அகங்காரத்தையும், புத்தியையும், மனத்தையும் செலுத்த விந்துவும், நாதமும் முறையே சித்தத்தையும் உள்ளம் எனப்படும் புருடனையும் செலுத்தப் பொறி களையும் பொறிகளுக்குப் பற்றுக்கோடாகிய அகப்பூதங் களையும் அந்தக் கரணங்கள் செலுத்த, ஆன்மா விட யங்களை அறிந்து பற்றி அனுபவிக்கும். புருடன் என்பது, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகியவற்றை ஆன்மா பொருந்தி விடயங்களை அநுபவித்தற்குப் பக்குவமாயுள்ள நிலைமையாகும். புருடதத்துவம் என் பதும் இதுவேயாகும்.

மேலே காணவந்த அகார, உகார, மகார, நாதம், விந்து ஆகியவற்றை முறையே பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகியோர் செலுத் துவர். இப்பிரமா, விட்டுணு, உருத்திரன், சுத்ததத்துவங் களுள் ஒன்றுகிய சுத்தவித்தையிலுள்ளவர்கள். மகே சுரன், சதாசிவன், முறையே, ஈசுர, சாதாக்கிய தத்து வத்தினராயுள்ளனர். இச் சுத்ததத்துவங்களும் அதிபதி களும் இச்சை ஞானம் கிரியை எனப்படும் சிவசத்தி களின்வழி இயங்கும்.

எனவே, சிவசத்திகளின் வழியில், சுத்ததத்துவங் களும் அவற்றில் வைகும் அதிபதிகளும் நிற்க, அதிபதி களின் வழியிலுள்ள அகார, உகார, மகாரங்களும் நாத விந்துக்களும் அந்தக் கரணங்களையும் புருடனையும் செலுத்த, அவற்றின் வழியில் அகப்பூதங்களும் இந்திரி யங்களும் இயங்க, ஆன்ம அறிவு, இச்சை, செயல்கள் நிகழ்கின்றன என்பது தெளிவாகின்றது.

''அவ்வுட னுவ்வு மவ்வு மனம் புத்தி யகங்கா ரங்கள்
செவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ளமாகும்
ஒவ்வெனு மெழுத்தா மைந்து முணர்வுதித் தொடுங்குமாறு
பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந்தோன் றும்''

(சி. சி.)

"அயனரி யரனு மீசர் சதாசிவ மதிதெய் வங்கள்
உயவரு மவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங்கட்குப்
பயனுறு மஞ்சி லான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கிற்
சயமுறு வளியி ரண்டுந் தவிர்த்துறிற் ருனுந்தோன்றும்" (சி. சி.)

"மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி, லொன்றுங்
கருவிக ளுன்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி
ஒருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத்
தெரிவுரு தவனெ ழிந்தத் திரள்களுஞ் செய்லி லாவே"
(சிவப்பிரகாசம்)

எனவரும் செய்யுள்களில் இவ்வுண்மைகள் காணக் கிடக்கின்றன. இவ்வாறு நிகழும் நிகழ்ச்சித் தொகுதியே காரிய சகல மெனப்படுவதாகும்.

## காரியசுத்தம்

மேலே காணவந்த காரியசகலம் நிகழ்வது, இலாடத்தானத்தை - நெற்றியை - ஆன்மா நிலைக்களனுய்க் கொண்டிருக்கும் போதாகும். இங்கே விடயங்களை அறிந்து பற்றி அழுந்தும் நிகழ்ச்சி சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில் சொப்பனம், சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் எனப் படும். அருளொளி காணுமையால் இவை அஞ்ஞானத் தின்பாற்பட்டுப் பிறவித் துன்பத்துக் கேதுவாகும். இவை நிகழும் காலத்தில், ஞானுசாரியரது திருக்குறிப் பின்படி, அருள்வழிநிற்கும் விழைவுடன் செய்யும் சாதனையும் அதன் பயனும் சுத்தாவத்தையின்பாற் பட்டவையாகும். இக்காரியசுத்தாவத்தையாவது நின் மலாவத்தை யெனவும்படும். சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தும் காரிய சகலாவத்தையிற்போல் காரியசுத்தத்திலும் நிகழும். இவை, நின்மல சாக்கிரம் நின்மல சொப்பனம், நின் மலசுழுத்தி, நின்மலதுரியம், நின்மலதுரியாதீதம், எனப் படும்.

இவற்றுள்ளே, திருவருளாலே தன்னையறிவது நின் மலசாக்கிரம்; திருவருளே ஆதாரமாகத் திருவருளைத் தரி

சித்து நிற்றல் நின்மல சொப்பனம்; தன்செயல் எதுவுமின்றித் திருவருளே தானுகநிற்றல் நின்மல சுழுத்தி; மலவாசனை சிறிதுமின்றி அருளொளிகண்டு ஆனந்த அனுபவம்பெறுதல் நின்மலதுரியம். துவித உணர்வின்றித் திருவருளில் அமிழ்ந்தி ஆனந்தசொரூபியாய் நிற்றல் நின்மலதுரியாதீதம் எனப்படும்.

"அறிதரு முதல வத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ்
செறிதருங் கரணந் தன்னிற் செயற்றுறுங் கண்டு கொண்ணீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லாங்கே
குறியொடு மஞ்ச வத்தை கூடுவர் வீடுகூட" (சி. சி.)

"இவ்வகை யவத்தை தன்னி லெய்திடுங் கரண மெல்லாம்
மெய்வகை யிடத்தி லுற்று மேவுமா கண்டுமிக்க
பொய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளா லாங்கே
ஐவகை யவத்தை யுய்க்கு மறிவினு லறிந்து கொள்ளே"
(சிவப்.)

எனவரும் செய்யுள்களில் இவ்வுண்மை காணவருகின்றது.

இவ்விடத்திலே, உள்ளுந்தோறும் இன்பத்தேன் சொட்டும், உண்மைநெறிவிளக்கச் செய்யுள்கள் ஆறினை, உற்றுநோக்குதல், சாலப்பொருத்தமா யமையும்.

"மண்முதற் சிவமதீரும் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவமதீரும் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவமதீரும் வகைதனில் தான்நி லாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருது மன்றே"

"பாயிருள் நீங்கி ஞானந் தனைக்காண்டல் ஆன்ம ரூபம்
நீயும்நின் செயலொன் றின்றி நிற்றலே தெரிச னந்தான்
போய்இவன் தன்மை கெட்டுப் பொருளிற்போய் அங்குத் தோன்று
தாய்விடில் ஆன்ம சுத்தி அருணூலின் விதித்த வாறே"

"எவ்வடி வுகளும் தானும் எழிற்பரை வடிவ தாகிக்
கவ்விய மலத்தான் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வமீண் டகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவ னென்றே
செவ்வையே உயிருட் காண்டல் சிவரூபமாகு மன்றே"

"பரைஉயிரில் யானெனதென்றற நின்ற தடியாம் பார்ப்பிடமெங்
குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும் என்றங் குண்மையினை
மிகத்தெளிந்து பொருள்வேறென் றின்றித்
தரைமுதலிற் போகாது நிலையினில்நில் லாதுதற்பரையி
னின்றழுந்தா தற்புதத்தி னுகுந்
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தல் சிவனுண் மைத்
தெரிசனமாய் செப்பு நூலே"

"எப்பொருள்வந் துற்றிடினும் அப்பொருளைப் பார்த்திங் கெய்தும்
தனைக்கண்டிவ் வுயிர்க்கு மேலாம் [உயிர்
ஒப்பில் அருள் கண்டுசிவத் துண்மைகண்டு உற்றதெல்லாம்
அதனலே பற்றி நோக்கித்
தப்பினைச்செய் வதும் அதுவே நினைப்பும் அது தானே தரும்
பொசிப்பும் அது தானே யாகும் [உணர்வும்
எப்பொருளும் அசைவில்லை யெனஅந்தப் பொருளோ
சிவயோகம் எனும் இறைவன் மொழியே" [டியைவதுவே

"பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப் பயின்றிடினும்
நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள்வந் திடினும் தனக்கெனஓர்
செயலற்றுத் தான்அதுவாய் நிற்கில்
நாதன்இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து நானுபோ
கங்களையுந் தானுகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானுக்கி விடுவன் பெருகுசிவ
போகமெனப் பேசுநெறி இதுவே"

பிருதிவிமுதல் சிவதத்துவ மீருகவுள்ள தத்துவங்களை உள்ளவாறு காண்டல் தத்துவரூபம், இவை சடப் பொருள்கள் என்று காண்டல் தத்துவதரிசனம், இவைதா னல்ல என்று காண்டல் தத்துவசுத்தி, தத்துவங்களுக்கப் பாற்பட்டு ஞானசொரூபியாய்த் தான் நிற்றலைக் காண் டல் ஆன்மரூபம், தன்செயலின்றித் திருவருளின் செயலே செய்லெனக் கண்டுநிற்றல் ஆன்மதரிசனம், தனது தன்மை காணுது திருவருளே தானுய்ப் பிரிப்பின்றி நிற்றல் ஆன்மசுத்தி, திருவருளையே திருமேனியாகக்கொண்டு, மல பந்தம் நீக்கும்பொருட்டுச் சகலத்திற் பொருத்தி, இளைப் பாறும்பொருட்டு ஒடுக்கி, மீண்டும் சகலத்திற் பொருத்தி உயிர்க்குயிராய் நின்று உபகரித்துப் பிறவித் துன்

பத்தை நீக்கி யருளுவது சிவபெருமானே என்று திருவருளையே தாரகமாகக்கொண்டு காண்டல் சிவரூபம், யான் எனதென்பதற்றுத் திருவருளேயாய் நிற்றல் திருவடி, தத்துவங்க ளெல்லாம் சிவத்துக்குட்பட்டுச் சிவமேயாய் நிற்றலைக் காண்டல் திருமுகம், சிவத்துடன் ஒன்றுபட்டு, வாக்குமனுதீதமாகிய வரம்பிலின்ப மனுபவித்தல் திருமுடி, பசு பாசஞானங்கள் பொருந்துதலாகிய பந்த முருது சிவத்துடன் அத்துவிதமாய் நின்று பரமானந்த முற்றிருத்தல் சிவதரிசனம் என்றும், உலகத்தோடு பொருந்தி வாழவேண்டியதாய் வந்தாலும், உலகப் பொருள்களுள்ளே உயிரையும், உயிர்க்குயிராகிய சிவத்தையும் கண்டு ஆன்மசெயலின்றிச் சிவத்தின் செயலே எல்லாம் எனக்கண்டு, அகம் புறம் எல்லாம் சிவமேயாய் நிற்றல் சிவயோகம், சிவமேயாய் நிற்பவர்க்குத் தனக்கெனச் செயலின்மையால் அவர் செயல் எல்லாம் சிவச்செயல் ஆகி உண்டல், உறங்கல், கிடத்தல், நடத்தல், முதலிய எல்லாப் பிராரத்த போகங்களும் சிவபோகமாகி, அவர் பேரின்பமுற்றிருப்பார். இது சிவபோகம் என்று மேலேயுள்ள செய்யுள்களில் அறியவருகின்றது.

### சிவஞானப்பேற்றுக்குத் தடையாயுள்ள இரு பெருந்திரைகள்

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பனவும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பனவும் இன்ன பிறபலவும் சிவஞானப் பேற்றுக்குத் தடையாயுள்ளன என்று அறிஞர் வாயிலாகவும் அறிவுநூல்வாயிலாகவும் நாம் அறிந்துள்ளோம். புறப்பார்வைக்கு இவை போன்றவையாய்த் தோன்றுதுநின்று இவற்றின் உட்பொருள் செறிந்துள்ள இரு பெருந்திரைகள்பற்றிச் சைவநூல் பேசுகின்றது.

இந்நிலவுலகில் ஆட்சிபுரியும் ஒருவரை அரசன் என்று சொல்கின்றோம். பல்வேறு வகைப்பட்ட பொருள்கள் அரசனுக்குண்டு. பொருளின்றி வறிஞரா

யுள்ள ஒருவரை ஆண்டி என்கின்ருேம். இவ்வாறு அரசன் என்றசொல் உணரத்தரும் பல்வேறு பொருள் உடைய ஒருவரையும், ஆண்டி என்றசொல் உணர்த்தும் பொருள் எதுவுமில்லாத வறிஞரையும் ஓர் இடத்தில் ஓர் ஆசனத்தில் சைவநூல் அமர்த்தியிருக்கும் காட்சி ஒன்று இப்பொழுது நாம் காணவருகின்றது. கல்வி, காசு, காணிபூமி, உத்தியோகம் என்பனவாய் வரும் பல பொருளுடைய வாழ்வு மயக்கத்தைத் தருவது. இதுபோலவே, இப்பொருள்கள் எதுவுமில்லாத வறுமை யும் மற்ருெருவாறு மயக்கத்தைத் தருகின்றது. மயக் கத்துக் கேதுவாகிச் சிவஞானப்பேற்றுக்குத் தடையா யுள்ளமையால் வாழ்வும் வறுமையும் ஒருதரத்தவை யாய் இவ்விடத்தில் உன்னப்படுகின்றன.

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத்தாலே
போழிள மதியி னணேப் போற்றுவா ரருள்பெற் ருரே." (சி. சி.)

என்னும் திருவிருத்தத்தை உற்றுநோக்குக.

"அவனருளாலே அவன்ருள் வணங்கி"

என்றபடி சிவஞானத்தாலே சிவபெருமானை வழிபடு தற்குச் சைவசமயத்தை யடைதலும், அடியார்க் கடிய ராயமைதலும் வேண்டப்படுகின்றன. இப்பேறுகளுக் குத் தடையாயுள்ளன, வாழ்வும், வறுமையும். எனவே, சிவதெரிசனத்தை விழைவோ ரெல்லாம், சிவதெரிசனத் தைத்தருவதாகிய சிவஞானத்தை மறைக்கும் திரைக ளாயுள்ளன வாழ்வும் வறுமையும் எனக்கண்டு அருள் வழிநின்று அவற்ருலாகும் இழிவை நீக்க முந்துவர்.

"நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று"

எனவரும் அருள்மொழிகளை ஒருபாலும்,

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது"

"இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்"

எனவரும் அருள்மொழிகளை மற்றொருபாலும் வைத்துச் சிந்தித்தல் இவ்விடத்தில் நலன் தருவதாகும்.

## ஆன்ம அறிவு விளங்கும் முறை

காரியசகலம்பற்றிச் சிந்தித்தபொழுது மக்கட்பிறவியினர்க்கு அறிவு விளங்கும் முறைபற்றிக் குறிப்பாக அறிந்தோம். மக்கட் பிறவியினர்க்கு மாத்திரமன்றி ஆன்மாக்களுக்குப் பொதுப்படையாய் அறிவு விளங்குதல்பற்றி ஆரம்பத்தில் ஒருசிறிது அறிந்தோமெனினும், அதுபற்றி மேலும் சிறிது அறிதல் வேண்டப்படுவ தொன்றாகும்.

ஆணவத்தோடு அத்துவிதமாய் ஆன்மா கிடக்கும் நிலைமை காரண கேவலமாகும். இந்நிலைமையிலிருந்து "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக மாகி" என்றவாறு ஓரறிவு முதல் ஆறறிவு ஈறுயுள்ள பிறவிகளைத்தரும் தனுகரண புவனபோகங்கள் பொருந்துதலாகிய சகலாவத்தை நிகழ்கின்றது. சகலாவத்தையென்பது எல்லாப் பிறவிகளிலும் ஆன்மா பிறந்திறந்துழல்வதைக் குறிக்கும். இது காரண சகலமெனப் படுவது. இக்காரண சகலத்திலே மானிடப் பிறவியை எடுத்த பின்பு, பிற பல பிறவிகளை எடுத்தலுமாகின்றது. மேலும் பிறவி எடுக்கவேண்டிய காரணமில்லாத நிலைமையை எய்தியவிடத்தும் மானிடப்பிறவி எடுத்தே காரிய சுத்தாவத்தை யடைதலாகின்றது. இது பொது விதி. இவ்விதியை விளக்குவதாயுள்ள,

"மருவாத நெறிபூண்ட மத்தனெனும் புத்தனுடன்
பெருவாது வென்றுசிவன் பெருநாம மிகவளர
வோருவாத பிறவியிற்சேன் றொருநாம முறுதவர்க்குத்
திருவாத வூரரேனுந் திருநாமந் தரித்தார்கள்"

என்னும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுளை இவ்விடத்திற் சிந்தித்தல் நன்று.

இவ்வாறு, காரண கேவலத்திலிருந்து காரண காரிய சகலத்தை யடைந்து, காரிய சகலத்திலிருந்து காரண காரிய சுத்தத்தையடையும் வரையும் ஆன்மா வாகிய பசுவுக்கும் இறைவனுகிய பதிக்குமுள்ள தொடர்பு பற்றித் தெளிவாயறிதல் இன்றியமையாது வேண்டப்படுவ தொன்ருகும்.

"அவையே தானே யாய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே"

என்னும் சிவஞானபோதச் சூத்திரமும்,

"உலகெலா மாகி வேறு யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனு யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல ஞகி நின்றன னீங்கா தெங்கும்" (சி. சி.)

என்னும் திருவிருத்தமும் இவ்விடத்தில் நாம் அறிய வேண்டிய உண்மையை முறையே தொகுத்தும் விரித்தும் விளக்குகின்றன.

உடலின்கண் உயிர் எப்படிப் பிரிப்பின்றி உளதோ அப்படி உயிர்களோடு உயிர்களேயாய் ஒன்ருயும், கண் ஒளியும் சூரிய ஒளியும்போல் உயிர்களிலிருந்து வேருகியும், கண்ணொளியும் ஆன்மபோதமும்போல் உயிர்களுடனும், இறைவனது ஆணையாகிய சத்தி இந்நிலைமைகள் எல்லாவற்றிலும் கலந்து நிற்கின்றது. இவ்வாறு நின்று, நல்வினை தீவினைகளைச் செய்வித்து, அவற்றின் பலனுக்கேற்ப, பல பிறவிகளையும் இன்ப துன்பங்களையும் ஈந்து அவற்ருல் ஆன்ம அறிவு விளக்கமுறச் செய்கின்றது.

இவ்வாறு ஓரறிவு முதல் ஆறறிவீருக அறிவு வளர்ந்து வருதலும், ஆன்மா மக்கட் பிறவியை எடுக்கின்றது. மக்கட் பிறவியை எடுத்த பின்பும் பிறந்திறந்துழன்று, தனக்கு மேலாகிய தெய்வம் ஒன்று உண்டென்று அறியத் தொடங்கித் தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுகின்றது. தெய்வ வழிபாடு சிறந்து

வளர்ந்து ஆன்மா சைவசமயத்தை யடைகின்றது. இந் நிலைமையில் சமயதீக்கை, விசேடதீக்கை, நிர்வாணதீக் கைகளைப் பெற்று, சரியை, கிரியை, யோக, பாதங் களில் நின்று சாதனைகளைச் செய்து, அச்சாதனைகளின் பயனுக்குத்தக வாழ்க்கை முறையையும் வளம் பெறச் செய்கின்றது. இதுகாறும் உள்நின்றுணர்த்திய இறை வன் முன் நின்றுணர்த்திச் சிவஞானப் பேறருளத் திரு வுள்ளங் கொள்ளுகின்றது; இந்நிலைமையிலேயே சிவ ஞான தேசிகமூர்த்தியா யெழுந்தருளி, பக்குவமுதிர்ச்சி யடைந்த ஆன்மாவை ஆண்டருளும் தடங்கருணைப் பெருஞ்செயலைச் செய்தருளுகின்றது.

மணிவாசகப்பெருமானது திருச்சரிதை, இந்நில மையை மிகச் சிறப்பாகச் சித்திரித்துக் காண்பிக்கின்ற தாகலின், திருவாதவூரடிகள் புராணத்திலுள்ள சில செய்யுள்களை இவ்விடத்திற் சிந்தித்தல் சாலப் பெரும் பயன் தருவதாகும்.

"தவமெனும் பெரிய வித்துட் டங்கியே யங்குரித்துப்
பவமெனும் பங்க நீங்கிப் பயிலருட் குருத்துண்டாகி
யவமெனும் களைக ணீங்கி யாக்குவோ னருளா லுண்மைச்
சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்தது தெய்வச் சாலி"

"தேனினெடு கரும்பினெழுஞ் செழும்பாகு முக்கனியு
மானினறும் பாலுமுட னளவியுளங் களிகூர
வீனமிகும் பலயோனிப் பிறவியெனும் பசிதீர
ஞானவமு துண்பார்க்கு நயந்தமுது நுகர்வித்தார்"

என்னும் செய்யுள்கள் திருவாதவூரராகிய குழந்தையின் அறிவு நிலைமையைச் சித்திரித்து நிற்கின்றன.

"பற்பல பொருளா யுள்ள பாசமு மதனை மேவி
யுற்பவ பேதமான வுடம்புயி ரொடுங்கு மாறு
மற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாந்
தற்பர னடத்து மாறு முணர்ந்தனர் சைவநூலின்"

"அவ்விய மனத்தி னுலே யனைத்துரு வங்கள்கூடி
யிவ்வுயிர் பிறந்து மீள விறந்திடு மென்றி ரங்கி
வெவ்வெயில் வருத்த முற்றுர் மென்னிழல் விரும்பு மாபோ
னவ்வியு மழுவு மேந்து நம்பனுக் கன்பு மிக்கார்"

"தீத்திற வினையி னாலே சிறைப்படு முயிரை யெல்லாம்
பார்த்தன ருலக வாழ்விற் பயனிலை யென்று தேர்ந்து
கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றுருமாபோ
னீத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதி நீதி"

"வரமுடன் புவியிற் றோன்று மறையவர்க் கிறைவருண்மை
தருமுணர் வென்னு நாலாஞ் சத்திநி பாதமெய்தி
பரமவஞ் செழுத்து மொன்றும் பராபர முணர்த்து ஞான
குருபரன் றிருத்தாள் சென்றுகூடுதல் வேண்டுமென்று"

"மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின்மேவு
நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் லெறிவார் போலச்
சற்குரு வுளனோ வென்று நாடுவார் தர்க்க மெல்லாஞ்
சொற்கலை ஞான சைவர் தம்முடன் சொல்லலுற்றார்"

என்னும் செய்யுள்கள் திருவாதவூரராகிய ஆண்டகையின் அறிவு நிலைமையைச் சித்திரித்துக் காண்பிக்கின்றன. இந்நிலைமையிலே சிவபரம்பொருளின் திருவருட்செயல் எதுவாகின்றதென்று நாம் காணப்போகின்றோம்.

"பழமறை முழுதுண ரந்தணர் பலர்தொழ நடமுயல் கின்றவர்
மழுவுழை கரமிசை கொண்டிட மருவிய கவுரி மகிழ்ந்திட
விழைதகு மிரசித பொங்கொளி விடுமுயர் கயிலை விலங்கலி
னழகுறு தபனிய மண்டப மதனிடை யருள்கொ டிருந்தனர்"

"ஆர்வமுடன் வந்தின மகப்பட வழைக்கும்
பார்வையென மாந்தர்படி வங்கொடு நடந்தார்
ஏர்வரு குருந்தமொ டிலங்குமுயர் காவிற்
சேர்குவ மெனத்திரு வுளத்தருள் சிறந்து"

"வந்துதிகழ் தொண்டர்புடை சூழமகிழ் வெய்திக்
கொந்தலர் மலர்ப்பொலி குருந்தடி பொருந்தி
யந்தமுத லில்லவ ரருட்டமி முரைப்பார்
பந்தமறு மெல்லையது பார்த்தினி திருந்தார்"

"விரவு மன்பொரு வடிவுகொண் டணைவார்
விழித்த பார்வையின் விளக்கின்முன் னிருள்போற்
சுருதி செந்தமி ழாக்கிய மொழியார்
தொலைவி லாதவெந் துயர்ப்பவ மொழிந்து
பரவி மென்பதம் பணிபவர் படிமேற்
படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் பரிவான்
மருவு மிங்கிவர் சென்னியி லிருதாண்
மகிழ வைத்தனர் மதிநதி முடிப்பார்"

எனவரும் செய்யுள்களில் மக்கட் பிறவியினராகிய திரு வாதவூரடிகளை ஆண்டருளுதற்குப் பார்வை மிருகம் போல் மானிடச் சட்டை சாத்திச் சிவஞானதேசிக மூர்த்தியா யெழுந்தருளி யிருந்தது சிவபரம்பொருள் என்பதும், அவ்வாறு எழுந்தருளியிருந்து, திருவாதவூ ரடிகளது பந்தமறும் எல்லையைப் பார்த்தினிதிருந்து அடி களை ஆண்டருளிய தென்பதும் மிக அழகாகச் சித்திரித் திருத்தலை நாம் கண்டு இன்புறும லிருக்க முடியாது.

பண்டு நாம் செய்த தவப்பயனாய் எம்போலியரை யும் அருட்கரை ஏற்றுமாறு எழுந்தருளியது சிவயோக சுவாமிகள் என்ற சிவஞானதேசிகமூர்த்திகள் என்னும் பேருண்மை எம்மனத்திலுதிப்பதை இவ்விடத்தில் நாம் மறைக்க முடியாதிருக்கின்றது. எனவே, சிவதொண்ட ராவார் தம்பந்தமறும் எல்லையைச் சுவாமிகள் பார்த் தினிதிருந்தருளுகின்றன ரென்பதை இடையறாது சிந் தித்துச் சிந்தித்து உய்தியடைவ ரென்பது இங்கே சொல்லாமலே யமைகின்றது.

### இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம்

சைவநூலுணர்த்தும் மிக முக்கியமான சிவநெறிப் பொருள்கள் மூன்று மேலே காணவந்த திருவாதவூரடி கள் புராணச் செய்யுள்களிற் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று "இறைவ ருண்மை — தருமுணர் வென்னு நாலாஞ் சத்திநி பாதமெய்தி" என்பதிலும் "...பந்தமறு மெல்லையது பார்த்தினி திருந்தார்" என் பதிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

"இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்" என்று சொல்லப்படும் சைவநூற் பொருள்களுள்ளே இருவினையொப்பு மலபரிபாகம் என்பவற்றை "பந்த மறு மெல்லையது" என்பது குறிக்கும். இருவினை யொப்பு மலபரிபாகம் எய்திய பொழுதே "நாலாஞ் சத்திநி பாதம்" எய்துதல் ஆகின்றது. எனவே, சிரோமணிகளாய் விளங்கும் சைவநூற் பொருள்க

ளுள்ளே ஒன்றுகிய "இருவினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம்" என்பதுபற்றி இப்பொழுது நாம் சிந்திக்கவேண்டியதாகின்றது.

இத்தொடர்பில், மலைவுதரும் கருத்தொன்று சைவ உலகிற் பரவியுள்ளது. அம்மலைவு நீக்கித் தெளிவு பெறுதல் அவசியம் வேண்டப்படுவ தொன்றுகலின் இப்பொழுது அத்துறையிற் சிந்தித்தல் சாலப் பொருந்தும்.

"இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்" என்பன இங்கே குறிப்பிடப்பெற்ற முறையிலே முதல் இடை கடையாய்ப் பேசப்படுதல் சைவ உலகிற் பெருவழக்காய் வந்துள்ளது. இக்காரணத்தாற் போலும் இவை நிகழ்வதும் இம்முறையிலேயே என்பதாய் ஒரு மலைவுதரும் கருத்து எங்கள் மத்தியில் இடம் பெறலாயிற்று. இவை எவ்வளவு ஆழமாய் இடம் பெற்றுள்ளன என்பதை எளிதாய்க் காண்டற்குச் சிலவெளியீடுகளிலிருந்து எடுத்துக் காட்டுகள் இங்கே தரப்படுகின்றன.

(1) "வேறு சிறந்த சாதனங்களுமுண்டு. அவைகளைக் கடைப்பிடித்து முதல்வனை மனுேவாக்குக் காயங்களால் வழிபடின் இருவினை யொப்புண்டாகி மலபரிபாகத்தால் சத்திநிபாதந் திகழும்" (அறுவகைச் சமயம்-பக்கம் 44)

(2) "சரியை கிரியை யோக சிவபுண்ணியங்களினுல் இருவினையொப்பும், இருவினையொப்பால் மலபரிபாகமும் இருவினையொப்பு மலபரிபாகங்களினுல் சத்திநிபாதமும் உண்டாகும்" (கந்தர் கலிவெண்பா உரை - பக்கம் 22)

(3) "மலபரிபாகத்திற்குக் காரணம் இருவினையொப்பாம்....சத்திநிபாதத்துக்குக் காரணம், இருவினையொப்பும் மலபரிபாகமுமாம்" (முப்பொருள் விளக்கம்-பக்கம் 90—91).

(இந்நூலாசிரியர் வெளியிட்ட "விநாயக பரத்துவம்" என்னும் மற்றெரு நூலில் மற்றெரு கருத்தையும் வெளியிட்டுள்ளார். அது கீழே காணவரும்).

இக்கூற்றுக்களா லுண்டாகும் மலைவுநீக்குகின்ற கருத்துரைகளுக்கு எடுத்துக்காட்டுகள் இப்பொழுது காணவருகின்றன.

(1) ''பக்குவ முதிர்ச்சியாற் சிவபுண்ணியம் நிரம்பி மலபரிபாகம் பிறந்து சிவசத்தி பதியப்பட்டு இருவினையொப்புப் பழுத்த ஆன்மாக்களது பிறவி நீங்கும்படி ஞானகுருவாய் வந்து அடிமை கொள்பவர் விநாயகரே என்பதை உணர்த்துவது அவருடைய ஒரு திருக்கரமாம்.

முற்பிறவிகளிலே ஒன்றன்பின் னொன்றாகிய படி முறையானே சரியை முற்றியபின் கிரியையும் கிரியை முற்றியபின் யோகமும் அநுட்டித்து முற்றுப்பெற்ற பின் அம் மூன்றும் முற்றுதலால் மலபரிபாகமும் சத்திநி பாதமுந் தோன்றும்'' (விநாயகபரத்துவம் - பக்கம் 43). முப்பொருள் விளக்கத்திலிருந்து மேலே எடுத்துக் காட்டிய கூற்றாலுண்டாகும் மயக்கத்தை, இக்கூற்று நீக்குதல் காண்க.

(2) ''இந்த இருவினையொப்பு ஆன்மாவின் இன்ப துன்ப நுகர்ச்சியால் அதின் ஆணவம் வலிகெட உண்டாகும்நிலை'' (திருவருட்பயன் உரை - பக்கம் 54).

(3) ''உலகத்தில் கன்மவயத்தால் விருப்பு வெறுப்புக்களிலும் சுக துக்கங்களிலும் மாறிமாறிச் சுழலும் ஆன்மா தர்ம உணர்ச்சியைப் பெற்றுப் புண்ணியத்தைச் செய்து பாபத்தைத் தவிர்க்கின்றது. ஆயினும், உலக வாழ்க்கையில் துவர்ப்படைகின்றது. மலபரிபாகத்தால் இருவினையொப்பு நேர்கின்றது. நித்தியமாகக் கருதியிருந்த வாழ்வு அநித்தியம் என்ற உண்மை வெளியாகின்றது. ஆன்மா பொய்ச்சார்பை விட்டு மெய்ச் சார்பை நாடுகின்றது. இந்த நிலையைத்தான் பட்டினத்தடிகள் நமது நெஞ்சை நெகிழ்க்கும் வகையில்,

''ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம்கச்சி யேகம்பனே''

என்று காட்டியுள்ளார்கள். ஆன்மா பொய்ச்சார்பை விடுகின்ற காலத்தில், மெய்ச்சார்பாகிய திருவருட் சக்தியின் மடியில் வீழ்கின்றது. திருவருட்சக்தி ஆன் மாவில் பதிகின்றது. இதுவே சத்திநிபாதம் என்று சொல்லப்படும். ஆன்மா சுத்தநிலையில் பிரவேசிக் கின்றது. இந்த அவதரத்தில் இறைவனே சற்குருவாக எதிர்ப்படுகிறான். சற்குருவை அதிஷ்டித்து இறைவனே ஆன்மாவுக்கு அருள் செய்கின்றான் என்பது சைவ சித் தாந்தக் கருத்தாகும்'' (சைவசித்தாந்த மகாசமாசப் பொன்விழாத் தலைமைப் பேருரை. சித்தாந்தம் மலர் 29, இதழ் 1, பக்கம் 9)

மலம் பரிபாகப்பட்டே சத்திநிபாதம் இருவினை யொப்பு என்பவை நிகழும் என்பது இங்கே காணவந் துளது. சைவ நூல்களிலிருந்து இத்தொடர்பில் நாம் அறி யத்தக்கது என்ன என்பதை இப்பொழுது பார்ப்போம்.

''விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து'' (திருவருட்பயன்)

மாயை பற்றிப் பேசும் இக்குறள் வெண்பாவில் ஆணவம் கன்மம் ஆகியவைபற்றிய பொருளும் தொக்கு நிற்றலைக் காணலாம். ஆணவமாகிய இருள்நீங்கி, சிவ ஞானமாகிய சூரியன் உதிக்கும் வரையும் ஆன்மாவின் கன்மத்துக்கேற்றவையாய் மாயையிலிருந்து தோன்றும் தனு கரண புவன போகங்கள், இருளில் ஒருவற்கு உதவும் விளக்குப்போல் உதவுகின்றன என்று இங்கே அறியக்கிடக்கின்றது.

''ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளு
மெண்ணரிய சத்தியதா யிருளொளிர விருண்ட
மோகமாய்ச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வரது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிக
ணணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே''
(சிவப்பிரகாசம்)

ஆணவமலம் செம்பிற் களிம்பைப்போல் ஆன்மாவுடன் அநாதியாய்ச் சகசமாயுள்ளது, திரோதானசத்தி அதைப் பரிபாகப்படுத்துவது என்பது இங்கே அறிவுறுத்தப் பெற்றுள்ளது. இப்பரிபாகத் தொழிலுக்கு மாயை கன்மங்களே உதவுவன. இக்காரணத்தால் இவை இரண்டும் ''ஆகந்துக மலம்'' எனப்படும்.

''ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனு யாதி
அன்றதா யான்மா வின்ற னறிவொடு தொழிலை யார்த்து
நின்றுபோத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற்க ளிம்பேய்ந்
தென்றுமஞ் ஞானங் காட்டு மாணவ மியைந்து நின்றே. (சி. சி.)

ஆணவமலம் ஆன்மாவுடன் அநாதியே செம்பிற் களிம்பைப்போற் சகசமாயுள்ளது; அது ஆன்மாவின் அஞ்ஞானத்துக்கு ஏதுவாயுள்ளது, போக நுகர்ச்சியில் யான் எனது என்பனபோன்ற வினை முதலாம் தன்மையை உண்டாக்குவது என்று இங்கே தெரிக்கப்பெற்றுள்ளது.

ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களும் ஆன்மாவைப் பந்திக்கும் முறைமை மற்றொரு செய்யுளில் ஓர் உவமானத்தால் விளக்கப்படுகின்றது.

''மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போ
மம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்துநின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத்துவங்கள் பண்ணும்
இம்மல மூன்றி னோடு மிருமல மிசைப்பனின்னும்'' (சி. சி)

நெல்லில் உமி, தவிடு, முளை ஆகிய மூன்றும் எவ்வாறு பொருந்தியுள்ளனவோ அவ்வாறு ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூன்றும் ஆன்மாவைப் பொருந்தியுள்ளன என்று இங்கே விளக்கப்பெற்றுள்ளது. உமி நீங்கியபின், அரிசியிலிருந்து முளை தோன்றமாட்டாதென்பது எவரும் எளிதிலுணரக்கூடிய ஓர் உண்மை. எனவே, ஆணவமாகிய உமி நீங்கியபின், முளையாகிய கன்மம் முளைக்கமாட்டா தென்பதாயிற்று. ஆகவே, முளையாகிய கன்மம் விளையாதிருத்தற்கு—இருவினை யொப்புண்டாதற்கு—உமி நீக்கமாகிய மலபரி

பாகம் இன்றியமையாததென்பது சொல்லாமலே யமை தல் காண்க.

மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம் என்பவற்றிற்குக் கால முற்பிற்பாடு கூறுதல் பொருந் தாது. ஆயினும், மலபரிபாகம் என்பது ஆணவமல பரிபாகத்தையே குறித்தலாயினும். அம்மல பரிபாகத் துக்கு மாயை உபகரணமா யமைகின்றது என்பத னாலும், தனு, கரண, புவனங்களாய் மாயை பொருந் திய விடத்திலேயே பசுவினை, பதிவினை எனப்படும் கன்மம் நிகழும் என்பதனாலும், மலபரிபாகமே முக்கிய மானதாய் முதற்கண் வேண்டப்படுவது என்பது இங்கே தெளிபொருளாயிற்று. "மூலமலம்" என்று ஆணவ மலம் குறிக்கப்படுவதும் "ஆகந்துகமலம்" என்று மாயை கன்மங்கள் குறிக்கப்படுவதும் இதனாலேயே என்க.

சத்திநிபாதம், மலபரிபாகம், இருவினையொப்பு என்பவற்றின்கீழ், சிவஞானபாடியம் சொல்பவற்றுட் சிலபகுதிகளைப் பார்த்தல் இவ்விடத்தில் நன்மை பயக்கு மாகலின், ஒரு சில இங்கே தரப்படுகின்றன.

### சத்திநிபாதம்

"இனி, தவம் இவ்வாறு சரியை முதல் நால்வகைப் பட்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழ்தற் கேற்பப், பக்குவமாதற் பொருட்டு மலத்திற்கு அநுகூல மாய் நின்று நடாத்திய திரோதானசத்தி மலம் பரி பாக மெய்தியவழி அக்கருணை மறமாகிய செய்கை மாறிக் கருணை யெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமேயாய் ஆன்மாக்கண்மாட்டுப் பதிதலாகிய சத்திநி பாதமுஞ், சோபான முறையான் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரமென நால்வகைப்பட்டு அவற் றுள்ளும் பல்வேறு வகைப்பட்டு நிகழுமெனக் கொள்க. எனவே, சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரிபாக மென்பதூஉம் அதுவும் அவ்வாறு பலவேறு வகைப் பட்டு நிகழுமென்பதூஉம் பெறப்பட்டன.

சத்திநிபாத மென்னுஞ் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு ...ஒரவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக் களத்தி லுள்ளாரை ஆண்டு நின்றுமகல்விக்கும். அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே அஃது அவ்வான் மாவை மனைவி மக்கண் முதலிய உலகத்துழனியின் அச்சநிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து உண்மைக்குரவனை நாடிச் செல்லுமாறு செய் வித்தலின், அவ்வெர்ப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சி யென்னுது சத்திவீழ்ச்சியென் றோதப்பட்டது.

### மலபரிபாகம்

மலபரிபாகமாவது, மலந் தனது சத்தி தேய்தற் குரிய துணைக்காரணங்க ளெல்லாவற்றோடுங் கூடுதலே யாம்.

### இருவினையொப்பு

இனி, இறப்பில் தவத்தான் நிகழும் இருவினையொப் பாவது யாதெனிற் கூறுதும்:- சஞ்சிதமாய் ஈட்டப் பட்டுக் கிடந்த இருவினைகளும் பக்குவமுறையானே பயனுய் வரும்வழி, நல்வினையுண் மிக்கதாகிய பரிமேத வேள்விப் புண்ணியமும், தீவினையுண் மிக்கதாகிய பிர மக்கொலைப் பாவமும் ஒருங்கே பக்குவமெய்தி பயன் படுதற்கண் ஒத்தனவாயின், அவை தம்முள் ஒன்றூ ஞென்றடிக்கப்பட்டுச் சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டொழியுமாகலின், அவை அவ்வாறு தம்மு ளொத் தலே இருவினையொப்பென்பர் ஒரு சாரார். சஞ்சித மாய்க் கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றித் தம்முளொத்தல் இருவினையொப்பென் பர் ஒரு சாரார். மிக்க வினை யிரண்டுந் தம்முளொத்துக் கெட்டவாயினும் அவை யொழித்தொழிந்த புண் ணிய பாவங்கள் தத்தம் பயனைத் தருதற் கிடையீ டின்மையானும், இருவினைகண் முழுதுந் தம்மு ளொக்

குமாறில்லை. ஒக்குமெனினும் அதுபற்றி ஆணவமலம் நீங்குமாறின்மையான் விஞ்ஞான கலராவரன்றி முத்தி யெய்துதல் கூடாமையானும் இவ்வாறு பௌட்கரத்து ளெடுத்தோதி அவ்விரண்டனையும் மறுத்தலானும் ஈண் டோதிய இருவினையொப்புக்கு அவை பொருளல்ல வென்றொழிக.

இனி, இவ்விரண்டும் இவ்வாருக ...... ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணிய பாவ மிரண்டினும், அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுவோனதறிவின்கண் அவ்விருவினையும் அவ்வாறொப்பநிகழ்தலே ஈண்டு இருவினையொப்பென்ற தற்குப் பொருளென நுண்ணுணர்வாற் கண்டுகொள்க....

இனி, இருவினைகள் பசுநல்வினை தீவினை யென்றுஞ் சிவநல்வினை தீவினை யென்றும் இருவேறு வகைப்படும். எனவே, இருவினையொப்பும் அவ்வாறு பசுநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாகிய இருவினை யொப் பென்றும், சிவநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாகிய இருவினை, யொப்பென்றும் இருவேறு வகைப்படுமென் பதூஉம் பெற்றும். சிவநல்வினை தீவினைகள் தம்மு ளொத்தலாவது, சிவநல்வினையுந் தீவினைபோலத் தமது முதலுபகாரத்தை மறந்து பிறவிக் கேதுவாய்ப் பசு போதம் முனைத்துச் செய்யப்படுவ தொன்றெனத் தெளிந்து உவர்த்து விடுவோனது அறிவின்கண் அவ் வாற்றுனொப்ப நிகழ்தல்.'' (சிவஞானபாடியம் - பக்கம் 361—363).

### ஞான குருபரன்

மணிவாசகப்பெருமானது திருச்சரிதையைச் சொல் லும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுள்களிற் கண்ட மூன்று சிவநெறிப் பொருள்களுள் ஒன்று இரு வினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் பற்றிய தாகலின், அதுபற்றிச் சிந்தித்த நாம், ஏனைய இரண்டும் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாகின்றோம். அவை,

"...பரமவஞ் செழுத்து மொன்றும் பராபரமுணர்த்து ஞான
குருபரன் றிருத்தாள் சென்று கூடுதல் வேண்டு மென்று"
(திருவாதவூரடிகள் புராணம்)

எனவரும் அடிகளிற் காணக்கிடக்கின்றன. அவற்றுள் ஒன்றுகிய "ஞானகுருபரன்" பற்றி இப்பொழுது காண வருகின்றது.

யானைகளைப் பிடித்தற்குப் பழக்கப்பட்ட யானைகளை உபயோகித்தல் இன்று நாம் கண்கூடாகக் காண்பதொன்று. இவ்வாறே சகல வர்க்கத்தினராகிய மக்கள் ஆண்டருளப்பெறுவர். இவ்வுண்மை,

"பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணுர் புவி" (திருவருட்பயன்)

என வரும் குறட்பாவிற் காணக்கிடக்கின்றது.

சிவபிரானே ஞானகுரவனுகின்றுர் எனக் காணும் நாம், சீவன்முத்தர் சிவமேயாகின்றனர் என்னும் உண்மையைக் காணும்போது, சிவபிரான் சீவன் முத்தராகி மக்களை ஆண்டருளுகின்றுர் என்னும் பேருண்மையையும் எளிதிற் காணக்கூடியவர்க ளாகின்றேம். ஆகவே, சீவன்முத்தர் இலக்கணத்தோடு, சிவபிரான் ஞானகுரவனுய் ஆன்மாக்களை ஆண்டருளுதல் பற்றிச் சைவநூல் சொல்லும் பெற்றியை இப்பொழுது பார்ப்போம்.

"ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு
தீமையிலை நாடுவதொன் றில்லைச்
சீலமிலைத் தவமில்லை விரதமொடாச் சிரமச் செயலில்லைத்
தியானமில்லைச் சித்தமல மில்லைக்
கோலமிலைப் புலனில்லைக் கரணமில்லைக் குணமில்லைக்
குறியில்லைக் குலமு மில்லைப்
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப் பாடலினெ
டாடலிவை பயின்றிடினும் பயில்வர்" (சி. சி.)

"இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லா மிதமகித
மிவனுக்குச் செய்தார்பா லிசையும்
அவனிவனுய் நின்றமுறை யேக னுகிஅரன்பணியி
னின்றிடவு மகலுங் குற்றம்
சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி யென்றும் செய்ததெனக்
கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனுகி நின்றுகொள்வன் பரிவாற் பாதகத்தைச்
செய்திடினும் பணியாக்கி விடுமே" (சி. சி.)

"மன்னவன்தன் மகன்வேட ரிடத்தேதங்கி வளர்ந்து அவனை
அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப் பெருமையொடும்
தானுக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத் துணைவனையும்
அறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னும்அருட் குருவாகி வந்தவரி னீக்கி மலமகற்றித்
தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்" (சி. சி.)

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே" (சி. போ.)

எனவரும் செய்யுள்களில், சீவன்முத்தரோடு ஞானகுர வன் பற்றிய பல உண்மைகள் அறியவருகின்றன.

சீவன்முத்தர் சிற்றறிவும் சிறுதொழிலுமுடையா ரல்லர்; அவர் சிவமேயாயிருப்பர்; பிறவாறன்றி, பாலர் உன்மத்தர் பசாசின் வயப்பட்டவர்போல் பாடல் ஆடல் களோடு உலாவினும் உலாவுவர். சீவன்முத்தரோடு சிவபிரான் பிரிப்பின்றிநின்று அவர் செயலெல்லாம் தம் செயலாக்கிநிற்கும். இவ்வாறு நின்று, ஐம்புலன்களின் வழியிற்சென்று இறைவனை நினையாது இருவினையியற்றி இன்ப துன்பங்கள் பொருந்திய பிறவிப் பெருங்கடலுட் சிக்கிக்கிடக்கும் உயிர்களுக்கு உண்மை உணர்த்தி உல வாத பேரின்ப வாழ்வளித்தற்குக் குருமூர்த்தியா யெழுந்தருளும். அவ்வா றெழுந்தருளித் தம் வயப் படுத்தி, உயிர்களை ஆண்டருளும் என்னும் உண்மைகள் இச்செய்யுள்களில் உணர்த்தப்பெற்றுள்ளன. கொழும் புத்துறையில் கோயில் கொண்டருளிய சிவயோக சுவாமி களும் இவர்களுள் ஒருவராய் உலகில் நடமாடியதை அருள்கொண்டறிவார் அறிவர்.

சிவபிரான் குருமூர்த்தியா யெழுந்தருளி ஆன்மாக் களை ஆண்டருளுதல் "தீக்கை" மூலமென்று சைவநூல் சொல்லுகின்றது. அத்தீக்கை ஆன்மாக்களின் பக்குவத் திற்கேற்ப வேறுபடும். அவை, நயனதீக்கை, பரிச தீக்கை, வாசகதீக்கை, மானததீக்கை, சாத்திரதீக்கை,

யோகதீக்கை, ஔத்திரிதீக்கை என்பன. இவற்றுள் முந்திய ஆறும் ஈற்றில் நிற்கும் ஔத்திரிதீக்கைக்கு அங்கமாகவும் தனித்தும் செய்யப்படும். தீக்கை மற்ருெருவாறு இருவகையாயும் அமையும். அவை கிரியாவதி, ஞானவதி என்பன. குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவம், ஆகியவற்றைக்கொண்டு, புறத்தே ஓமத்தோடு செய்யப்படுவது கிரியாவதி எனப்படும். இவற்றை மனத்தாற் கற்பித்து அகத்தே செய்யப்படுவது ஞானவதி எனப்படும். மந்திரசெப வேறுபாட்டாலும் தீக்கை மற்ருெருவாறு இரு வகைப்படும். இவை நிர்ப்பீசதீக்கை, சபீசதீக்கை என்பன. பீசாக்கரமாகிய பிரணவமின்றிச் செபித்தல் நிர்ப்பீசம் எனப்படும். பிரணவத்தோடு செபித்தல் சபீசமெனப்படும். அன்றியும் அதிகாரதீக்கை, நிரதிகாரதீக்கை எனத் தீக்கை இன்னுமொருவாறு இரு வகைப்படும். தகுதி வாய்ந்த அறிவுடையோர் அதிகாரதீக்கைபெற்று ஆசாரியர்களா யமைவர். ஏனையோர் நிரதிகாரதீக்கை பெறுவர். இவ்வாறு தீக்கைகள் பெற்றுச் சாதனை செய்துவரும் ஆன்மா, ஞானபரிதத்தை யெய்திய தாகின்றது.

சமய குரவர்களாகிய திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோரின் திருச்சரிதைகள் சரியை, கிரியை, யோக, ஞான சாதனைகளை முறையே விளக்குவன. இவைகளின் நெறி அன்புநெறி எனப்படும். குருபரம்பரைச் சிறப்பைக் குன்றின்மேல் விளக்குப்போற் காணத்தந்த சந்தானகுரவரின் நெறி அறிவுநெறி எனப்படும். தேவார திருவாசகம் முதலியவை அன்புநெறிக்கும், சித்தாந்த சாத்திரங்கள் அறிவுநெறிக்கும் அறிகுறிகளாகும். இவ்வாறு கூறப்பெற்றதனுல் அன்புநெறியும் அறிவுநெறியும் வேறுபட்டவை யென்று கொள்ளற்க. அன்பு மிகுந்து அறிவு சிறத்தலால் ஒன்று அன்புநெறி என்றும், அறிவு மிகுந்து அன்பு சிறத்தலால் மற்றது அறிவுநெறி என்றும் கூறப்

பெறுகின்றன. அன்பும் அறிவும் ஒன்ருேடொன்று பிணைந்து இணைபிரியாதவை. சரியை, கிரியை, யோக, ஞான சாதனைகள், அன்புநெறி, அறிவுநெறி ஆகிய இரண்டுக்கும் பொதுவானவை என்பது இவ்விடத்தில் அவதானிக்க வேண்டியது.

அன்புநெறியும் அறிவுநெறியும் இணைபிரியாதவை என்பது உள்நின்றும் முன்நின்றும் உணர்த்தியருளிய கொழும்புத்துறைக் கோமானிடத்தில் நாம் இன்று கண்கூடாகக் காணக்கூடியதா யிருந்தது.

அப்பெருமானுர் அருளிய நற்சிந்தனைகளின் சில பகுதிகளைச் சிந்தித்தல் இவ்விடத்திற் சாலப் பெரும்பயன் தருவதாகும்.

"நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. அது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்ருய்ப் பதியக்கடவது. ஆனுல், நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது, தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனைசெய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர். இப்படிக்கு அவனே நானே"

"எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக் கடம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க

தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்

இவ்வண்ணம்,

ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமென் ''

x x x x

''முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெய் யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலை தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல் தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றெழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல் வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே '' (நற்சிந்தனை)

இவை வாசகதீக்கையின்பாற்பட்ட அருண்மொழிகளாகும். பொதுவாக அருளப்பெற்ற இவற்றோடு, பக்குவத்துக்கேற்றவாறு தனித்தனி அருளப்பெறும் அருண்

மொழிகளும் உள. ஏனைய தீக்கைகளும் பக்குவத்துக் கேற்றவாறமையும்.

"பரம வஞ்செழுத்து மொன்றும் பராபரம்"

மணிவாசகப்பெருமானது திருச்சரிதையைச் செப்பும் திருவாதவூரடிகள் புராணத்தில் ஓரிடத்திற் காண வந்த முக்கியமான மூன்று சிவநெறிப் பொருள்களுள் மூன்ருவதாகிய "பரம வஞ்செழுத்து மொன்றும் பராபரம்"பற்றிச் சிந்திக்கும் பெரும்பேறு இப்பொழுது எமக்குக் கைவருவதாகின்றது. திருவைந் தெழுத்தின் சிறப்பே செப்புந்தரத்தன்று. திருவைந் தெழுத்தே அப்பெற்றியதென்ருல், ஐந்தெழுத்து ஓரெழுத்தாதலும், அது சிவபரம்பொருளே எனத் தெளிதலும் சிந்தையின் செயலுள் அமையுமா? அமையுமாறில்லை. எனவே, உயிர்க்குயிராய் உள்நின்றும் குருமூர்த்தியாய் முன் நின்றும் உணர்த்தியருளும் சிவபிரானது திருவருள் வழியில் நின்று "அவனே நானே" என்ற சாதனையிலமர்ந்து, சிந்தித்தலே இங்கே நிகழ்வதாகும்.

சிரோமணிகளாய் விளங்கும் சைவ சாதனங்கள் மூன்று. அவை: திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் என்பன. பஞ்சாக்கரம் அல்லது திருவைந்தெழுத்தின் சிறப்புக்கள், சமயாசாரியமூர்த்திகள், சந்தானுசாரிய மூர்த்திகள், திருமூலநாயனுர் முதலிய அருளாளர் வாயிலாய் அருளப்பெற்ற சைவத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றிலும் 'சிவ்தொண்டன்' வாயிலாய் அருளப்பெற்ற நற்சிந்தனையிலும் பலவாறு அருளப்பெற்றுள்ளன.

திருவைந் தெழுத்தின் தனிச்சிறப்பு

வேத சிவாகமங்கள் ஏனைய அருள்நூல்கள் எல்லாம் பேசுவது திருவைந்தெழுத்துப் பற்றியே. திருவைந் தெழுத்தின் உண்மை உணர்வார்க்கு இவ்வுண்மை தெளிவாகும் என்று,

"அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகும்" (திருவருட்பயன்)

எனவரும் அருட்பாவிலும், வேத சிவாகமங்கள், புரா ணங்கள் அருட்டொழில் ஐந்தியற்றும் அருள் நடம், ஐந் தொழிலின் பெறுபேருகிய பரமுத்தி ஆகிய எல்லாம் திருவைந்தெழுத்தே என்று,

"அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும்—அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் யாவைக்கு மப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்" (உண்மைவிளக்கம்)

என்னும் அருட்பாவிலும் மந்திரங்களாயும், நான் மறைகளாயும் தேவர்களின் சிந்தையிலிருந்து அவர்களை ஆண்டருளுவதும், யாகாக்கினியை வளர்க்கும் அந் தணர்களால் அந்திக் காலத்தில் ஓதப்பெறுவதும் திரு வைந்தெழுத்தே என்று,

"மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே"
(திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்)

எனவரும் தேவாரத்திலும், பிறப்பிறப்புக்களின் கார ணத்தைக் கண்டு அதை நீக்கவல்ல தபோதனர்களுக்கு அருள்நெறி காட்டும் பெற்றியது திருவைந்தெழுத்து என்று,

"குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வரும்வழி மாள மறுக்கவல் லார்கட்கு
அருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே".

எனவரும் திருமந்திரத்திலும்,

"ஐந்தெழுத் துள்ளே யனைத்தையுங் கண்டேன்
சஞ்சலந் தீர்ந்தேன் தனிமைபெற் றேனே"

என்று நற்சிந்தனையிலும் அருளப்பெற்றிருத்தலை அருள் வழிநின்று உன்னும்பொழுது திருவைந் தெழுத்தின்

தனிச்சிறப்பை ஒருவா றுணர்ந்து உலவா இன்பம் பெறலாம்.

## திருவைந் தெழுத்தின் வகை

தூலபஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம், காரணபஞ் சாக்கரம், மகாகாரண பஞ்சாக்கரம், மகாமனு என ஐந்தெழுத்து ஐந்து வகைப்படும். நமச்சிவாய, சிவாய நம, சிவாய, சிவ, சி என்பன முறையே, தூல, சூக் கும, காரண, மகாகாரண பஞ்சாக்கரங்களும் மகா மனுவுமாகும். (பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த சங்கிரக விளக்கம்) தூலபஞ்சாக்கரம் தொடக்கம் மகா மனு ஈருக அருட்கண்ணே கண்ணுகக்கொண்டு பார்க் கும்பொழுது ஐந்தெழுத்து ஒரெழுத்தாகுந் தன்மையை அடியார் உணர்வர்.

## தூலபஞ்சாக்கரம்

தூலபஞ்சாக்கரம் "நமசிவாய" என்பது. இது யாவர்க்கும் பொதுவானது. "தூலம்" என்ற அடையை உற்றுநோக்குக. உலகவாழ்க்கையில் ஈடுபடுவோர் யாவ ரும் ஓத வேண்டியது. எவ்வித இடரையும் நீக்க வல்லது. எவ்வித பாவத்தையும் அகற்றுந் தன்மையது. எல்லையில்லா இன்பந் தருவது.

"நமசிவய" என்னும் கனியானது மிக இனிமை யானது. அது உலகில் ஒப்பற்ற கனியாயுள்ளது. அதைத் தின்று பார்த்தால் தெவிட்டாத இன்பந் தரும் எனக் கண்டுகொண்டேன் என்பதை,

"ஒன்றுகண் டேனிவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி
மென்றுகண் டாலது மெத்தென் றிருக்கும்
தின்றுகண் டாலது தித்திக்குந் தானன்றே"

(திருமந்திரம்)

என்று திருமூலநாயனுர் கூறுகின்ருர். எவ்வித இடரையும் நீக்கவல்லதும் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலினுள் இட்டாலும் அமிழ்ந்தி இறக்கவிடாது, கல்லே தெப்ப மாகிக் கரையேறச் செய்யத் தக்கதும் என்பதை,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே" (தேவாரம்)

என்று திருநாவுக்கரசுசுவாமிகள் கூறுகின்றார். அதை அன்புடன் ஓதுபவர்களைக் கண்டு இயமதூதர்களே அஞ்சுவார்கள் என்பதை,

"இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலா
னயம்வந் தோதவல் லார்தமை நண்ணினு
னியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னுமை நமச்சி வாயவே" (தேவாரம்)

என்பதனாலும், அதை ஓதுவதனால் எவ்வித பாவமும் அற்றுப்போகும்; செல்வமும் பெருகும் என்பதை,

"மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமா
னந்தி நாம நமச்சி வாயவே"

என்பதனாலும் திருஞானசம்பந்த சுவாமிகள் கூறுகின்றார். ஆகாயத்தைப் பொருந்த அடுக்கிய விறகுக்குவியலுள் நெருப்புப் புகுமானால் அவ்விறகுக் குவியல் எவ்வாறு எரிந்து ஒழிந்துபோகுமோ அவ்வாறு எவ்வித பெரும் பாவத்தை ஒருவர் செய்திருந்தாலும் இதை ஓதுவதனால் அது அற்றுப்போகும் என்பதை,

"விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே"

என்று திருநாவுக்கரசுசுவாமிகள், எமக்கு அருளியிருப்பதை உன்னும்பொழுது இதன் பெருமையும் இதனை ஓதுவதனால் உளதாகும் பெரும்பயனும் இனிது புலனாகும். "வேத நான்கினு மெய்ப்பொருளாவது" இதுவே எனக்கண்டு,

"மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே"

என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளியவாறு இதை எந்த நேரமும் இடையறாது ஓதுதலை இலக்காகக் கொண்டு சாதனை செய்தல் வேண்டும் என்று நாம் பணிக்கப்பெறுகின்றோம்.

"அன்பே சிவமென ஆன்றோ ரிசைத்த
இன்பந் ததும்பும் இனியவா சகத்தை
இன்னு மறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்
காக்க வேண்டும் கடைக்கண் ணாலே
நோக்க வேண்டும் நூல்வல் லோனே
சேர்க்க வேண்டும் திருவடி யதனில்
ஆர்க்கு முணர அரியபெம் மானே
ஐயனே அரசே ஆருயிர்க் குயிரே
வையக நடனஞ் செய்யுமா தவனே
பொய்யுங் கொலையும் புலையுந் தவிரவும்
சைவ மோங்கவுஞ் சத்தியந் தழைக்கவும்
தெய்வமுண் டென்னுஞ் சித்தந் திகழவுங்
கைவினை செய்து கழலடி போற்றவும்
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்யவும்
மெய்யடி யார்கள் மேன்மேற் கிளைக்கவும்
தையலார் தம்மைத் தாயெனப் பேணவும்
நைந்துநைந் துருகி நைந்து
நமச்சி வாயவென நாம்வாழ் குவமே"

என வரும் நற்சிந்தனையும் எம் சிந்தனையில் இங்கே இனிது இடம்பெற வேண்டியதாதல் காண்க.

## சூக்கும பஞ்சாக்கரம்

சூக்குமபஞ்சாக்கரம் "சிவாயநம" என்பது, இது சூக்குமமானது; நுண்ணியது. நுண்ணிய பொருள் எல்லாம் நன்குநிறைந்து சிறந்து விளங்குவது. வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகிய "நமசிவய" எனும் உலகுக்கொரு கனியை உண்பதனால் எய்தப் பெறுவது.

உலகுக்கொரு கனியெனவும் வேதநான்கினும் மெய்ப் பொருளாவது எனவும் விதந்தோதப்பெறும் ''நம சிவய''வுக்கும் இதற்குமுள்ள வேறுபாடு ''நம''முதலாய் ஓதப்பெறுவதும் ''சிவ'' முதலாய் ஓதப்பெறுவதுமே யாம். இவ்வேறுபாட்டிலுள்ள பொருளமைதியோ நனி மிகப்பெரிது. அதுபற்றி, ஐந்தெழுத் தோதுதல்பற்றி உன்னும்போது அறிதலாகும். ஆயினும் இப்பொழுதும் ஒரு சிறிது அறியவேண்டியதாகின்றது.

தூலபஞ்சாக்கரமாகிய ''நமசிவய'' உலக வாழ்க் கையில் உறைத்து நிற்போரால் ஓதப்பெறுவது. சூக்கும பஞ்சாக்கரமாகிய ''சிவயநம'' முத்திகாமிகளால் ஓதப் பெறுவது. இக்காரணத்தால் இது முத்திபஞ்சாக்கர மென்று போற்றப்பெறும். இத்தொடர்பில் ஆசங்கை ஒன்று காணக்கிடத்தலின் அதுபற்றித் தெளிவுபெறுதல் இவ்விடத்தில் வேண்டப்படுவதொன்றாகும்.

''எவர்க்குமெய்ஞ் ஞான மாமஞ் செழுத்தையு முணர்த்த வேண்டி
யவத்தொழி லகற்றி யாளுஞ் சிவத்தைமுன்னாக மாறித்
தவப்பெரு வடிவங் கொண்டார் தண்டமிழ்பாடு மன்பர்
செவிப்புலன் வழியே சிந்தை யுறத்திரு வாய்மலர்ந்தார்''

எனவரும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுளுரையில் ''அவத்தொழி லகற்றி யாளுஞ் சிவத்தை முன்னாக மாறி'' என்பதற்கு ''சூக்கும பஞ்சாக்கரத்திலே இறு திக்கண் ணிற்கும் கேட்டைத்தரும் திரோதா யியக்கர மாகிய நகரத்தையும் மலவக்கரமாகிய மகரத்தையும் நீக்கி யகரவக்கரப் பொருளாகிய ஆன்மாவை அடிமை கொண்டருளும் பதியக்கரமாகிய சிகரத்தையும் பரை யக்கரமாகிய வகரத்தையும் அவ்யகரத்துக்கு முன்னாக அம்முறை மாறி'' என்று கூறப்பெற்றுள்ளதோடு, ''ஈண்டஞ் செழுத்தென்றது சூக்கும பஞ்சாக்கரத்தை ........ஈண்டு முன்என்றது இடமுன்னே. மாறுதல் அந்நகர மகரங்கணின்று நீங்கிய இடத்திலே சிகர வகரங்களை அம்முறை மாறிநிற்கச் செய்தலாம். அது 'பொருளரு ளான்மாப் பொருந்திடுந் திரோதை—மருவிரு மலமாய் வயங்கு மைந்தெழுத்திற் —றிரோதையு மலமுந் தீர்த்

ததினிடத்தில்—வரோதையமான வாசியை நிறுவி—வளம் பொலி சிவாய வாசியென் றுளத்தில்—விளம்புக நின்னை விளக்குமானந்த முத்தியைந் தெழுத்து மொழிந் தன மிதனைச்—சித்தசாந்தியினிற் செப்பென,—மொழிந் தான்என்பதனுனு மறிக'' என்று கூறி எடுத்துக்காட்டுத் தந்து குறித்த கருத்து வலியுறுத்தப்பெற்றுளது. இவ்வளவில் நிற்கும்போது இக்கருத்துப் பொருந்தும்; ஆயினும் ஆசங்கை ஒன்று எழுகின்றது.

''ஈண்டஞ் செழுத்தென்றது சூக்கும பஞ்சாக்கரத் தையே'' என்று உரை ஏற்றுக்கொள்ளுகின்றது. அங்ஙனமாகலின், ''அஞ்செழுத்தையு முணர்த்த வேண்டி என்பதற்கு அந்த அஞ்செழுத்தையும் உணர்த்தியருளும் பொருட்டு'' என்று கொள்ளுதல் பொருத்தமாகு மல்லவா? ''முன்'' என்பதை இடமுன்னுகக் கொள்ளாது காலமுன்னுகக் கொள்ளுவதானுல் ''நமசிவய'' என்பதில் திரோதாயி, மல, அக்கரங்களாகிய நகர மகரங்களை அவை நிற்குமிடங்களிலிருந்து அகற்றி சிகர வகரங்களை முன் நிற்கச்செய்து சூக்குமபஞ்சாக்கரமாக்கி அதன் உண்மைப் பொருளை உணர்த்தியருளும் பொருட்டு என்று கொள்ளுதற்குத் திருவாசகத்திலேயே அகச் சான்று காணக்கிடக்கின்றதே.

திருவாசகத்தில் முதற்கண் விளங்கும் சிவபுராணத்தைத் தொடங்கும்போது ''நமச்சிவாய வாழ்க'' என்று வாழ்த்திய மணிவாசகப்பெருமான் திருவேசறவு அருளும்போது,

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனுய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''

என்று தாம் ''சிவாயநம'' என்று செபிக்கும் பெரும் பேறுபெற்று இன்புறுதலை வெளிப்படுத்தினுர். ''சிவாய வாசி'' எனப்பெற்றேன் என்பதாக எவ்விடத்தி லாயினும் காணக்கிடக்கவில்லை, அன்றியும் ''எனப் பெற்

றேன்'' என்பதனுல் ''என்று ஓதப்பெற்றேன்'' என்று கொள்ளவேண்டியதாகும். ஓதுதல், தூல, சூக்கும பஞ்சாக்கரங்களுக்கே சிறப்பாயமையுமன்றி காரண, மகா காரண, மகாமனு ஆகியவற்றுக்கு அமையுமாறில்லை. இவற்றுள், காரண மகாகாரணங்கள் உன்னப்பெறுவன வாகும். ''மகாமனு'' உன்னுதலுக்கும் அப்பாற்படும், இவைபற்றிப் பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல்பற்றியும், பஞ்சாக்கரம் ஓதும்முறை பற்றியும் உன்னும்போது மேலும் விளக்கம் பெறுதலாகும்.

எனவே, மணிவாசகப்பெருமான் ஓதிய பெருமை யுடையது முத்தி பஞ்சாக்கரம் எனப்பெறும் சூக்கும பஞ்சாக்கரம் என்பதுதெளிந்து, முத்திகாமிகள் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதமுந்துவர். இவ்விடத்தில்,

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
நற்றுணை யாவது நமச்சி வாயவே''

என்று தமது அனுபவத்தையே குறிப்பிட்டுத் தூலபஞ்சாக்கரச் சிறப்பை அருளிய திருநாவுக்கரசுசுவாமிகள்,

''கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர்அரனே''

என்று அருளியிருப்பதும் கூர்ந்து அவதானிக்க வேண்டியது.

''ஓம்சிவாய நமவெனத் துதிப்போம்
நாம்சிவ மென்றுநெஞ்சில் பதிப்போம்''

''ஓம்சிவாய நமவென்று உறுதியுடன் செபித்தால்
நாம்சிவமே ஆவோம் நயந்துவா என்மனமே''

''ஓம்சிவாய நமவென்று ஓதுகின்ற அன்பருக்கு
ஆம்என்று உறுதிதந்த அத்தனே கண்வளராய்''

எனவரும் நற்சிந்தனைகளும் எமக்கு உறுதி தந்தருளுதல் காண்க.

## காரண பஞ்சாக்கரம்

"சிவாயநம" என்னும் சூக்குமபஞ்சாக்கரம் முத்தி பஞ்சாக்கரமெனவும்படும். "எவர்க்கு மெய்ஞ்ஞான மாம்" இதை ஓதுவதால் முத்தி சித்தித்தலின் இது இவ்வாறு கூறப்பெறுகின்றது. இம்முத்தி நிலையைக் காரணபஞ்சாக்கரம் குறிக்கும். மகரவக்கரம் குறிக்கும் மலசம்பந்தமும், மலசம்பந்தத்தைத் தொழிற்படுத்தி நிற்பதும் நகரவக்கரத்தாற் குறிக்கப்பெறுவதுமாகிய திரோதான சக்தியின் சம்பந்தமும் நீங்கி, எங்கும் சிவத்தைக்கண்டு இன்புற்றிருக்கும் நிலைமையை இது காணத்தருகின்றது. "சிவய" என்னும் காரண பஞ்சாக்கர அக்கரங்களில் இக்காட்சி காணக்கிடக்கின்றது.

"சிவாயநம" என்னும் முத்தி பஞ்சாக்கரத்தை முறைப்படி ஓதவே நகர மகரங்கள் நீங்கும்; அவை நீங்கவே, அருட்சக்தியின் உபகாரத்தால் சிவஞான யோகம் சித்திக்கும் என்பதோடு அந்நிலைமையைக் குறிப்பதும் அந்நிலைமையில் ஓதப்பெறுவதும் காரண பஞ்சாக்கரமே என்பதும் அக்காரணபஞ்சாக்கரமாவது "சிவாய" என்பதும்,

> "ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டவ்
> வாதி தனைவிட் டிறையருட் சத்தியால்
> தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
> ஓதுஞ் **சிவாய** மலமற்ற உண்மையே"

எனவரும் திருமந்திரத்திற் காணலாம்.

> "விண்ணி ணுர்பணிந் தேத்த வியப்புறும்
> மண்ணி ணுர்மற வாதுசி வாயவென்
> றெண்ணி ணுர்க்கிட மாஎழில் வானகம்
> பண்ணி ணுரவர் பாலைத் துறையரே"

எனவரும் அப்பர்சுவாமிகள் அருண்மொழியும் இவ்விடத்திற் சிந்திக்கத்தக்கது.

"அந்தம் ஆதியும் இல்லான் அடியரை
எந்த நேரமும் நீங்கா இறையவன்
கந்த மாமலர்ப் பாதத்தைக் கைதொழ
வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே"

எனவரும் நற்சிந்தனை பதினொன்றும் இவ்விடத்தில் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை.

### மகாகாரண பஞ்சாக்கரம்

"சிவ" என்பது மகாகாரண பஞ்சாக்கரமாகும்.

"சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகும் திருவரு ளாமே"

எனவரும் திருமந்திரத்தில் இது காணக்கிடக்கின்றது.

"சிவசிவ என்று சிந்திப்பர் தேவர்
சிவசிவ என்று சிந்திப்பர் சீவர்
சிவசிவ என்று சிந்திப்பர் முனிவர்
சிவசிவ என்னச் சிவகதி யாமே"

எனவரும் நற்சிந்தனை எம்மை ஆற்றுப்படுத்துதலும் இங்கே உற்று நோக்கவேண்டியது. சைவத் திருமுறைகளிலும், நற்சிந்தனைகளிலும் பலவேறு இடங்களில் இது பலவாறு விரவியிருத்தலைக் காணலாம்.

### மகாமனு

"சி" என்பது மகாமனுவாகும். இது ஓரெழுத்து ஏகாக்கரம், பேசாஎழுத்து, நாயோட்டு மந்திரம் என்று குறிக்கப்படும். எல்லாம் சிவத்துளடங்கி நிற்றலை இது குறிக்கும். எல்லாம் சிவமேயாதலையும் இது மற்றொரு வாறு குறிக்கும்.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்—நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி" (கொடிக்கவி)

"நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாத னிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த சோதி
நாயோட்டு மந்திரம் நாமறி யோமன்றே" (திருமந்திரம்)

என்பனவாய் வரும் திருவாக்குகளில் இதுபற்றிப் பேசப் படுதலைக் காணலாம். "பேசா எழுத்து", "நாயோட்டு மந்திரம்" "நாமறியோம்" "ஊமை யெழுத்து" என வரும் சொற்றொடர்களிற் பொருந்தியுள்ள பொருள் பற்றி நாம் பேசியும் முடியாது, பேசவும் முடியாது. பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல்பற்றிச் சைவநூல் சொல் வதைப் பார்க்கும்போது இப்பேசா எழுத்தின்பெற்றி ஒருவாறுணர்தலாகும்.

## பஞ்சாக்கரத் திருமேனி

"திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ"
(திருவாசகம்)

ஒருருவமில்லா இறைவனுக்கமைந்த திருவுருவங் களுள் பஞ்சாக்கரமும் ஒன்று என்று முன்பு அறிந்துள் ளோம். பஞ்சாக்கரத் திருமேனிபற்றி நாம் பேசமுற் படும்போது மேலே காணவந்துள்ள மணிவாசகம் எம் மனத்தில் வேரூன்றி யிருத்தல் வேண்டும். ஒரு நாமம் இல்லா இறைவனுக்கு ஆயிரந் திருநாமம் பாடச் சுவாமிகள் முற்பட்ட முறையிலேயே ஒருருவ மில்லாத அவருக்கு ஐந்தெழுத்தருளுருவம் உளதாதலை நாம் காணவேண்டியவர்க ளாகின்றோம். இவ்விடத்திலே,

"வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே"

என்று அப்பர்சுவாமிகள் அருளிய அருண்மொழியே ஆரம்ப உரையாயும் ஊன்றுகோலாயும் எமக்கு அமை கின்றது.

இந்நிலைமையில் நின்று உன்னும்போது, குருமூர்த்தியைச் சீடன் வேண்டுதலும், குருமூர்த்தி சீடனுக்கு அருளுதலுமாய் அமைந்த சில 'உண்மை விளக்க'ச் செய்யுள்கள் எம் மனக்கண்முன் ஒளிபொருந்தி விளங்குகின்றன.

"நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்ருடல் உள்ளபடி—பெற்றிடநான்
விண்ணுர் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணுர் அருளாலே சாற்று". (உண்மைவிளக்கம்)

தபோதனர்கள் கண்டு வழிபடும் பொருட்டு இறைவன் பஞ்சாக்கரத் திருமேனிகொண்டு அருள்நடம் செய்யும் பெற்றியை உணர்த்தியருளும் பொருட்டு மாணவன் குருமூர்த்தியிடம் சமர்ப்பிக்கும் வேண்டுதல் இது.

"சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனுர்
தங்கும் மகரமது தான்"

உடுக்குப் பொருந்திய திருக்கரத்திற் "சி"கரமாகவும் வீசிய திருக்கரத்தில் "வ"கரமாகவும், அபயந் தருந் திருக்கரத்தில் "ய"கரமாகவும், அக்கினி ஏந்திய திருக்கரத்தில் "ந"கரமாகவும் முயலகனுர்மீதுற்ற திருவடியில் "ம"கரமாகவும் கொண்டு இறைவன் அருள் நடம் செய்கின்ருர் என்று இங்கே அருளியுள்ளார். இவ்வரு அருளியதோட்டமையாது மற்றெரு விளக்கத்தையும் மேல் அருளுகின்ருர்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" (உண்மைவிளக்கம்)

உடுக்கேந்திய திருக்கரத்திலே, படைத்தல், அமைத்த திருக்கரத்திலே காத்தல், அக்கினி ஏந்திய திருக்கரத்திலே அழித்தல், ஊன்றிய திருவடியிலே மறைத்தல், தூக்கிய திருவடியிலே அருளல் ஆகிய ஐந்து அருட்

டொழில்களும் நிகழுமாறு அருள்நடம் புரிகின்ருர் தில் லைக் கூத்தன் என்று குருமூர்த்தி அருளிய விளக்கம் எமக்கும் ஓர் உண்மை விளக்கமா யமைதல் காண்க.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் மூர்த்தி
யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும்
அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள்
அகலிடத்தார் ஆசா ரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள் தலைப்பட்டாள்
நங்கை தலைவன் தாளே" (அப்பர்சுவாமிகள்)

எனவரும் தேவாரத்தில் "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் மூர்த்தி யவனிருக்கும் வண்ணங்கேட்டாள்" என்பது இவ்விடத்திற் சிந்திக்க வேண்டியது.

திருவைந்தெழுத்து இறைவனுக்குத் திருநாமமாயும் திருவுருவமாயும் அமைதல் இங்கே குறிப்பிடப்பெற் றுள்ளது. ஐந்தெழுத்து ஒரெழுத்தாதல்பற்றி உன்னும் போது எஞ்சிய பொருள்பற்றி அறிதலாகும்.

### பஞ்சாக்கரம் ஏகாக்கரமாகும் படிமுறை

பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல் என்றவுடன் குறி களாற் குறிக்கப்படும் ஐந்து எழுத்துக்கள் பற்றிய எண்ணமே எமது மனத்தில் முதற்கண் உதிக்கின்றது. குறித்த ஐந்து எழுத்துக்கள் ஒரெழுத்தாதற்கு இலக் கணவிதி எதுவும் அறிந்திலம். அன்றியும்,

"உற்ற குறிஅழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது—மற்றதுகேள்
ஈசனருள் ஆவி எழிலார் திரோதமலம்
ஆசில் எழுத்தஞ்சின் அடைவாம்" (உண்மைவிளக்கம்)

என்றபடி குறிகளாற் குறிக்கப்படும் எழுத்துக்கள் அழியுந் தன்மையன. ஆனால், அக்குறிகளாற் குறிக்கப் படும் பொருள்களோ என்றென்றும் நிலைத்திருப்பன. எனவே, அவ்வெழுத்துக்களாற் குறிக்கப்படும் ஐந்து

பொருள்கள் ஒரு பொருளாதல் பற்றியே நாம் அறிய முற்பட்டுள்ளோம் என்பது எமது மனத்தில் நன்கு பதிதல் வேண்டும்.

ஐந்து பொருள்கள் ஒரு பொருளாதல் யாங்ஙனம்? நான்கும் அற்றுப்போக ஒன்று நிலைத்திருக்கின்றதா? அல்லது சலவாயுவும் பிராணவாயுவும் சேர்ந்து நீராதல் போல் குறித்த ஐந்து பொருள்களும் கலந்து ஒன்றாய் விடுகின்றனவா? என்பனபோன்ற ஐய வினாக்கள் இவ்விடத்தில் எழுகின்றன. மேலே காணவந்த உண்மை விளக்கச் செய்யுளால் அறியவருவதுபோலக் குறித்த ஐந்து பொருள்களுள் எது ஒன்றுதானும் அழிவதில்லை. அப்பொருள்களிற் காணவரும் சிலமாற்றங்களால் அவை ஒன்றுதலை நாம் காண்கின்றோம். அண்டத்திலுள்ளவை எல்லாம் பிண்டத்திலுமுள்ளன என்பதனால், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுள் தன்மையில் அம்மாற்றங்கள் எவ்வளவுக்கு உண்டாகின்றனவோ அவ்வளவுக்கே குறித்த ஐந்து பொருள்கள் ஒரு பொருளாகும் பெற்றியை ஒருவர் அறிதலாகும். எனவே, ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான்'' ஆகிய இறைவன் திருவருளை வேண்டிக் குறித்த மாற்றங்கள் பற்றியும், குறித்த ஐந்து பொருள்கள் ஒரு பொருளாதல்பற்றியும் இப்பொழுது அறிய முற்பட்டுள்ளோம்.

பஞ்சாக்கரம் அல்லது திருவைந் தெழுத்துப்பற்றிச் சிந்திக்கும்போது முதற்கண் நாம் காணநிற்பது ''நமசிவாய'' என்னும் தூலபஞ்சாக்கரமேயாகும். இதன் பெருமையும் இதை ஓதுவதனால் வரும் பெரும்பயனும் எத்தன்மையவை என்பதைச் சமயாசாரியமூர்த்திகள், திருமூலநாயனார் முதலிய அருட்செல்வர்கள் தங்கள் அருண்மொழிகள்மூலம் எமக்கு அறியத்தந்துள்ளனர். இவற்றுட் சில, தூலபஞ்சாக்கரம்பற்றி முன்பு சிந்தித்த விடத்திற் காணவந்துள்ளன.

எம்பெருமானே வணக்கம் என்று ஆன்மாக்களாகிய நாம் சிவபிரானுக்கு வணக்கம் செலுத்துதல்

இதில் முதற்கண் காணக்கிடக்கின்றது. ''சிவாயநம'' என்னும் சூக்குமபஞ்சாக்கரத்திற்கும் இதற்குமுள்ள ஒரே ஒரு வேறுபாடு ''சிவ'' முதலாய் ஓதுவதும் ''நம'' முதலாய் ஓதுவதுமேயாகும். ''ஈசன், அருள், ஆவி, எழிலார் திரோதம், மலம்'' என மேலே காண வந்த உண்மை விளக்கச் செய்யுளிலே குறிக்கப்பட்ட ஐந்து பொருள்களுமே இருவித பஞ்சாக்கரங்களும் அறியத்தரும் பொருள்களாகும்.

''ஆணவம்'' எனப்படும் மூலமலம் அகற்றப்படு தற்குக் கன்மமும் மாயையும் உபகரணங்களாகின்றன. கன்மம் நிகழ்தற்கு, ''மாயேயம்'' எனப்படும் மாயா காரியங்கள் இடங்கொடுக்கின்றன. தனு, கரண, புவன, போகங்கள் எனப்படும் இம்மாயா காரியங்களையே முதற்கண் எம் ஊனக்கண்களாற் காண்கின்றோம். அவையே இன்பந்தருவன என்று நினைத்து வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறு நினைத்து வாழச்செய்து நிற்பது ஆதிசத்தி எனப்படும் திரோதான சத்தியாகும். இந்நினைவுடன் வாழ்ந்துவரும்போது இன்ப துன்ப அலைகள் மாறிமாறி மோதி எம்மை அலைத்து நிற்கின்றன. இந்நிலைமையில் இன்பத்தை வேண்டி உலக வாழ்க்கையில் உறைத்து நிற்கும்போது ''நமசிவாய'' என்னும் தூலபஞ்சாக்கரம் ஓதப்படுகின்றது. இதனால் இன்ப வாழ்வு எய்தப்படுகின்றது.

ஆயினும் இவ்வின்ப வாழ்வும் நிலைத்திருப்பதாயில்லை. துன்பமும் இடையிடையே தோன்றுகின்றது. துன்பம் பெருகுதலுமாகின்றது.

### தூலபஞ்சாக்கரம் சூக்கும பஞ்சாக்கரமாதல்

இருவினைகளும், அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும், பிறப்பிறப்புக்களும்,

''இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போவதாகு மன்னிய வினைப்பயன்கள்
தருமரன் றரணியோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்மப் பயன்களு மறுமைக் கண்ணே'' (சி. சி.)

என்றபடி மாறி மாறி நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றன. திரோதானசத்தியின் உபகாரத்தால் உலக வாழ்வு இப்படியுள்ள காரியம் என்பதை ஆன்மா உணர்ந்து நிலையான இன்பத்தை நாடுகின்றது. இந்நிலைமையிலே "சிவாயநம" என்னும் சூக்குமபஞ்சாக்கரம் குருமூர்த்தியால் உபதேசிக்கப்படுகின்றது.

இவ்விடத்திலே பின்வரும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுள்களை நினைவுகூருதல் நன்று.

"தீத்திற வினையி னாலே சிறைப்படு முயிரை யெல்லாம்
பார்த்தன ருலக வாழ்விற் பயனிலை யென்று தேர்ந்து
கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றுகு மாபோ
னித்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதி நீதி"

"வரமுடன் புவியிற் றோன்று மறையவர்க் கிறைவ ருண்மை
தருமுணர் வென்னு நாலாஞ் சத்திநி பாத மெய்தி
பரமவஞ் செழுத்து மொன்றும் பராபர முணர்த்து ஞான
குருபரன் றிருத்தாள் சென்று கூடுதல் வேண்டு மென்று"

"வளங்கெழு புவியி னுள்ள வாவியுங் காவுமோடி
விளங்கிசை வண்டு தண்டேன் மிகுமலர் தேடுமாபோ
லுளங்கொள நிமல னன்னூ லோதின ருண்மையெல்லா
மளந்தறி வுணர்ந்தநீரர் யாவரென் றுயு நாளில்"

"எவர்க்குமெய்ஞ் ஞான மாமஞ் செழுத்தையு முணர்த்த வேண்டி
யவத்தொழி லகற்றி யாளுஞ் சிவத்தைமுன் னுக மாறித்
தவப்பெரு வடிவங் கொண்டார் தண்டமிழ் பாடு மன்பர்
செவிப்புலன் வழியே சிந்தை யுறத்திரு வாய்ம லர்ந்தார்"

மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் இச் செய்யுள்களிற் சித்திரிக்கப் பெற்றிருத்தலை நாம் காண்கின்றோம்.

உலகவாழ்வில் உளதாகும் இன்பம் நிலையானதொன்றல்ல. முத்திப்பேறு பெற்றவிடத்திலேயே நிலையான இன்பம் எய்தப்படுகின்றது. அவ்வின்பத்தைப் பெறும் பொருட்டே சூக்குமபஞ்சாக்கரம் ஓதப்படுகின்றது. இக் காரணத்தாலேயே இது முத்தி பஞ்சாக்கரம் எனப்படுகின்றது.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்னும் மணிவாசகம் இவ்விடத்தில் மீண்டும் சிந்திக்க வேண்டியது.

மேலே குறிப்பிட்டவாறு, முதற்கண் உலகவாழ்வில் உறைத்து நின்று இன்ப வேட்கையுடன் தூலபஞ்சாக்கரம் ஓதிவரும் ஆன்மாவுக்கு உலக வாழ்வு நிலையான இன்பந்தருவதொன்றன்று என்பது அறியவருகின்றது. மாறிமாறி வரும் இன்பதுன்பங்கள் மூலம் இவ்வறிவைத் திரோதான சத்தி அருளுகின்றது. இவ்விடத்தில் மலசக்தியின் வலி குன்றி, மாயாகாரியங்களிலுள்ள மயக்கம் குறைந்து, மாயா காரியங்களைப் பெறுதற்குச் செய்யும் முயற்சியாகிய கன்மவேட்கையும் குறைகின்றது. பஞ்சாக்கரம் ஏகாக்கரமாகும் போது முதற்கண் உண்டாகும் மாற்றம் இதுவாகும்.

### சூக்கும பஞ்சாக்கரம் காரண பஞ்சாக்கரமாதல்

நிலையான இன்பந் தருவதாகிய முத்திப்பேறு பெறும் பொருட்டு முத்தி பஞ்சாக்கரம் ஓதப்படுகின்றது. ஆயினும் இதை ஓதுகின்ற ஆன்மாவுக்கு இதை ஓதும் அவதரத்தில் மலசம்பந்தமும் மலசம்பந்தத்தின்போது தொழிலாற்றி நிற்கும் திரோதானசத்தியின் சம்பந்தமும் ஓரளவுக்கு உண்டு. இவை உண்டென்பது "சிவாயநம" என்னும் முத்தி பஞ்சாக்கரத்தில், திரோதான சத்தியைக்குறிக்கும் நகரமும் மலத்தைக்குறிக்கும் மகரமும் ஈற்றில் நிற்பதால் அறியக்கிடக்கின்றது. இவை உண்டு என்ற போதும் நகர மகரங்கள் ஈற்றில் நிற்பதால் இவை வலிகுன்றி நிற்கின்றன என்பதும் சிவத்தையும் அருட்சத்தியையுங் குறிக்கும் சிகரவகரங்கள் முதற்கண் நிற்பதாற் சிவப்பிரகாசம் மிகுந்துள்ளதென்பதும் அறியவருகின்றன. மலவலியும் திரோதானசக்தியின் செயலும் அற்றுப்போக, யாண்டும் சிவத்தையே தரிசித்து நிற்குஞ் சீவன்முத்தி நிலையை ஆன்மா எய்து

கின்றது. இந்நிலைமையிலே ''சிவாயசிவ'' என்னும் காரண பஞ்சாக்கரம் ஓதப்பெறுகின்றது. நகரமகரங்கள் நீங்க, சிகரவகரங்கள் அவ்விடத்தில் வருதலால், ஊனக் கண்களால் உலகைப் பார்த்து உலகவாழ்விற் சம்பந்தப் படுதல் சிறிதுமின்றிச் சிவத்தையே தரிசித்துப் பேரின்ப மடையும் நிலைமை இக்காரணபஞ்சாக்கரத்தாற் சித்தி ரிக்கப் பெற்றிருத்தல் காண்க. சிவம், அருட்சத்தி, ஆன்மா மூன்றுமே இந்த அவதரத்தில் காணவருகின்றன. இக்காரணத்தால் சிவாய என்பதற்கும் சிவாயசிவ என்ப தற்கும் பேதமின்று.

### காரண பஞ்சாக்கரம் மகாகாரணமாதல்

''சிவாயசிவ'' என்னும் காரணபஞ்சாக்கரம் சீவன் முத்திநிலையில் ஓதப்பெறுகின்றது. இந்த அவதரத்தில் மலவலியும் திரோதான சத்தியின் செயலும் அற்ற போதும் ஆன்ம உணர்வு நிகழ்ந்து கொண்டேயிருக் கின்றது. சிவமும் அருட்சத்தியும் இருபக்கமும் நிற்க, இடையில் ''ய'' கரம் நிற்பது இவ்வுண்மையை அறி யத்தருகின்றது. ஆன்ம உணர்வும் அற்றுச் சிவமேயாய் விளங்கும் நிலைமையைச் சித்திரிக்கின்றது ''சிவ'' என் னும் மகா காரண பஞ்சாக்கரம். இங்கே யகரமும் மறைகின்றது. பஞ்சாக்கரம் ஏகாக்கரமாகும் நிலை இது வரகும்.

### மகா காரணம் மகாமனு வாதல்

சிவபரம் பொருளுடன் இரண்டறக் கலந்து உரை யுணர்விறந்து நிற்கும் நிலைமையை ''சி'' என்னும் மகாமனு குறிக்கும். இங்கே சிவம் சத்தி என்ற பேத மூம் இலதாகின்றது.

### பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல் பற்றி ஒரு விளக்கம்

''நமசிவாய'' என்னும் தூலபஞ்சாக்கரம் ''சிவாய நம'' என்னும் சூக்கும பஞ்சாக்கரமான போது, சிவம், அருட்சத்தி, ஆன்மா, திரோதானசத்தி, மலம் ஆகிய ஐந்து பொருள்களுள், நடுவேநிற்கின்ற யகரமாகிய ஆன்மாவின்கண் மலவலிகுன்றுதலும், திரோதான

சத்தியின் செயல் குறைதலும் ஒருபால்நிகழ, சிவத்தோடு ஆன்மாவைச் சேர்த்தலாகிய அருட்சத்தியின் தொழில் ஒருபால் கூடுகின்றது. நகரமகரங்களின் செயல் அற்றுப்போதற்கு ஆரம்ப நிகழ்ச்சி இது. ''சிவாயசிவ'' ஆகும்போது நகரமகரங்களின் செயல் அற்றுச் சிவத்தோடு ஆன்மாவைச் சேர்த்தலாகிய அருட்சத்தியின் செயல் நிகழ்கின்றது. ''சிவ'' ஆகும்போது ஆன்ம உணர்வை அகற்றி ஆன்மா சிவத்தைத் தரிசிக்கச் செய்கின்றது அருட்சக்தி.

''மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயுமதே நிட்டை யென்று னெழிற்கச்சி யேகம்பனே''

என்று பட்டினத்தடிகள் அருளியுள்ளது இவ்விடத்தில் நன்கு சிந்தித்தமைய வேண்டியது. மலம், ஆன்மா, திரோதானசத்தி, அருட்சத்தி ஆகிய நான்கும் சிவமாகிய பேரொளிக்குள் மறைந்துநிற்றல் இவ்வாறு காண வந்துளது. இஃதே பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல்பற்றி நாம் அறியவரும் விளக்கம்.

## பஞ்சாக்கரம் ஓதுதல்

பஞ்சாக்கரம் ஓதுதல் பற்றி உன்னும் போது இதுகாறும் பஞ்சாக்கரம் பற்றி நாம் அறிந்த உண்மைகள் எல்லாம் ஓரளவுக்கு எம் உள்ளத்திற் பதிந்திருத்தல் வேண்டும். இவை இவ்வாறிருப்ப, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தமது சைவவினுவிடையிலே, பஞ்சாக்கர வியலிலே பொதுவிதியாய் வெளியிட்டுள்ள சில வினுவிடைகளும் எம் உள்ளத்தில் இடம்பெறுதல் இவ்விடத்தில் வேண்டப்படும். அவை பின்வருமாறு:-

### செபமாவது யாது?

தியானிக்கப்படும் பொருளை எதிர்முகமாக்கும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தை உச்சரித்தலாம்.

### மந்திர செபம் எத்தனை வகைப்படும்?

மானசம், உபாஞ்சு, வாசகம் என மூவகைப்படும்.

[மானசமாவது நாநுனி உதட்டைத் தீண்டாமல் ஒருமைபொருந்தி மனசினுலே செபித்தலாம்; உபாஞ்சுவாவது தன் செவிக்கு மாத்திரம் கேட்கும்படி நாநுனி உதட்டைத் தீண்ட மெள்ளச் செபித்தலாம்; வாசகமாவது அருகிலிருக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்படி செபித்தலாம்.]

### இம்மூவகைச் செபமும் பலத்தினுல் ஏற்றக்குறைவு உடையனவா?

ஆம்: வாசகம் நூறு மடங்கு பலமும், உபாஞ்சு பதினுயிர மடங்கு பலமும், மானசம் கோடிமடங்கு லமுந்தரும்.

இன்ன இன்ன பொழுது செபித்தவர் போகமோட்சங்களுள் இன்னது இன்னது பெறுவர் என்ற நியமம் உண்டா?

ஆம்: பிராணவாயுவானது இடப்பக்க நாடியாகிய இடையிலே நடக்கும்போது செபித்தவர் போகத்தையும், வலப்பக்க நாடியாகிய பிங்கலையிலே நடக்கும்போது செபித்தவர் மோட்சத்தையும், நடு நிற்கு நாடியாகிய சுழுமுனையிலே நடக்கும்போது செபித்தவர் போகம் மோட்சம் என்னும் இரண்டையும் பெறுவர்.

### ஸ்ரீபஞ்சாக்கர செபத்தாற் பயன் என்ன?

ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பொருளை அறிந்து, சிவபெருமான் ஆண்டவன், தான் அடிமை யென்னுமுறைமையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக்கொண்டுவரின், விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற்போல, ஆன்மாவினிடத்தே சிவபெருமான் பிரகாசித்து, மும்மலங்களும் நீங்கும்படி ஞானனந்தத்தைப் பிரசாதித்தருளுவர்.

## ஓதும் தகுதியுடையவர் யார்?

"மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய், சிவதீட்சை பெற்றவராய், உள்ள வர்,'' தகுதியுடையவர் ஆவர். இது பொது விதி; வேத சிவாகம வழியில் வெளியிடப் பெற்றது. இதற்கு விலக்கு முண்டு. சமயாசாரிய மூர்த்திகள் அருளிய அருண் மொழிகளிலே அதைக் காணலாம்.

"கொல்வா ரேனுங் குணம்பல நன்மைக
ளில்லா ரேனு மியம்புவ ராயிடி
னெல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரா
னல்லார் நாமம் நமச்சி வாயவே''

"மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமா
னந்தி நாம நமச்சி வாயவே''

நரக மேழ்புக நாடின ராயினு
முரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னும நமச்சி வாயவே"

இவை அப்பர் சுவாமிகள் அருளியவை. இவை போன்ற பிறபல நாம் காணக்கிடக்கின்றன.

நாம் ஒளி நெறிக்கட் செல்லுமாறு எம்மை ஆண் டருளி அருள் நடம்செய்த சிவஞானதேசிகமூர்த்தி யோகசுவாமிகளின் அடியார் குழாத்துளே, பல்வேறு சமயத்தினர், பல்வேறு சாதியினர், பல்வேறு ஒழுக்க நெறியினர் உளர். எனினும், அன்னவர் எல்லோருடைய உள்ளங்களும், சுவாமிகளின் திருவுள்ளத்தில் இடம் பெறும் தனிப்பெருமை வாய்ந்த ஒருமைப்பாடு ஒன்று ஒளிர்கின்றது. இக்காரணத்தால் சுவாமிகளின் திரு நாமம் இவர்கள் எல்லோருக்கும் என்றென்றும் தித் திக்கும் இன்னமுதமாய் விளங்குதலைக் கண்கூடாக நாம் காண்கின்றோம். இதற்கு, பரம இரகசியமான காரணமொன்றுண்டு. இப்பரம இரகசியம் மேலே

12

விளங்கும் அப்பர் சுவாமிகளின் அருள்வாக்குகளிலும் மறைந்து கிடத்தலை இவ்விடத்தில் நாம் அவதானித்தல் வேண்டும்.

### எப்பொழுது ஓதலாம்?

நாவலரவர்கள் சைவ வினுவிடையிலே வெளியிட்டுள்ள வினுவிடை ஒன்று இவ்விடத்தில் அவதானிக்க வேண்டியதாயமைந்துள்ளது.

வினு:- "ஸ்ரீ பஞ்சாட்சரசெபம் எவ்வெக்காலங்களிலே விசேஷமாகச் செய்யத்தக்கது?"

விடை:- "அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிரண்டு மாசப்பிறப்பு, கிரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே, புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து தியானஞ் செப முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும்" இது பொதுவிதி. பஞ்சாக்கரசெபம் செய்ய வேண்டியவாறு பலர் செய்ய மாட்டாதிருத்தலால் இவ்விதி இவ்வாறமைந்துளது. இதற்கு ஒருவாறு விலக்காயமைந்து சிறப்புவிதியாய் விளங்கும் மற்றொரு விதி பின்வரும் அருள் மொழிகளிற் காணக்கிடக்கின்றது.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

கல்லோடு சேர்த்துக்கட்டி, சமணர்கள் தம்மைக் கடலில் இட்டபோது, திருவைந்தெழுத்தை ஓதிச் சோதி சொரூபியாகிய சிவபிரானை அன்போடு தாம் பிரார்த்தித்தாரென்றும், அதனுல் அக்கல்லானது தெப்பமாயமைந்து தம்மைக் கரையேற்றியது என்றும் வெளியிட்டு, அவ்வாறு நாமும் திருவைந்தெழுத்தை ஓதி, சிவபிரானை வழிபடுவோமானுல் எந்த நேரத்திலும் எந்த இடரிலுமிருந்து நீங்கி இன்புறுதலாகுமென்று எம்மை ஆற்றுப்படுத்தி இங்கே அருளியுள்ளார் அப்பர்சுவாமிகள்

"அஞ்சினார்க்கர ணாதியென்றடி யேனுநான்மிக வஞ்சினே
னஞ்சலென்றடித் தொண்டனேற்கரு ளல்கினுய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந் தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே"

அஞ்சி வழிபட்டார்க்கு அரணாயமைகின்றார் சிவ பிரானென்றறிந்து, அஞ்சியவராகிய தாமும் திருவைந் தெழுத்தோதி வழிபட்டபோது அஞ்சற்க என்று 'அவர் காத்தருளினார் என்று வெளிப்படுத்தியதோடு, திருவைந் தெழுத்தை எந்த நேரமும் இடையறாது ஓதவேண்டு மென்பதாய் இங்கே அருளியுள்ளார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே"

மார்க்கண்டேயநாயனார் நெக்கு நெக்குருகிச் சிவ பிரானை வழிபட்டு இயமனையே வென்றார் என்ற உண் மையை அறியத் தந்து, நாள்தோறும் திருவைந்தெழுத் தோதி அவ்வாறு வழிபட்டு உய்தியடையுமாறு இங்கே எமக்கு அருளியுள்ளார் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி கள். அஃதும் விழித்திருக்கும் போது மாத்திரமன்றி, உறங்கும்போதும், வாழும்போது மாத்திரமன்றி சாகும் போதும் செய்யவேண்டுமென்று அருளியுள்ளதன் பொரு ளாழம் ஆழ்ந்து சிந்தித்துத் தெளிய வேண்டியதொன்று. உயிர் அடுத்த பிறவியை எடுத்தல் அது உடலைவிட்டு நீங்கும்போது கொண்டுள்ள மனநிலையைப் பொறுத்த தாகலின் இறக்கும்போது ஓதுதல் இன்றியமையாத தாம்.

"ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே

என்று பட்டினத்தடிகள் அருளியுள்ளமையும் காண்க. "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி

வாயவே'' என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளியிருத்தலும் இவ்விடத்திற் சிந்திக்க வேண்டியதொன்ருகும்.

திருவைந்தெழுத்து எந்த நாளும், எந்த நேரத்திலும், ஓதத்தக்கது; ஓதவேண்டியது என்று இவற்ருல் நாம் அறிவுறுத்தப் பெற்றிருத்தல் காண்க.

## ஓதும் முறை

திருவைந்தெழுத்து ஓதும் முறை அவரவர் பக்குவத்துக்கேற்றவாறமையும். அது குருமுகமாயறிய வேண்டியது. ''ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை எப்படிப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்?'' என்ற வினவை நிகழ்த்தி, .''தத்தம் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்குந் தீக்கைக்கும் ஏற்பக் குருமுகமாகவே பெற்றுக்கொள்ளல்வேண்டும்'' என்று சைவவினுவிடையில் நாவலரவர்கள் விடையளித்திருத்தல் இவ்விடத்தில் அவதானிக்கப்படவேண்டும்.

> ''ஒன்றுகண் டேனிவ் வுலகுக் கொருகனி
> நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி''

என்று திருமூல நாயனுர் அருளியவாறு யாவர்க்கும் பொதுவாயமைவது ''நமச்சிவாய'' என்னும் தூலபஞ்சாக்கரம். இதை முறைப்படி ஓதுவோர் ''அருள்வழி காட்டுவதஞ்செழுத் தாமே'' (திருமந்திரம்) என்றபடி அருள் வழிகாட்டப் பெறுவர். பஞ்சாக்கரம் ஏகாக்கர மாதல்பற்றிச் சிந்தித்த பொழுது, அருள் வழியில் எந்தெந்த நிலைமையிலுள்ளவர் எந்த எந்தப் பஞ்சாக்கரத்தை ஓதுவர் என்பது ஒருவாறு அறியவந்துளது. ஆகவே, ஆண்டுத் தெளிவுபெருத ஒரு துறைப்பொருள் தெளிவு பெறுதலே ஈண்டு நிகழ்வதொன்ருகும். அது பற்றி இப்பொழுது உன்னுதும்.

தூலபஞ்சாக்கரத்தை ஓதி அருள்வழியில் நிற்போர்,

> ''தெள்ளமு தூறச் சிவாய நமவென்று
> உள்ளமு தூற வொருகால் உரைத்திடும்...'' (திருமந்திரம்)

என்றபடி ''சிவாயநம'' என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதுவர். அவ்வாறு ஓதும்பேறு பெருதவர்

"வெள்ளமு தூறல் விரும்பியுண் ணுதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே"

என்றபடி பிறப்புக்களில் அகப்பட்டுச் சுழன்று திரிவர். இவ்விடத்தில்,

"சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்—இவனின்று
நம்முதலா வோதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று"

"ஆதி மலம்இரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமுந் தீர்வாகா—போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே"

எனவரும் உண்மைவிளக்கச் செய்யுள்கள் எமக்கு வேண்டிய விளக்கம் தருகின்றன. இத்தொடர்பில்,

"மாலார் திரோத மலமுதலா மாறுமோ
மேலாசு மீளா விடின்"

'ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு"
பாராது மேலோதும் பற்று"

"சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி"

என்று திருவருட்பயனும் எமக்குத் தெளிவு தருகின்றது.

இவ்வாறு சூக்குமபஞ்சாக்கரம் ஓதும்பேறு பெற்றோர் முத்திப்பேறுற்றவராகின்றனர். இந்நிலைமையை,

'ஆசினவா நாப்ப ணடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு" (திருவருட்பயன்)

என்னும் குறட்பா சித்திரித்துக் காண்பிக்கின்றது. "சிவாயநம" என்னும் சூக்குமபஞ்சாக்கரத்தில் 'ய'கரமாகிய ஆன்மா, வகர நகரங்களாகிய அருட்சத்தி திரோதான சத்திகளுக்கிடையே நிற்றல் காணக்கிடக்கின்றது. முத்திப்பேறுற்ற ஆன்மாவுக்கு நகரத்தின் தொடர்பு இருக்கமாட்டாது; அது, "சிவயசிவ"

என்னும் காரணபஞ்சாக்கரத்திற் காணவருவதுபோல், அருட்சத்திக்கும் சிவத்துக்குமிடையில் "வாசியிடை நிற்கை வழக்கு" என்றபடி நிற்கும் அப்படிநிற்கவே,

"வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு" (திருவருட்பயன்)

என்றபடி, அருட்சத்தியானது ஆன்மாவைச் சிவத்துடன் சேர்த்தலாகிய அத்துவிதமுத்தியை யருளும். பஞ்சாக்கரம் ஏகாக்கரமாதல்பற்றி முன்பு காணவந்த விளக்கம் இவ்விடத்தில் மீண்டும் சிந்திக்கவேண்டியது.

இவை, இவ்வாறிருப்பதைக் கண்டதும் யர்து செய்ய முயலுதும் நாம் என்னும் சிந்தனை எழுமே யானல்,

"அன்றுமுதல் இன்றளவும் அண்ணல்அறி விப்பதன்றி
இன்றறிவேன் நான்என் றியம்புவதென் — என்றும்
அவத்தை தனில்உணர்த்தி ஆங்கருத்தி இன்றித்
தவத்தில் உணர்த்தினர்ஆர் தான்"

"உன்அறிவை நீயே உணர்வையே யாமாகில்
இந்நெடுநாட் பாசத் தியையாயே — உன் அறிவை
நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்
ஆங்காண் அரனுர் அருள்"

என்று துகளறுபோதத்தில் தெருட்டியிருத்தல் சிந்திக்க வேண்டியது. இவ்விடத்திலே,

"வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந்தரு வோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே"

என்னும் மணிவாசகமும் சிந்திக்க வேண்டியது.

எமக்கு வேண்டியதைச் சிவபரம்பொருள் தானே அறிந்து அருளுகின்றது. நாம் வேண்டிநிற்பதும் முறை என்று இங்கே அறிய வருகின்றது. எனவே, "அவனருளாலே அவன்றுள் வணங்கி" என்றபடி வணங்கி வேண்டித் திருவைந்தெழுத்தோதி உய்தியடைவோமாக.

## சிரோமணிகளாய் விளங்கும் சைவ சாதனங்கள்

சிரோமணிகளாய் விளங்கும் சைவசாதனங்கள் மூன்றுள. அவை திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் என்பன. அவற்றுள் பஞ்சாக்கரம்பற்றி இதுகாறும் சிந்தித்தோமாதலின் இதுபொழுது திருநீறு உருத்திராக்கம் ஆகியவை பற்றி ஒரு சிறிது சிந்திப்போம்.

### திருநீறு

"தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
**காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்**
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே"

(திருஞானசம்பந்தசுவாமிகள்)

என்னும் தேவாரத்தில் "காடுடைய சுடலைப் பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்" என்பது இவ்விடத்தில் உற்றுநோக்கவேண்டியது. இங்கே "காடுடையசுடலைப் பொடி" என்பது சர்வசங்காரகாலத்தில் சாந்தியதீத கலையீறுகவுள்ள எல்லாப் புவனங்களும் அவற்றில் வசிக்கும் பிரமவிட்டுணுக்கள் முதலிய எல்லோருடைய உடல்களும் எரித்து நீறுக்கப்பட்ட "பொடி" யாகும். இப்பொடியைப் பூசி இறைவன் நிற்கும் நிலைமை, "ஒருருவாயினை" என்னும் திருவெழு கூற்றிருக்கைத் திருவாக்குக் குறிக்கும் நிலைமையிலிருந்து ஒருவாறு ஊகித்தறியக் கூடியது.

இஃதிவ்வாறிருக்க, திருநீற்றின் பெருமையை உணர்தற்கு, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய திருநீற்றுப் பதிகத்திலே காணக்கிடக்கும் உண்மைகள் பல நாம் உன்னவேண்டியன.

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு"
"வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு"
"முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு"
"காண வினியது நீறு கவினைத் தருவது நீறு"
"பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு"

''அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு''
''எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு''
''இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு''
''மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு''
'குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூட
''கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு''

என்பனவாய்த் தொடங்கிவரும் அருள் மொழிகள் நாம் அறியவேண்டிய பல உண்மைகளை அறியத்தந்து விளங்குகின்றன.

ஆன்மாக்கள்பால் வைத்து உன்னும்போது, இம்மை மறுமை இன்பங்களைப்பயந்து, மும்மலங்களையும் எரித்து, முத்தியளிக்கும் பெருமைவாய்ந்தது திருநீறு என்பது இங்கே மனத்தில் முதற்கண் இருத்தவேண்டியது. இறைவன்பால் வைத்துப்பார்க்கும்போது பசு, பாசமாகியவை பதியாகிய முதல்வன்மாட் டொடுங்குதலையும், இறைவன் ஞானமே திருமேனியாகக்கொள்ளுதலையும் குறிக்கும்.

''விபூதிதாரணம் எதற்கு அறிகுறி'' என்ற வினவை நிகழ்த்தி ''ஞானக்கினியினாலே தகிக்கப்பட்ட பசு மல நீக்கத்தில் விளங்குஞ் சிவத்துவப்பேற்றிற்கு அறிகுறி'' என்று நாவலரவர்கள் சைவவினாவிடையில் விடையிறுத்திருத்தலும் இவ்விடத்தில் அவதானிக்கவேண்டியது.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மாத்திரமன்றி, ''திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்'' என்று அப்பர் சுவாமிகளும், ''பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்'' என்று மணிவாசகப் பெருமானும்

'கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே''

என்று திருமூலநாயனாரும். திருநீற்றின் பெருமையை அருளியுள்ளார்கள்.

"திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும்—வேல்வேல்
சீவனே சிவனென்று தெரிந்து கொள்ளவேண்டும்—வேல்வேல்

எனவரும் நற்சிந்தனையில் திருநீறணிந்து ஐந்தெழுத் தோதுதலும் அதனல் சீவனே சிவனென்று தெளிதலும் இன்றியமையாது வேண்டப்படும் என்று பணிக்கப் பெற்றிருத்தலை உன்னி அவ்வழி நின்று உய்தியடைய முயலுதல் எமக்கு முறையாயமைதல் காண்க.

## உருத்திராக்கம்

உருத்திராக்கம் அன்புக்கும் அருளுக்கும் அறி குறியாயுள்ளது. தேவர்களின் துன்பத்தைத் திருச்செவி மடுத்தபொழுது சிவபிரானது திருநயனத்திலிருந்து, வெளிவந்த நீரிலிருந்து உண்டானது உருத்திராக்கம் என்னும் புராணக் கூற்றிலிருந்து இவ்வுண்மை யறியக் கிடக்கின்றது. அன்றியும் அணியப்பெறும் உடலுக்கு இது எழில் தருவது என்று அறிஞர் கூறுவர். உரு+திர+ஆக்கம் என்று பிரித்துப் பொருள்கூறி இக்கருத்து வலியுறுத்தப்பெறுகின்றது.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" (திருமந்திரம்)

என்பதனல் சிவஞானப்பேற்றிற்கு உரியவாறு உடல் வலியுறுத்தப்பெறுதல் வேண்டப்படும். அதற்குச் சில சாதனங்கள் உண்டு. அவற்றுள் ஒன்ருயமைவது உருத் திராக்கம் என்பது பெறப்படுதல் காண்க. அருள்வழி நிற்பார்க்கு இன்றியமையாது வேண்டப்படும் சாதனங் களுள் ஒன்ருய் இது போற்றி யணியப்பெறுதலால் மேலே காணவந்த கருத்துக்கள் நன்கமைகின்றன.

"திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும் — வேல்வேல்"

என்றருளியதோடமையாது,

"அக்குமணி யணியென்ரு னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்ரு னெங்கள்குரு நாதன்"

என்றும் நற்சிந்தனையில் நவிலப்பெற்றிருத்தலை நன்கு மனத்திலிருத்தி நாமும் அவ்வழியிற் சாதனைசெய்தல் முறை.

### பாசநீக்கமும் திருவடிப்பேறும்

கேவலாவத்தையிலிருந்து சகலாவத்தையை யடைந்து பிறந்திறந்துழலும்போது இயற்றிய தவப் பயனாய், இதுகாறும் உள்நின்றுணர்த்திய இறைவன் பார்வை மிருகம்போல் மானிடச்சட்டை சாத்திக் குரு மூர்த்தியா யெழுந்தருளி, ஐம்புலன்வழிச் சென்று மயங்கிநிற்கும் ஆன்மாவுக்கு, சத்தாயும் சித்தாயும் உள்ள அதன் உண்மைத்தன்மையை உணர்த்தி, மாயை யோடு மாயையாய் மயங்கி நிற்கும் சடசம்பந்தத்தை நீக்கி, அறிவோடு அறிவாய் விளங்கும் சிவசம்பந்தத்தை அருளுகின்றது. அவ்வாறருளியபோதும், பெருங்காய மில்லா தொழிந்த பின்பும் பெருங்காய மிருந்த பாண் டத்திற் பெருங்காய வாசனை யிருத்தல்போல் மாயை யுள் இதுகாறும் மயங்கிநின்ற ஆன்மாவை மலவாசனை தொடர்தலின், அம்மலவாசனையை நீக்கிச் சிவப்பேறு பெறுமாறு ஐந்தெழுத்தோதும் பெற்றி அருளப் பெறு கின்றது.

ஐந்தெழுத்தோதி அருள்வழிநிற்கும் சாதனையால் ''அவனே தானே''யாகும் உண்மைநிலை உணர்த லாகின்றது. அவ்வுணர்வின்வழி இறைவனோடு அத்து விதமாய் நின்று தன் செயலற்று எல்லாம் இறைபணியே யாய் இயற்றிவரும்போது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் மலவாசனைகளும் அற்றுப்போகும்.

''அவனே தானேயாகி அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே'' (சிவஞானபோதம்)

என்பது இவ்வுண்மையை உணர்த்துகின்றது. ''நான் யார்'' என்ற மகுடத்துடன் விளங்கும் நற்சிந்தனையின் ஈற்றில் ''இப்படிக்கு அவனே - நானே'' என்று கைச்சாத் திடப் பெற்றிருத்தலும் இவ்விடத்தில் அவதானிக்க வேண்டியது.

இவ்வாறு மலசம்பந்தம் அற்றுப்போகவே அருட் சம்பந்தம் ஒளிர்தலாகின்றது. அருட்சம்பந்தம் ஒளிர் கின்றதென்றபோதும் ஆன்மா சுத்த அத்துவிதநிலை யைப் பூரணமாய் எய்திவிட்டதென்று கருதிவிடக் கூடாது. இவ்விடத்தில்,

> ''ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
>
> தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ' (தாயுமானவர்)

என்னும் அருள்வாக்கிற் புதைந்துகிடக்கும் பொருள் ஆழ்ந்து சிந்தித்து அருள்வழிநின்று உணரவேண்டியது. கேவலாவத்தையில் ஆன்மா ஆணவத்துடன் அத்துவித மாய் நின்றது. அந்நிலைமையில் இறையருளும் உடன் நின்றதே யெனினும் ஆணவமாகிய இருள் ஆன்ம அறிவை மறைத்துநின்றமையால் அருளொளியை ஆன் மாவினுல் உணரமுடியவில்லை. இறைவனது கருணைப் பிரவாகத்தால் உளதாகும் மாயை மாயேயங்களின் சம்பந்தம் ஆன்ம அறிவு சிறிது சிறிதாய் விளங்க உதவுவதாயிற்று. இவ்வாறு படிமுறையாய் விளங்கி வந்தே பேரொளியாகிய அருளொளியுடன் ஆன்மஅறிவு அத்துவிதமாய்க் கலக்கின்றது.

முற்றுவமையாகாதெனினும் சட ஒளி சம்பந்த மான ஓர் உதாரணம் இவ்விடத்தில் உண்மை உணர்தற்கு ஒருவாறுதவும். அமாவாசை நாளில் நடுநிசியில் அடர்ந்த இருள் படர்ந்திருக்கும் நேரத் தில் ஆழ்ந்த நித்திரையிலிருந்து ஒருவர் கண் விழிக்கின்ருர். விழிக்குந் தருணத்தில் பெருஞ்சக்தி வாய்ந்த பேரொளி ஒன்று விழிக்கும் கண்ணுக்குமுன் தோன்றுகின்றது. அப்பொழுது எதையும் காணும் சக்தி யற்று ஆன்மா திகைத்து நிற்கவேண்டியதாகின்றதே யன்றிப் பிறிது எதுவும் நிகழ முடியாதாகின்றது. ஆனல், சிறிய ஒளியுள்ள விளக்கொன்று காணவரு மாயின் அவ்விளக்கொளியின் உபகாரத்தால் அண்மையி லுள்ள பொருள்களை ஆன்மா காணக்கூடியதாகின்றது. ஆதித்தனது ஒளி தோன்றுதற்குமுன், பிற பேரொளி யின் உபகாரத்தால் பெருமளவுக்குக் கண்காட்சி கூடு கின்றது. ஆதித்தனது ஒளி தோன்றுதலும் அண்மையி

லுள்ளவற்றையும் சேய்மையி லுள்ளவற்றையும் கண் காணக்கூடியதாகின்றது. இவ்வாறே கேவலாவத்தையில் அடர்ந்த இருளிற் கிடந்த ஆன்மா படிமுறையால் அறி வொளி பெருகப்பெற்றுச் சுத்தாவத்தையை யடைகின் றது. சுத்தாவத்தையில் அறிவொளி பிரகாசிக்கின்றது.

கேவலாவத்தையிலிருந்த ஆன்மா சுத்தாவத் தையை யடையும் வரையில் இறையருள் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் நின்று உபகரித்து வருகின்றது. இந்நிலைமை, கண் இந்திரியத்துக்கும் ஆன்மாவுக்கு முள்ள தொடர்பால் ஒருவாறு விளக்கப்பெறுகின்றது. உயிர் நீங்கிய உடலிலுள்ள கண்ணானது விழித்திருப் பதுபோற் காணப்படினும் அது காணுமாறில்லை. கண் ணானது காட்சி பெறுதற்கு உயிர்ச்சம்பந்தம் இன்றி யமையாதது. உடன்நின்று உயிர் உபகரித்தபோதே கண் இந்திரியம் காட்சி பெறுகின்றது. இதுபோலவே, இறையருள் உடன்நின்று உபகரித்து வருதலினாலே ஆன்மஅறிவு விளக்கம் பெறுகின்றது. நூன்முறையில் ஏனையோரும் காண்பரேயெனினும் சுத்தாவத்தையை அடைந்தோரே இவ்வுண்மையை உள்ளவாறுணர்வர். அவ்வாறுணரவே இறைவன்பால் இடையறாது அன்பு பெருகுகின்றது அன்பு ஆறாகப் பெருகுதலும் பிறிது எதுவும் தோன்றாத திருவடிப்பேறே பேறாகப் பெறப் படுகின்றது. இவ்வுண்மை,

> ''காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
> காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்
> அயரா அன்பின் அரன்கழல் செலுமே'' (சி. போ.)

என்று முதல்நூலிலும்,

> ''காயமொழிந் தாற்சுத்த னாகி ஆன்மாக் காட்டக்
> கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்(கு)
> ஏயும்முயிர் காட்டிக்கண் டிடுமாபோல ஈசனு
> யிர்க் குக்காட்டிக் கண்டிடுவன் இத்தை
> ஆயுமறி வுடையனாய் அன்புசெய்ய அந்நிலைமை
> இந்நிலையின் அடைந்த முறையாலே
> மாயமெல்லாம் நீங்கியரன் மலரடிக்கீ ழிருப்பன்
> மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே'' (சி. சி)

என்று வழிநூலிலும் விளக்கப்பெற்றுள்ளது.

### சீவன்முத்தர் எதுசெய்வர்?

தமக்கெனச் செயலில்லாதவர் சீவன்முத்தர். அவர்களது மெய், வாய், கண், மூக்கு, செவி எல்லாம் சிவபோகத்திலே திளைத்துநிற்கும்; இது பொதுவிதி. ஆயினும், இவை புறத்தே போதலுங்கூடும். புறத்தே போனாலும் அவர் தம்நிலை பிறழாதிருத்தற்கு அருள்வழியொன்றுளது.

அவர்கள் திருவடிப் பேற்றுக்குத் தடையாயுள்ள மல சம்பந்தம் அணுகவொட்டாதகற்றி, அரனடியார் பால் அன்புபூண்டு, அன்னவரின் திருவேடத்தையும் திருக்கோயிலையும் சிவனெனவே கண்டு, வழிபட்டு வாழுவர். அடியாரல்லாதார் சேர்க்கையிலிருந்து நீங்கி நிற்பர். அஃது,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" (சி. போ.)

எனவரும் சூத்திரத்திற் காணக்கிடக்கின்றது.

"வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே"

..........................................................................

"சீரான வடியரோடு கூடு—சிவசிவா
செல்லப்பன் தந்த மந்திரம் நாடு"

என்பனவாய் வரும் நற்சிந்தனைகளும் இவ்விடத்திற் சிந்திக்க வேண்டியன.

### வேதாந்த சித்தாந்தங்களும் அத்வைதமும்

சிவநெறிப் பொருள்கள்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியபோது அதன் முதல்நூல்கள் வடமொழியில் வேத சிவாகமங்களும் தென்மொழியில் சித்தாந்த சாத்திரங்களும் சைவத் திருமுறைகளுமாகு மென்று கண்டோம். வேதத்தின் ஞானபாதம் வேதாந்த மெனப்படும். இது உபநிடதங்களிற் காணக்கிடக்கின்றது. சிவாகமம், சித்தாந்த சாத்திரங்கள், சைவத்திருமுறைகள் ஆகியவை சித்தாந்தமாகும். இவை இவ்வாறு பிரித்துக் கூறப்

படவே, இவை வேறுபட்டன என்ற ஒரு கருத்து இயல்பாகவே உண்டாகின்றது. ஒரு சாரார் அக்கருத்து நிலைநாட்டப்பட்டும் வருகின்றது. வேதாந்திகள் எனப்படுவோருள்ளும் சித்தாந்திகள் எனப்படுவோருள்ளும் அன்னவர் காணப்படுவர்.

''ஈசுவரன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருத்தலால் பொய்யான உலகும் மெய்போன்ற தோற்றமுடையதாயிற்று....அவனன்றி உலகில்லை என்று தள்ளுவதே தியாகம்'' (ஈசாவாஸ்யோபநிஷதம். 1—1.)

**''இது எல்லாம் பிரமமே'' ''தத்'' என்னும் பிரமத்தினின்றுண்டாகி, அதிலேயே முடிவில் லயித்து இடையில் அதிலேயே உயிர்பெற்றிருப்பதால் இவ்வுலகு பிரமமே'** என்று மனவமைதியுடன் உபாசிக்கவேண்டும். மனிதன் நம்பிக்கை வடிவினன். இவ்வுலகில் மனிதன் எவ்வண்ணம் நம்பிக்கை யுடையவனாகின்றானோ அவ்வண்ணமே இங்கிருந்து சென்ற பின்பும் ஆகிறான். ஆகையால் அவன் சிறந்த நம்பிக்கையை உறுதியாகக் கைக்கொள்ளவேண்டும். (சாந்தோக்கியோபநிஷதம். 3-14-1)

மேலே குறிப்பிட்டவாறு "பொய்யான உலகும் மெய்போன்ற தோற்றமுடையதாயிற்று. அவனன்றி உலகில்லை என்று தள்ளுவதே தியாகம்'' ''இது எல்லாம் பிரமமே''; ''தத்'' என்னும் பிரமத்தினின் றுண்டாகி, அதிலேயே முடிவில்லயித்து இடையில் அதிலேயே உயிர் பெற்றிருப்பதால் இவ்வுலகு பிரமமே'' என்பன போன்ற பல உபநிடதப் பகுதிகளாலும் ''சர்வம் பிரமமயம்'' என்பதுபோன்ற மகாவாக்கியங்களாலும் பிரமமேயன்றிப் பிறிதொன்றில்லை என்னும் வாதமுண்டாகின்றது. இவ்வுபநிடதப் பகுதிகளுக் கிணங்க,

"So the non-dualists say, "This Universe does not exist at all; it is all illusion. The whole of this Universe, these Devas, Gods, angels and all the other beings born and dying, all this infinite

number of souls coming up and going down are all dreams. There is no *jiva* at all. How can there be many? It is the one Infinity. As the one Sun reflected on various sheets of water appears to be many and millions of globules of water reflect so many millions of Suns and in each globule will be a perfect image of the Sun, yet there is only one sun, so are all these jivas but reflections in different minds".

*(Hinduism by Swami Vivekananda)*

என்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் எடுத்துக் காட்டியவாறு ஏகான்மவாதிகள் வாதிப்பர்.

பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களும் அனாதியாயுள்ளன என்பது சைவசித்தாந்தக்கூற்று. இக் கூற்றை ஆதாரமாகக்கொண்டு ஏகான்மவாதிகளுக்கு நேர் மாறானவாதம் நிகழும்.

இவ்வித வாதங்களுக்கிட மில்லாத வகையில் உண் மையை உணர்த்தும் உபநிடதக் கூற்றுக்களே பலப்பல அமைந்துள்ளன.

"தாழ்ந்த மனிதனால் சொல்லப்பட்டால் ஆத்மா நன்கு அறிந்துகொள்ளத் தக்கதன்று. அது பலவித மாய்ச் சிந்திக்கப்பட்டிருக்கிறது. பிரமத்திடம் அபேத புத்தியுள்ளவரால் உபதேசிக்கப்பெற்றால் இதிற் பலவித மான விகற்ப சிந்தனைக்கு இடமேயில்லை. அணுவுக்கும் அணுவா யிருப்பதால் அதைத் தர்க்கத்தால் அறிய முடியாது. (கடோபநிஷதம். 2—8)

"எல்லாவற்றையும் சாமான்யமாய் அறிபவரும் எல்லாவற்றையும் விசேஷமாய் அறிபவரும் எவரோ, இப்புவியில் காணப்பெறும் மகிமை எல்லாம் எவருடை யதோ அந்தப் பரமாத்மா திவ்யப் பிரமபுரமாகிய சிற் றம்பலத்தில் (இருதயாகாசத்தில்) எழுந்தருளியுள்ளார். (முண்டகோபநிஷதம். 2-2-7)

அவர் மனோரூபியாயும் சரீரத்தையும் பிராணனையும் நடாத்துபவராயும் இருதயத்தில் நிலைபெற்று உடலில் உறைபவராயும் விளங்குகிறார். ஆனந்த ரூபமாய் அழிவற்றதாய் எது பிரகாசிக்கின்றதோ அதைப் புத்திமான்கள் அனுபவ அறிவால் எங்கும் பூர்ணமாய்க் காண்கின்றனர்.'' (முண்டகோபநிஷதம். 2 - 2 - 8)

''காதுக்குக் காதாயும், மனத்துக்கு மனதாயும், வாக்குக்கு வாக்காயும் உள்ளது எதுவோ அதுவே பிராணனுக்குப் பிராணனாயும் கண்ணுக்குக் கண்ணாயும் உள்ளது.'' (கேனோபநிஷதம். 1-2)

உபநிடதங்களில் மாத்திரமன்றி, சித்தாந்தத்துக்கு நேர்மாறானதெனச் சில சித்தாந்திகளாற் கருதப்படும் பிரமசூத்திரத்திலுமே இவ்வித கருத்துக்களமைந்த பல பகுதிகளைக் காணலாம்.

மறைந்துள்ளது (சீவனும் ஈசுவரனும் ஒன்று என்ற அறிவு) பரமேசுவரனுடைய தியானத்தால் (விளக்கம் பெறும்) அவனிடமிருந்தே (பரமேசுவரனிட மிருந்தே) இவனுக்குப் பந்தமும் மோக்ஷமும் (பிரம்மசூத்திரம். 3 - 2 - 5)

''சீவனும்'' ''ஈசுவரனும்'' பரமேசுவரனுடைய தியானத்தால் என்பனவாயுள்ள சொற்றொடர்களில் சீவன், ஈசுவரன் என்னும் இரு பொருள்களிருத்தல் குறிப்பிடப்பெற்றுள்ளது.

"The Second point we all believe in is God, the creating, the preserving Power of the whole universe, unto whom it periodically returns, to come out at other periods and manifest this wonderful phenomenon called the universe''

(*Hinduism by Swami Vivekananda*)

என்று ஸ்ரீமத். சுவாமிவிவேகானந்தர் அவர்கள் மற்றோரிடத்தி கூறியுள்ளார்கள்.

"அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம்ஆதி என்மனுர் புலவர்"

என்னும் சிவஞானபோதச் சூத்திரம் இவ்விடத்தில் எமது மனக்கண்முன் வருகின்றது.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் மாத்திரமன்றி ஸ்ரீசங்கராச்சாரியார் அவர்களுமே வேறுபட்ட கருத்துடையாரல்லர் என்பது பிரமசூத்திரத்துக்கு விளக்கமெழுதிய சுவாமி வீரேஸ்வரானந்த அவர்களாற் பிற்றைக் காலத்திற் குறிப்பிடப்பெற்றும் உள்ளது. அது பின்வருமாறு:-

"When Sankara says that the world is false he does not mean that it is absolutely nothing, but that our experience is, liable to be stultified by means of knowledge of things as they are. The world has a relative existence, it is true for the time being, but disappears when true knowledge dawns" (*Brahma Sutras—English rendering, comments by Swami Vireswarananda*).

மேலே காணக்கிடக்கும் சிவஞானபோதச்சூத்திரத்தில் அவன், அவள், அது, மலம், ஆதி, எனவரும் சொற்களால் இறை, உயிர், மலம் என்னும் மூன்று பொருள்கள் உள்ளன என்பது சித்தாந்தக் கருத்தென்பது தெளிவு. ஆயினும் சைவத் திருமுறைகளுள்ளே எல்லாம் ஒன்றே (சிவமே அல்லது பிரமமே) என்று பொருள்தரும் பலப்பல பகுதிகளைக் காணலாம்.

"இருநிலனய்த் தீயாகி நீருமாகி யியமான
னுயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிருகி யாகாசமா
யட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந்
தம்முருவுந் தாமேயாகி
நெருநலையா யின்ருகி நாளையாகி நிமிர்புன்சடை
யடிக ணின்றவாறே"

என்று அப்பர்சுவாமிகளும்,

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

என்று மாணிக்கவாசகசுவாமிகளும்,

"எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டே"

என்று திருமூலநாயனாரும் அருளியவற்றைப் பார்க்கும் போது எல்லாஞ் சிவமே, எல்லாம் பிரமமே என்பது பொருந்து மென்பதாகவே தோன்றுகின்றது. இவை இவ்வாறிருக்க,

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே"

எனவரும் திருமந்திரத்தில் முதல் மூன்றடிகளிலும் முப்பொருள்களும் வேறு வேறானவை என்பது வலியுறுத்தப் பெறுவதாய்த் தோன்றுகின்றது.

எனவே, உபநிடதங்கள், பிரமசூத்திரம் முதலிய வேதாந்த நூல்களுள்ளும், சித்தாந்த சாத்திரங்கள், சைவத்திருமுறைகள் முதலிய சித்தாந்த நூல்களுள்ளும் ஒன்றோ, இரண்டோ, ஒரு மூன்றோ என்ற வாத முண்டாதற் கிடந்தரும் திருவாக்குகளைக் காணலாம்.

சாந்தம் உபசாந்தம்
சர்வம் பிரம மயம் (சாந்தம்)
... ... ... ... ... ...
பிருத்வியப்புத் தேயுவாயு ஆகாசம் (அவை)
பிரம மயமென்று பேசுவார்

"இருநிலனே டிரவிமதி யாயி னான்காண்
என்னிதயம் நீங்காத இறைய வன்காண்
அரும்பொன்காண் அம்மைகாண் அப்பன் றான்காண்
அன்றுமின்று மென்றுமப் படியுள் ளான்காண்
தருமமே உருவாகச் சமைந்த வன்காண்
தன்னொப்பா ரில்லாத தத்து வன்காண்
அருவன்கா ணுருவன்கா ணருவுருவ மாய
அப்பன்கா ணவனுயிருக் குயிரா னானே"

எனவரும் நற்சிந்தனைகளிலும் மேலே குறித்த வாத முண்டாதற் கிடமிருத்தலைக் காணலாம்.

ஆனால், இவ்வாதங்க ளுண்டாதற்குக் காரணம் சுத்த அத்துவித உண்மையை உணராமையேயாம். மேலே காணவந்த "தாழ்ந்த மனிதனால் சொல்லப் பட்டால் ஆத்மா நன்கு அறிந்துகொள்ளத் தக்கதன்று. பலவிதமாய்ச் சிந்திக்கப்பட்டிருக்கிறது. பிரமத்திடம் அபேத புத்தியுள்ளவரால் உபதேசிக்கப்பெற்றால் இதிற் பலவிதமான விகற்பசிந்தனைக்கு இடமேயில்லை. அணு வுக்கும் அணுவாயிருப்பதால் அதைத் தர்க்கத்தால் அறியமுடியாது" என்னும் கடோபநிடதக்கூற்றும் இக்கருத்தைத் தெரித்து நிற்கின்றது.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே"

என்னுந் திருமந்திரச் செய்யுளிலும் பரத்தைப் பார்ப்பவ னுக்குப் பதார்த்தமும் பதார்த்தத்தைப் பார்ப்பவனுக் குப் பரமும் தோன்றாது நிற்கும்நிலை விளக்கப்படுகின்றது.

எனவே, வேதாந்த சித்தாந்தங்களுக்கிடையில் வேறுபாடில்லாத விழுமிய பொருளை உணர்தற்கு, சுத்த அத்துவித உண்மையை உணர்தல் இன்றியமையாது வேண்டப்படும். அவ்வழியில் இதுபொழுது உன்னுதும்.

ஈசாவாஸ்யோபநிஷதம், சாந்தோக்கியோப நிஷதம், கடோபநிஷதம், முண்டகோபநிஷதம்,

பிரம்மசூத்திரம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நற்சிந்தனை ஆகியவற்றிலிருந்து மேலே தரப்பெற்ற ஒவ்வோர் எடுத்துக்காட்டிலும் அத்வைத உண்மை அறியக்கிடக்கின்றது. ஆயினும் சுத்தாத்துவித உண்மையை உணர்ந்தார்க்கன்றி அவற்றின் பொருளை ஆராயப்புகும் ஏனையோர்க்குச் சந்தேக விபரீதங்களுண்டாதற் கிடமுண்டு. சுத்தாத்துவித உண்மை சித்தாந்த சாத்திரங்களில் நனி மிக அழகாக விளக்கப் பெற்றுள்ளது. சித்தாந்த சாத்திர முதல்நூலாய் விளங்குவது சிவஞானபோதம். இது சுருங்கிய சூத்திர வடிவாயமைந்து விரிந்த பாடியத்தையுங் கொண்டுள்ளது. இவற்றின் பொருள் இந்நூலில் எங்கும் செறிந்திருத்தலைக் காணலாம். ஆங்காங்கு அத்வைத உண்மையும் அறியக்கிடக்கின்றது. அவற்றை நேர்நேராய் நிரைப்படுத்திப் பார்த்தல் உலவாத இன்பத்துக்கு ஏதுவா யிருக்கும். சுருங்கிய சூத்திரங்களின் பொழிப்பையாயினும் பார்த்தால் அது ஒருசிறிது கைகூடுதலாகும். அவ்வாறு பார்க்க முயலுதல் மற்றொரு முறைக்குப் பொருந்துமாதலின் அத்வைத உண்மை அறியும் முயற்சியில் ஈண்டைக்கு வேண்டப்படும் மூன்று சூத்திரப் பொருள்பற்றி இப்பொழுது சிந்திப்போம்.

அவை,

"அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

"அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே"

"காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்பன.

இவற்றுள் முதலாவது சூத்திரம் சைவ சித்தாந்தப் பொருள் முழுவதையும் தன்னிடம் கொண்டுவிளங்கும் தனிப்பெருமை வாய்ந்தது. இறை, உயிர், மலம் ஆகிய மூன்று பொருள்களின் உண்மையைக் குறிப்பிட்டுப் பிந்திய உயிர், மலம் அல்லது பசு, பாசம் ஆகிய இரண்டும் இறை அல்லது பதிக்குள் அடங்கி நிற்றலையும் தெரித்து நிற்கின்றது. இதனுல் அத்வைத உண்மை ஒருசிறிது ஊகித்தறியவருகின்றது. அவன், அவள், அது என்று மக்களாற்சுட்டி அறியப்படும் பொருள்கள் எல்லாம் தோன்றிநின்று, ஒடுங்குகின்றன; அவ்வாறு ஒடுங்குதல் சங்கார கா்ரணனுகிய பதியிடத்தேயாம். அவை உயிர்களின் மலம் காரணமாய் மீளத் தோன்று வனவாம் என்பதனுல் அத்வைத உண்மை ஒரு சிறிது அறியவருதல் காண்க.

இவ்வுண்மை இரண்டாஞ் சூத்திரத்தில் நன்கு விளக்கப்பெறுகின்றது.

ஆன்மாக்கள் இருவினையில் போக்கு வரவுபுரிய -பிறந்திறந்துழல-பதியானது, அவையேயாய்–ஆன்மாக்க ளுடன் ஒன்ருய், தானேயாய் - ஆன்மாக்களின் வேருய், அவையே தானேயாய் - ஆன்மாக்களோடுடனுய், ஆணை யின் நீக்கமின்றிநிற்கும் என்கின்றது இரண்டாம் சூத் திரம். ஒன்ருய், வேருய் உடனுய்நிற்றல் எங்ஙன மெனின், உடலின்கண் உயிர் எவ்வாறு பிரிப்பின்றி ஒன்ருய் நிற்கின்றதோ அவ்வாறு ஒன்ருயும்; விளக் கொளியோ அருக்கனெளியோ இன்றிக் கண்ணுனது காணுமாறில்லை, இரண்டும் கலந்தே காட்சித்தொழில் நிகழ்கின்றது, ஆயினும் கண்ணெளிவேறு அருக்கனெளி வேறு என்பதுபோல் பொருட்டன்மையால் வேருயும்; கண்ணெளியும் ஆன்மபோதமும்போல் உயிர்க்குயிராய் நிற்றலால் உடனுயும்; நின்று அருள்புரிகின்றது என் பதனுல் ஒன்றேயென வாதிக்கத்தக்கதாயும் இரண்டே என வாதிக்கத்தக்கதாயும் உள்ள, பதி - பசு நிலைமை உண்மையில் கண்ணெளியும் ஆன்மபோதமும்போல்

உடனுய் நிற்குந் தன்மையால் "அத்துவிதம்" எனப் படுகின்றது. இக்காரணங்களாலே இச்சொற்கு, இன்மை - ஒன்றே; மறுதலை - இரண்டல்ல ஒன்று, "ஒன்றல்ல இரண்டு"—என்று, பொருள்பற்றிய வாதம் நிகழ, அன் மைப்பொருள்கொண்டு இரண்டலா ஒன்று என்று நிரு பிக்கின்றது சைவசித்தாந்தம். இஃதே சுத்தஅத்துவிதம் எனப்பெறுவது.

"சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரத்திற் காணவந்தவாறு அவையேயாய் (ஒன்ருய்) ஆன்மாக்க ளோடு ஆன்மாக்களேயாய், தானேயாய் (வேருய்) ஆன்மாக்களிலிருந்து வேருய், அவையே தானேயாய் (உடனுய்) ஆன்மாக்களிலிருந்து வேருயிருந்தும் கலப் பினுல் ஒன்ருய், இறைவன் ஆன்மாக்களோடு அத்து விதமாய்நின்று அருளும்முறைமை, உடல், உயிர் கண் ணெளி, அருக்கனெளி, கண்ணெளி ஆன்மபோதம், ஆகிய உவமானங்களால் மேலே விளக்கப்பெற்றது.

இவற்றை, மெய்கண்டதேவநாயனுர் மற்ருெரு வாறு நான்கு வெண்பாக்களால் விளக்கியருளியுள்ளார். அவ்வெண்பாக்களையும், அவற்றுக்குச் சிவஞான யோகிகள் அருளிய தெளிவுரையின் சில பகுதிகளையும் இவ்விடத்திற் பார்த்தல் பெரும்நன்மை பயக்கும். "அற்றேல், இங்ஙனம் மூன்று வகையாகக் கூறுதல் அநேகாந்தவாதமாமெனின், ஆகாதென்பது உவமை முகத்தான் உணர்த்தி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணங்களுள், அவையேயாதலை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:—

"கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்ருங் — கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா வல்லனுமா மங்கு"

எனவரும்.

இருவர் கைகோத்துநின்றுழியும் அவ்வருள் அழைக் கப்பட்டோனேயன்றி ஏனேன் என்னையென்றல் உல

கத்தின்மையின், உடம்பிற்கிட்ட பெயரான் அழைத்த வழி உயிர் என்னென்றதற்குக் காரணம் பிறிதோராற்ருன் பெறப்படாமையின், அவ்வுயிர் உடம்பெனத்தானென வேறுபாடின்றி அபேதமாய் நிற்றல் பெற்ரும். அது போல முதல்வனும் உயிர்களின் அபேதமாய் நிற்ப னென்பார், கட்டுமுறுப்புங் கரணமுங் கொண்டுள்ள மிட்டதொரு பேரழைக்க வென்னென்ருங் கொட்டி என்றும், அங்ஙனம் ஒன்ருயவழியும் ஒன்ருகாமைக்கு அனுபவங் காட்டுவார், அவனுள மாகில்லா னுளமவனு மாட்டா தவனுளமா யல்லனுமா மங்கு என்றுங் கூறினர்.

.............................................................................................

அற்றேல், வேதத்துள் அத்துவித மென்றதூஉமன்றி "ஏகமே" எனவும் ஓதுதலின் அது வேறுபொருள்படா மையான், அதற்கு மறுதலையாய் உயிர்களோடு ஒட்டி நிற்பனெனப் பேதப்படக் கூறுதல் பொருந்தர்தா லெனின், அச்சொற்குத் தர்ற்பரியங் கூறித் தானேயாய் என்பதனை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதா ரணம்:—

"ஒன்றென்ற தொன்றேகா ணென்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளகா—ணென்றின்ரு
லக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

எனவரும்.

வேதத்துள் "ஏகம்" என்ற சொல் வேறுபொருள் படாதென்பார், ஒன்றென்ற தொன்றே என்றும், அதற்குத் தாற்பரியங் கூறுவர்ர். "விண்ணும் மண்ணுந் தோற்று விக்குந் தேவன் ஒருவனே" என்றும் "ஒருவனே யுருத் திரன் இரண்டாம் முதற் கடவுளில்லை" என்றும் "பிர மப் பொருளொன்றே" என்றும் ஓதுகின்ற அச்சுருதிப் பொருளேபற்றி ஒன்றே பதி என்றும், பதியோடு உயிர்க ளிடை வேற்றுமை கூறுவார், பசுவா மொன்றென்றநீ என்றும், பசுவாதற்குக் காரணங் கூறுவார், பாசத்தோ டுளகாண் என்றும் "பிரமப் பொருளில்லையாயின் ஒரு பொருளுமில்லை" என்பதோர் சுருதிப்பொருள் இதனோடு

முரணுமை அதன் தாற்பரிய முணர்த்துமுகத்தான், அங்ஙனம் வேருயினும் வேறன்மைக்கு அநுபவங் காட்டு வார், ஒன்றின்ரு லக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றே லிக் கிரமத் தென்னு மிருக்கு என்றுங் கூறினர். இதனல் தானே யாதல் வலியுறுத்தப்பட்டவாறுகாண்க.

மெய்கள் அகரமொடு சிவணியன்றி இயங்காமையா னும், ............ அவையெல்லாம் அகரமாகிய உயிரை யின்றியமையாமை பெற்ரும். அதுபோலப் பிரமமில்லை யாயின் ஒருபொருளுமில்லை......என்ருர்.

..............................................................................................

அற்றேல், ஏகமாகிய பிரமத்தை ஏகமென்றல் பொருந் தும். யாண்டும் அவ்வாறே ஏகமென்னுது சிலவிடங் களில் ''பிரமம் அத்துவிதம்'' எனவும் பேதங் கூறிய தென்னை? அத்துவிதம் இரு பொருட்கண்ண தெனக் கொள்ளின் ஒருபொருளை அத்துவிதமென்றல் பொருந்தா தாலெனின், அவ்வாசங்கை நீக்குமுகத்தான் அவையே தானேயாய் என்பதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்:

''பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்ன
தத்துவித மென்றறையு மாங்கு''

எனவரும்.

ஆண்டுப் ''பிரமம் அத்துவிதம்'' என்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதென்னும் பொருட் டாகலான் அஃது ''ஏகம்'' என்பதனேடு முரணுமா றில்லை யென்பதாம்.

..............................................................................................

அற்றேல், இங்ஙனம் வேறுவேறு உவமை கூறுதல் ஏகாந்தவாத மன்றென்பார்க்கு ஏகாந்த வாதமர்தல் உவமை முகத்தாற்கூறி மூன்றனையும் ஒருங்கே வலி யுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:-

"அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று"

எனவரும்.

கலப்பாய் நிற்றலான் உலகேயாம் என்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையான் வேறுநிற்றலரல் தானேயாம் என்பார், நின்று எனவும் உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுலகாம் என்பார் பிரிப்பின்றி எனவுங் கூறினர்.

........................................................................................................

அற்றேல், வாமதேவமுனிவன் முதலியோர் "யானே உலகமாயினேன்" எனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்தரத்தின் "யானே எல்லாமாய் நின்றேனும், யானே எல்லாவற்றினையுங் கடந்துநின்றேனும், யானே எல்லாவற்றினையும் படைத்தளித் தழிப்பேனும்" என்று ஆன்மாக்கள் மேல்வைத்துக் கூறுதலானும் முதல்வனோடொப்ப உயிர்களும் அவ்வியல்பினவாம்போலு மென்னுங் கடாவை ஆசங்கித்துத் தமியேனுளம் புகுதல்யானே யுலகென்பனின்று என்றார். அம்முதல்வன் பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய்நின்ற என்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் யானே யுலகெல்லா மென்பே னுயினேன் இம்முத்திக் காலத்தென்க.

எனவே, வாமதேவமுனிவன் முதலியோர் "யான் மநுவாயினேன் ஆதித்தனுயினேன்" என்றிங்ஙனங் கூறியதூஉம், சர்வஞ்ஞானோத்தரத்தின் ஆன்மாவை அவ்வாறு பாவிக்கச் சொல்லியதூஉம், அவ்வொற்றுமை பற்றியேயன்றிப் பிறிதின்மையின், அதுபற்றி உயிர்களும் அவ்வியல்பினவாவான் செல்லாதென்றவாறுயிற்று. இவ்வொற்றுமை பற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன்"யானே யுலகமெல்லா" மென்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், "ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழி

படுக'' என்றதூஉம், ''அதனை உறுதியாகக்கொண்டேன்'' என்ற அருச்சுனன் அவன்கூறிய கருத்துணர்ந்து சாங்காறும், சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன் றிருமுடிமேற் கண்டதூஉமென்க. (சிவஞானபாடியம் பக்கம் 100—104).

''எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே
எல்லாம் நானென எண்ணுதல் இன்பமே
எல்லாம் சிவன்செயல் என்பதும் இன்பமே
எல்லாம் என்செயல் என்பதும் இன்பமே''

என்று யோகசுவாமிகள் அருளியிருப்பதும் இவ்விடத்தில் உற்றுநோக்கத்தக்கது.

இவ்வுண்மை, மேலே மூன்ருவதாய்த் தரப்பெற்ற சிவஞானபோதம் பதிஞேராம் சூத்திரத்தில் அனுபூதி விழைவார்க்கு அருமருந்தன்னதாய் மேலும் விளக்கப் பெற்றுள்ளது.

கண் காணுந்தன்மை யுடையது, ஆயினும் தானுய்க் காணமாட்டாது. காட்டவே காணக்கூடியது. ஆன்மா காட்டக் கண் காண்கின்றது. இஃதே போல் ஆன்மா அறியுந்தன்மை யுடையதேயெனினும் இறைவன் அறிவிக்கவே அறிகின்றது. கண் காண்கின்றது என்பது உண்மை. ஆன்மா காண்கின்றது என்பதும் உண்மையே. இதுபோலவே, ஆன்மா காண்கின்றது - அறிகின்றது - என்பது உண்மை; ஆயினும் இறைவன் காட்டவே காண்கின்றது. எங்ஙனமெனின் கண்ணொளியும் ஆன்மபோதமும் வேறற நிற்பதுபோல் என்க. இவ்வாறு உயிரும் இறையும் வேறறநிற்பதே சுத்தஅத்துவிதம் என்று நிரூபிக்கப்பெறுதலாகின்றது. இவ்வுண்மை எம்முள்ளத்தில் இடையருது இடம்பெறுமாயின் ''அயரா அன்பின் அரன்கழல் சேறலாகிய'' சிவானந்தப்பேறு சித்திக்கின்றது என்பது தெள்ளிதாய்த் தெரிக்கப்பெற்றுள்ளது. இதனுலேயே,

"புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப் புகல்அளவைக்
களவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமும்சொற் பொருள்போல் பேதாபே
தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினுல் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
பிறிவரும்அத் துவித மாகும் [அறிவொளிபோல்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்
திறன்இங்குத் தெரிக்க லுற்றும்" (சிவப்.)

என்று சுத்தாத்துவித சைவசித்தாந்தம் விதந்தோதப் பெறுகின்றது.

இச்செய்யுளிலே "வேதாந்தத் தெளிவாம்" என்பதனுல் வேதாந்தமும் சித்தாந்தமும் வேறுபட்டவையல்ல என்பது காணக்கிடக்கின்றது. அவற்றுக்கு விளக்கம் கொடுப்பவர்கள் தத்தம் அறிவுக்கேற்றவாறு வேறுபட்ட கருத்துக்களைக் கொடுப்பரேயன்றி உண்மையில் அவை வேறுபட்டவையல்ல. உண்மை உணர்ந்த அருட்செல்வர்களின் திருவாக்குகளால் இவ்வுண்மை வலியுறுத்தப் பெறுகின்றது. அது அப்படியுள்ளது என்பது.

'தொண்டர் நாங்களே—சிவ
தொண்டர் நாங்களே.

அண்டத்திற் பிண்டத்தில்
ஆண்டவனைக் காணும் (தொண்)

வேதாந்த சித்தாந்தம் வேருகக் காணேம்
வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள (தொண்)

சிவசிவ வென்றெந்த வேளையுஞ் சொல்லிச்
சீவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும்' (தொண்)

.........................

'வேதாந்தஞ் சித்தாந்தம் சமமென்று களிக்குது'

.........................

'வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று நோக்கும்'

எனவரும் நற்சிந்தனைகளிற் காணவருகின்றது.

## தாயாய் விளங்கும் சிவநெறிப் பண்பு

பண்டைக் காலத்தவர் நாலரிறு சமயங்கள்பற்றிப் பேசினர். இன்று, இஸ்லாம், கிறிஸ்துவம், பௌத்தம், சைவம் என்னும் நான்கு சமயங்கள் பற்றியே நாம் பெருவழக்காய்ப் பேசுகின்ருேம். உலக சமயங்களாய்க் கருதப்பெறும் இவையே எங்கள் பொதுவாழ்விற் சிந் திக்கவேண்டியவையாயு மிருக்கின்றன.

இவற்றுள்ளே, சிவநெறி அல்லது சைவசமயம்பற்றி இதுகாறும் சிந்தித்துவந்துள்ளோம். அவ்வாறு சிந்தித்த போது இடையிடையே இஸ்லாமிய, கிறிஸ்துவ, பௌத்த சமயக் கொள்கைகள்பற்றியும் ஒருசிறிது சிந்தித்துள்ளோம். இவற்றுள்ளே, சிவநெறியானது ஏனையவற்றின் தாயனையதாய்த் திகழுதல் யாங்ஙனம் என்று இப்பொழுது சிந்திக்க வேண்டியவர்களா யிருக் கின்ருேம்.

இந்நான்கு சமயங்களுள்ளே, பௌத்தம் ஒழிந்த ஏனைய மூன்று சமயங்களும், இறை, உயிர், உலகு ஆகிய மூன்றும் உள்பொருள்கள் என்று கொள்ளு கின்றன. உயிர் அல்லது ஆன்மா என்று ஒரு பொரு ளில்லை, இறை அல்லது கடவுள் என்னும் மற்ருெரு மேலான பொருள்தானும் இல்லை என்று பௌத்தநூல் சொல்லுகின்றது.

கடவுள் ஒருவர் உளர் என்றுகொள்ளும் மூன்று சமயங்களும், அவர் எங்கு முள்ளவர், எல்லா மறி பவர், எல்லாம் வல்லவர் என்பனவாய் வரும் இலக் கணங்களை ஏற்றுக்கொள்ளுகின்றன. கடவுளின் தடத்த இலக்கணங்கள் என்று சிவநெறி கூறும் இலக்கணங்க ளுள்ளே இவ்விலக்கணங்க ளெல்லாம் அமைகின்றன. கடவுளின் சொரூப இலக்கணம்பற்றிச் சிவநெறி ஒன்றே சொல்லுகின்றது.

உலகு, உயிர் என்பவைபற்றிப் பேசுமிடங்களில் முக்கியமான வேறுபாடுகளுளவேயெனினும் இவற்றைக்

கடவுள் படைத்தார் என்று இம்மூன்று சமயங்களும் சொல்லுகின்றன.

உலகைக் கடவுள் படைத்தார் என்று இஸ்லாமும் கிறிஸ்துவமும் கூறுநிற்ப, உலகு காரியப்பொருள் என்று எடுத்துக்காட்டி அதன் காரணத்தையும் தெரித்துநிற்கின்றது சிவநெறி.

உயிர்பற்றிச் சொல்லும்போது மனிதனையே குறிப்பிடவேண்டிய முக்கியமான பொருளாக இஸ்லாமும் கிறிஸ்துவமும் கூறுகின்றன. சிவநெறியோ மனிதப் பிறவிக்கு உரியதாகிய முக்கிய இடம்கொடுத்து ஏனைய உயிர்களுக்கும் மனிதனோடொத்த பிறசிறப்புக்களைக் கூறுகின்றது. அன்றியும், மனிதனைப்பற்றி இஸ்லாமும் கிறிஸ்துவமும் கூறுபவை எல்லாம் சிவநெறி சொல்லும் ஆன்மாவின் தடத்த இலக்கணங்களுள் அமைந்து கிடப்ப, ஆன்மாவின் சொரூப இலக்கணத்தைச் சிவநெறி ஒன்றே சொல்லுகின்றது.

உயிர்கள்பற்றி உன்னுமிவ்விடத்தில்,

"அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநா ருயி ரத்தாய்
உண்டுபல் யோநி யெல்லா மொழித்துமா நுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரியங் காண்" (சி,சி.)

என்று சிவநெறிச் சாத்திரமும்,

"...புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்..."

(திருவாசகம்)

என்று சிவநெறித் தோத்திரமும் அறியத்தரும் உண்மையை உணர்தல் எல்லையில்லா இன்பத்துக் கேதுவர்கும்.

ஆன்மா இல்லை, கடவுள் இல்லை, என்று சொன்ன பேரதும் ஆன்மாசெய்யும் பாவ புண்ணியங்கள்பற்றியும் அவற்றாலாகும் இன்ப துன்பங்கள்பற்றியும் அறிவுரை கூறிநிற்கின்றது பௌத்தநூல். துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் என்னும் கூறுகளிற் குறித்த அறிவுரைகள் கூறப்படுகின்றன. ஆன்மா இல்லை, கடவுள் இல்லை. என்று சொல்லுவது திருவைந் தெழுத்தாற் றெரிக்கப்பெறும் திரோதை யம்மையின் செயலென்று நாம் அறியவருகின்றது. அருட்டொழில் ஐந்தினுள்ளே மறைத்தலுள் இது அடங்குதலை நாம் காணலாம்.

இவை இங்ஙனமிருப்ப, இஸ்லாமும் கிறிஸ்துவமும் கூறும் பாவ புண்ணியங்கள் மோட்சநரகங்கள் பற்றிப் பார்க்கும்போது அவை சிவநெறி கூறும் சுவர்க்க நரகங்க ளோடு ஒருவாறு ஒத்திருத்தலைக் காணலாம். இச் சுவர்க்க நரகங்களுக்கு அப்பாற்பட்ட பதமுத்தி, சீவன் முத்தி, பரமுத்தி என்பவைபற்றிச் சிவநெறி ஒன்றே சொல்லு கின்றது. இம்முத்தி நிலைமைகள் எல்லாவற்றுள்ளும் பர முத்தியே மேலானது. இப்பரமுத்தி குறிக்கும் நிலைமை சச்சிதானந்தப் பெருவாழ்வெனப்படும் பேரின்பப் பெருவாழ்வாகும்.

இனி, சீவன்முத்தி எனப்படும் பேரின்பப் பெரு வாழ்வை, இந்நிலவுலகில் இன்று நாம் பெற்றுள்ள பூத வுடலோடேயே அடைதலாகுமென்று சிவநெறி நூல்க ளாகிய சித்தாந்த சாத்திரங்களும் சைவத் திருமுறை களும் தெளிவாகக் கூறுகின்றன. இவ்வருள் நூல்களை அருளிய சமயாசாரியமூர்த்திகள் சந்தானாசாரியமூர்த் திகள் திருமூலநாயனார் ஆதிய அருட்செல்வர்கள் அருள் வழிநின்றொழுகிய பெருவாழ்வில் இவ்வுண்மையை உறுதிப்படுத்தும் எழில்மிகுந்த பண்புகள் சிறந்து விளங் கின என்பதை அவர்களின் திவ்விய சரிதைகள் காட்டும். இப்பண்புகளைப் போற்றி வாழ்வோரின் தொகை அருகிய இக்காலத்திலே "அவதார புருடன்"

''ஐந்தாங்குரவர்'' ''நாவலர்'' என்ற புகழுரைக் குரிய ராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தோன்றி இவற்றை வலியுறுத்திப் போந்தார்கள். ஆயினும், இவை உரியவாறு சிறந்து பொலியுமாறின்றி அருகி வருவனவாகவே தோன்றின. அவை ''பொய்யாய்ப் பழங்கதையாய்ப்'' பேரய்விடுமோ என்றே ஐயுறவேண் டியதாயு மிருந்தது. வாழையடி வாழையாய் அருட் செல்வர்கள் தோன்றி விளங்கிவந்த இந்நாட்டிலே, அந்நிலைமை நீடித்து நிலைத்திருக்க முடியாதென் றெல் லோர்க்கும் அறிவுறுத்துமுகமாகவும், பண்டு நாம்செய்த பெரும்தவப்பயனுய், இன்றுவாழும் எம்மையும் அருட் கரையேற்றி யருளுமாறும், திருவவதாரம் செய் தருளினர் ''யோகசுவாமி'' என்னும் சிவஞானதேசிக மூர்த்திகள். சுவாமிகளின் திருநாமத்திலுள்ள ''யோகம்'' என்னும்சொல் சிவயோகத்தைக் குறிக்கும். அச்சிவயோகத்தை யடைந்த பெருமையினுல் எம்பெரு மானுர் சிவஞானசோதியாய்த் திகழுவாராயினுர். ''சிவ யோகம்'' ''சிவஞானம்'' என்பவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சிவநெறிநூல் தெரிக்கும் முத்திசாதனங்களின்பாற்படும். இம்முத்திசாதனங்கள் சிவ நெறி ஒன்றுக்கே உரிய தனிப்பெருஞ் சிறப்புகளென்றறிக.

கடவுளின் சொரூபலக்கணம், ஆன்மாவின் சொரூப லக்கணம், ஆகியவற்றை விளக்குதல், முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் ஆகிய காரணங்களை யுடைய காரியப்பொருளாயுள்ளது உலகு என்பதை எடுத்துக் காட்டுதல், மனிதப் பிறவியின் மாண்பை விளக்குவதோடு ஓரறிவுடைய தாவரம் முதல் ஆறறி வுள்ள மனிதன் ஈருகவுள்ள உயிர்களெல்லாம் பொருட் டன்மையால் அறிவு சொரூபமாயுள்ள ஆன்மாக்களே என்ற உண்மையை அறியத்தருதல், இவ்வான்மாக்க ளடையும் பேரின்பப் பெருவாழ்வாகிய முத்திப்பேற்றின் சிறப்பு, அதை அடையும்வழி ஆகியவற்றைத் தெரித்து நிற்றல், என்பனவாய்வரும் தனிச்சிறப்புக்கள் சிவநெறி ஒன்றிலேயே உள்ளன.

இத்தகைய சிறப்புக்கள் ஒருபாற்றிகழ, இந்நில வுலகில் நாம் அறியவந்த சமயங்கள் கூறும் பொருள் களைத் தன்னகத்தேகொண்டு, பிள்ளைகளைப் பெற்ற ஒரு தாய் தன் பிள்ளைகளை அன்பாயணைத்து அவர்களுக்கு உரிய உரிய இடம்கொடுத்து விளங்குதல்போல், குறித்த சமயங்களுக்கும் சமயப்பொருள்களுக்கும் சிவநெறியானது அன்பான இடம்கொடுத்து அவற்றை அன்புக் கரத்தா லணைத்து விளங்குவதை மேலே போந்தவற்றுள் வெள் ளிடைமலைபோல் தெள்ளிதிற் காணலாம். இக்காரணத் தாலேயே,

"ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க ளொன்றோடொன்
றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி னிதுவாகு
மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண நின்றதியா
தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே அடங்கியிடு
மவைஇரண்டு மரனடிக்கீ ழடங்கும்" (சி. சி)

என்றும்,

"செப்பரிய சமயங்க ளெல்லாம் தந்தத் தெய்வமே
தெய்வமெனும் தன்மை யான
அப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பால் அடுத்த
வந்நூல்களும் விரித்தே யநுமானுதி
ஒப்பவிரித் துரைப்பர் இங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன் றினையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாம் சமயமுமா யல்லவாகி யாது சமயமும்
வணங்கு மியல்ப தாகி"

"இயல்பென்றுந் திரியாமல் இயமமாதி யெண்குணமும் காட்டி
யன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப் பண்புறவுஞ்
சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி மற்றங்க
நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில் வைத்து ராஜாங் கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ"

(தாயுமானசுவாமிகள்)

என்றும் அன்று அருட்செல்வர்கள் அருளினர்கள். இவ்வருள் மொழிகளில் எழிலுடன் விளங்கும் உண்மை, இளநலன்பெற்று, அன்றுபோல் இன்றும் விளங்குதல் கீழேவரும் நற்சிந்தனைச் செய்யுள்களிற் காணலாம்.

"அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னுலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னை வினையெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குச் சுட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே;'

"கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காணுத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே"

"நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்கும் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
.................................................."

"எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்,
சிவனென்ற நாமமுள்ள தெய்வம்,
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்,
மெய்ஞ்ஞானத் தெய்வம்.,
உயர்சித்தாந்த தெய்வம்"

எனவரும் திருவாக்குகளிற் குறித்த உண்மை கிளர்ந்து விளங்குதலைச் சிவதொண்டராவார் தெளிவாகக் காணலாம்.

தாய்மைப் பண்புடன் இவ்வாறு தனிச்சிறப்புப் பெற்றுத் திகழும் சிவநெறிக்கண்நின்று, சிவயோக, சிவ

ஞானச் செல்வர்களாய் நாமும் துலங்கவேண்டு மென்னும் திருவுள்ளக் குறிப்புடன் தமது அருளாணை தோன்றுமாறு சுவாமிகள் அருளியதும், சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாத இன்பந்தருவதுமாகிய திருத்திகழும் நற்சிந்தனை ஒன்றுள்ளது. அது,

"ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே இந்த
உலகுயிர் பரமென ஒளிரும் மெய்ப்பொருளை
—ஒன்றெனக் கும்பிடுவாய்-

உண்டில்லை என்றெவரும் ஓதமுடி யாததாய்
பண்டும் இன்றும் என்றும் அப்படி உள்ளதாய்
—ஒன்றெனக் கும்பிடுவாய்.

நன்றுக்கும் தீதுக்கும் நடுவாய் உள்ளதாய்
ஞான யோக தியானத்தில் வருவதாய்
கன்றிய காமனைக் கண்ணால் எரித்ததாய்
கால காலனைக் காலால் உதைத்ததாய்
—ஒன்றெனக் கும்பிடுவாய்"

என ஒளிர்கின்றது. எம் சித்தத்தில் இது என்றென்றும் இடையறாது இடம் பெறுமேயானால் எல்லையில்லாப் பேரின்ப வாழ்வு எமக்குரியதாகும் என்பது சொல்லாமலே யமையும்.

"திருவருட் கருணைபூத்த சிவநெறியதனைச் சார்ந்து
அருண்மழை பொழியுமாறும் அன்பினு லணையுமாறும்
மருளறக் காட்டியாண்ட மாசிலா ஞானமூர்த்தி
குருபரன் யோகசுவாமி குஞ்சிதபாதம் போற்றி"

முற்றும்.

"ஒரு பொல்லாப்புமில்லை"
"முழுதுமுண்மை"
"நாம் அறியோம்"
"எப்பவோ முடிந்த காரியம்"

உ

சிவமயம்

## இந்நூற்பொருளுக்கு எடுத்துக்காட்டப்பெற்ற நூல்கள்

1. சிவஞானபோதம்
2. சிவஞானபாடியம்
3. சிவஞானசித்தியார்
4. சிவப்பிரகாசம்
5. திருவருட்பயன்
6. உண்மை விளக்கம்.
7. உண்மைநெறிவிளக்கம்.
8. கொடிக்கவி
9. துகளறு போதம்
10. மூவர் தேவாரம்
11. திருவாசகம்
12. திருமந்திரம்
13. திருக்குறள்
14. தாயுமானசுவாமிபாடல்
15. பட்டினத்தடிகள் பாடல்
16. ஈசாவாஸ்யோபநிஷதம்
17. சாந்தோக்கியோபநிஷதம்
18. கடோபநிஷதம்
19. முண்டகோபநிஷதம்
20. கேனோபநிஷதம்
21. பிரம்மசூத்திரம்
22. இந்துசமயம்
    (சுவாமிவிவேகானந்தா ஆங்கிலம்)
23. கொலைமறுத்தல்
24. நாவலர் சைவவினாவிடை
25. திருவாதவூரடிகள் புராணம்
26. நற்சிந்தனை (யோகசுவாமிகள்)

# சிவதொண்டன் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | நற்சிந்தனை | 7-50 |
| 2. | ,, (திரட்டு) | 50 |
| 3. | சிவநெறிச்சிந்தனைக்கட்டுரைகள் | 1-00 |
| 4. | தியானகாலம் | 50 |

ஸ்ரீ லங்கா அச்சகம்
யாழ்ப்பாணம்